
# ஜீவநதி

## பெண்கள் சிறப்பு மலர்



கலை இலக்கிய இருதிங்கள் ஏடு
பங்குனி–சித்திரை 2008
50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஜீவநதி

நதி 01 கிளை - 05

பிரதம ஆசிரியர்கள் :
சின்னராஜா விமலன்
கலாமணி பரணீதரன்

நிருவாக ஆசிரியர்:
துரைராஜா இராஜவேல்

ஆலோசகர் குழு:
திரு. தெணியான்
திரு. குப்பிளான் ஐ. சண்முகலிங்கம்
திரு. கி. நடராஜா

தொடர்புகளுக்கு :
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
0776991015
Fax : 0212263206
E.mail : jeevanathy @yahoo.com

பதிப்புரிமை: கலை அகம் வெளியீடு

வங்கித் தொடர்புகள்:
K.Bharaneetharan & S.Vimalan
HNB - Nelliady Branch
A/CNo.118-00-02-0945701-1

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ஆசிரியர்கள்

## நதியினுள்ளே...

*கவிதைகள்*
ச. நிரஞ்சனி-------------------- 06
சாரங்கா தயானந்தன்--------- 20
தாட்சாயணி------------------ 27
கெகிறாவ ஸுலைஹா--------- 30
சுகிர்தராணி------------------ 38
பிறைநிலா-------------------- 40
மைத்திரேயி------------------ 49

*கட்டுரைகள்*
மனோன்மணி------------------ 03
அம்மன்கிளி முருகதாஸ்-------- 13
தங்கேஸ்வரி------------------ 18
நஞ்சி------------------------ 26
செல்வஅம்பிகை--------------- 28
ஜெயலக்ஷ்மி இராசநாயகம்------- 33
நஞ்சி------------------------ 39
சந்திரகாந்தா----------------- 41
சௌந்தரி--------------------- 48

*நேர்காணல்*
கலைவாணி இராமநாதன்------ 31

*சிறுகதைகள்*
கார்த்திகாயினி சுபேஸ்--------- 07
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்------ 21
ஆழியாள்--------------------- 36
கெகிறாவ ஸஹானா----------- 43

*கருத்துரைகள்*-------------------- 50

*கலை இலக்கிய நிகழ்வுகள்*---------- 52

*பேசும் இதயங்கள்*----------------- 55

*அட்டைப்படம்* : பாஸ்கர்
*உள்ஓவியங்கள்* : நன்றி ஊடறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

(கலை இலக்கிய இருதிங்கள் ஏடு)


அறிஞர் தம் இதய ஒடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
-பாரதிதாசன்-

## தமிழ்ச் சூழலும் பெண்ணியமும்

மார்ச் 8ஆம் நாள் அனைத்துலக மகளிர் தினம். பெண்கள் சகல உரிமைகளும் பெற்று சமத்துவத்துடன் சுதந்திரமாக வாழ்வதற்குரியவர்கள் என்பதைப் பிரகடனம் செய்யும் இந்நாளின் பதிவாக 'ஜீவநதி'யின் மார்ச்-ஏப்ரல் இதழை வெளிக்கொணர்ந்துள்ளோம். பெண்களின் ஆக்கங்களை மாத்திரம் தாங்கி இந்த இதழ் மலர்ந்துள்ளமையைக் கண்டு கொள்வீர்கள்.

'பெண் விடுதலை' பற்றிய புரிதல் தமிழ்ச்சூழலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பது சிந்திக்கப்படவேண்டிய ஒன்றாகும். மேலைத்தேயச் சூழலில் குடும்பம் என்ற அமைப்பு சிதைவுற்றுத் 'திருமணப் பந்தத்திலிருந்து விடுதலை, திருமண நிறுவனத்தில் நுழையாமல் இணைந்து வாழுதல், பாலியற் சுதந்திரம்' போன்றவை வாழ்வு முறையாகி வருவது இன்று அனைவரும் அறிந்ததே. ஆனால், உலகப் பெண்ணிய வாழ்க்கை முறைமையைத் தமிழ்ச் சூழல் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது என்பது இன்று எம்முன் உள்ள முக்கிய வினாவாகும்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் இவ்வையம் தழைக்குமாம்' என்று பாரதி கூறிய வாசகம் பற்றிய புரிதல் தமிழ்ச் சூழலில் இன்னமும் ஏற்பட்டுவிடவில்லை என்ற உண்மையைக்கூட ஏற்றுக்கொள்ளப் பலர் தயக்கம் காட்டுவது தெரிகிறது. ஆனால், பெண் ஒடுக்குமுறையும் பெண் அடிமைத்தனமும் மறைந்து விடவில்லை என்பதை எதிரொலிக்கும் குரல்களும் சாட்சியங்களும் இன்றும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அதேவேளை, தமிழ்ப் பெண்ணிய விடுதலையில் 'குடும்பம்' என்ற அலகின் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டியதும் எதிர்காலவியல் நோக்கில் எமது சிந்தனைகளை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டியதும் இன்றைய காலத்தின் தேவையாகும். இவ்வாறான ஆரோக்கியமான சிந்தனைகளுக்கு 'ஜீவநதி' களம் அமைத்துக் கொடுக்கும் என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

'ஜீவநதி'யின் அடுத்த இதழ் ஓராண்டு நிறைவுச் சிறப்பிதழாகும். இந்த ஆண்டு மலருக்கான ஆக்கங்களைக் கூடிய விரைவில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆசிரியர்கள்**



## ஈழத்துப் பெண் படைப்பாளிகள் : சில குறிப்புகள்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இன்று ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாற்றில் தடம் பதித்த பெண் படைப்பாளிகள் பற்றிய தேடல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. தமிழிலக்கிய வரலாறு என்னும் பேராற்றுடன் ஈழத்து இலக்கியவரலாறு எனும் சிற்றாறும் இப்போது சேர்ந்து பாயத்தொடங்கியுள்ளமையால் ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றிய தேடலும் தொடங்கியுள்ளது எனவே ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெண் படைப்பாளிகளைப்பற்றிய பதிவுமுயற்சியும் தேவை என்பதை உணர்த்துவதற்காகவே இச்சிறுகட்டுரை வரையப்பட்டுள்ளது.

செம்மொழியாம் தமிழ் மொழியை உலகறியச் செய்யும் முயற்சிகள் பல தற்போது முனைப்புப்பெற்றுள்ளன. தமிழிலக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட களங்களில் ஈழமும் ஒன்று ஈழத்துப்பூதந்தேவனார் தொடக்கம் இன்றுவரை இலக்கியமுயற்சிகள் தொடர்கின்றன. சிறப்பாக ஈழத்திலே கிறிஸ்தவ சமயப்பரம்பல் ஏற்பட்டபோது பெண்கல்வியில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சிநிலையும் இலக்கிய முயற்சிகளில் பெண்களும் ஈடுபட வாய்ப்பளித்தது. கவிதை நடையிலிருந்த இலக்கிய ஆக்கங்கள் வசனநடையிலும் ஆக்கப்பட்ட போது பெண்களும் இலக்கியம் படைக்கமுயன்றனர். இதுவரை பேச்சுமொழியிலே தொடர்பாடலை மேற்கொண்டிருந்த பெண்களுக்கு எழுத்துமொழியிலும் தொடர்பாடல் கொள்ளும் தகைமை ஏற்பட்டது. இதனால் வசன இலக்கிய ஆக்கத்தில் பெண்களின் பங்களிப்பும் ஏற்படலாயிற்று.

எழுத்து மொழியறிவு பெற்ற பெண்களை வாசகர்நிலைக்கு உயர்த்திப் புதியதொரு அறிவூட்டலைச் செய்யச் சில பெண்கள் முற்பட்டனர். அத்தகைய பெண்களை ஈழத்துப் பெண்படைப்பாளிகளின் முன்னோடிகளெனக் குறிப்பிடுவது தவறாகாது. பாடசாலைக்கல்வியும் ஆங்கிலமொழிப்பயிற்சியும் பெற்ற பெண்கள் இலக்கியங்களைக் கற்றது மட்டுமன்றித் தாங்களே புதிய இலக்கியங்களை ஆக்கவேண்டுமென விரும்பினர். இத்தகைய பின்னணியில் பெண்படைப்பாளிகளின் முன்னோடியாக மங்களநாயகம் தம்பையா தன்னுடைய நொறுங்குண்ட இருதயம் என்ற நாவலை எழுதியுள்ளார். அவர் வாழ்ந்த காலச் சூழல் அவரை வசனநடையில் ஒரு நாவலை எழுதத்தூண்டியது. நாவலினூடாகத் தேசமுன்னேற்றத்திற்கு பெண்களும் காரணர் என்ற கருத்தினை வெளிப்படுத்த அவர் எழுத்தைப் பயன்படுத்தினார். இதுமரபாக இருந்த பெண்களின் வாழ்வியல் மாற்றமடைய வேண்டும் என்பதே அவருடைய நாவலின் செய்தியாக தெளிவான வசன நடையிலே வெளிவந்தது. சென்னை கிறிஸ்தவ இலக்கியச்சங்க ஆதரவில் 1914ஆம் ஆண்டு இந்த நாவல் வெளியிடப்பட்டது. பெண்கல்வி முன்னேற்றம் வேண்டிப் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அது பெண்களை வீட்டுலகத்திலிருந்து வெளியுலகிற்கு அறிமுகமாக்கிற்று. மங்கள நாயகம் தம்பையாவே இதற்கு நல்ல சான்றாகவுள்ளார். 'அநுபவக்களஞ்சியம்' என்ற கட்டுரைத் தொகுப்பும் இவருடைய இலக்கியமுயற்சியை வெளிப்படுத்திக் காட்டுகிறது. இத்தகைய முயற்சியால் இவர் ஈழத்துப் பெண்படைப்பாளிகளின் வரிசையில் முன்னோடியாகப் பாராட்டப்படுகின்றார்.

மங்களநாயகம் தம்பையாவின் இலக்கிய முயற்சிகளின் பின்னர் ஏறக்குறையப் பத்து ஆண்டுகளின் பின்னர் செல்லம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொற்சோதீஸ்வரர் என்னும் பெண்மணி 'இராசதுரை' என்ற நாவலை எழுதி 1924 ஆம் ஆண்டு வெளியிட்டார். 'என்னுடைய சிற்றறிவிலுதித்த அநுபவத்தைக் கொண்டு நலமாக அந்த நாவலை எழுதினேன்' என்னும் அவருடைய கூற்று அவர் எழுத்துமுயற்சியைப் பற்றி விளக்குகிறது. முன்னோடியான மங்களநாயகம் தம்பையாவின் எழுத்துமரபைப் பின்பற்றித் தன்னை அவருடைய வழித்தோன்றலாக்கிக் கொண்டார். இவர்காலத்தை அடுத்து 1929 ஆம் ஆண்டு சு.இராசம்மாள் எழுதிய "சரஸ்வதி அல்லது காணாமற்போன பெண்மணி' என ஒரு நாவல் வெளிவந்துள்ளது. இன்று அதன் பிரதியைப் பார்வையிடுவதற்கில்லை.

அடுத்து மா.மங்களம்மாள் ஈழத்துப் பெண்படைப்பாளிகளில் தனித்துவமானவராகக் கருதப்படவேண்டியவர். 'தமிழ் மக்கள்' என்னும் பத்திரிகையை நடத்தியவர். அக்காலப் பெண்களின் உள்ளத்தைத் தூண்டும் கட்டுரைகளை எழுதியவர். இதனால் தூண்டப்பெற்ற பெண்கள் கல்விகற்றுப் பண்டிதைகளாகினர். அவர்கள் படைப்பிலக்கிய முயற்சிகளையும் மேற்கொண்டனர். பண்டிதை வேதநாயகி, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை ராஜேஸ்வரி, பண்டிதை பரமேஸ்வரி போன்றவர் குறிப்பிடத்தக்கவர்கள். சமயக்கட்டுரைகளை எழுதுவதில் இவர்கள் ஆர்வங்காட்டினர். சில கட்டுரைகள் அக்கால ஆங்கில நாகரிகமோகத்தைக் கண்டித்தும் எழுதப்பட்டன. பண்டிதை பரமேஸ்வரி இலக்கியத்துறையில் அதிக ஆர்வங்காட்டினார். நாமகள் புகழ்மாலைக்கு உரையெழுதினார். இதைவிடக் கதிரை முருகன் கலிப்பா போன்ற ஆக்கங்கள் இவரை ஈழத்துப் பெண்படைப்பாளிகளில் ஆற்றல் மிக்கவராக இனங்காட்டின.

தொடக்ககாலத்தில் வசனநடையில் மட்டும் இலக்கிய முயற்சியைப் பெண்படைப்பாளிகள் மேற்கொண்டனர். ஆனால் கல்விகற்கும் வாய்ப்பு ஏற்பட்ட போது செய்யுளிலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டனர். 'புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி' என்னும் நூலை இயற்றிய ந.பத்மாசனி அம்மாள் குறிப்பிடத்தக்கவர். இந்நூல் 1925 ஆண்டு வெளிவந்தது. செல்லம்மாள் உரைநடையிலே நாவல் எழுதி வெளியிட்ட காலத்தில் பத்மாசனி அம்மாள் பதிற்றுப்பத்தந்தாதியை வெளியிட்டுள்ளார். இவருடைய உறவினரான பார்வதி தென்னகத்துக்கல்விமான்களோடு உரையாடி அவர்களுடைய ஐயத்தைத்தீர்க்கும் அறிவாற்றல் படைத்தவராய் விளங்கியுள்ளார். பத்மாசனி அம்மாள் இவரிடம் சமஸ்கிருதமும் தமிழும் கற்றவர். மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதரானவர். எனவே இக்காலகட்டத்தில் குருகுலக்கல்விமுறையிலே பயின்றவர்களும் தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட்டதை உணரமுடிகின்றது. கிறிஸ்தவப் பெண்கள் 'நாவல்' என்ற இலக்கியவடிவத்தின் மூலம் தமது புலமைத் திறனை வெளிப்படுத்த சைவசமயப் பெண்கள் செய்யுள் வடிவத்திலே இலக்கியம் செய்தனர். இங்கு கல்வியின் தரத்திற்கேற்ப இலக்கிய முயற்சி நடைபெற்றதை அறியமுடிகிறது. ஈழத்துப் பெண்படைப்பாளிகளின் இலக்கிய ஆக்கம் 1960 லிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கியது. சிறுகதை. நாவல் என்னும் இருதுறையிலும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பினைப் பெண் படைப்பாளிகள் நல்கியுள்ளனர். ந.பாலேஸ்வரி, அன்னலட்சுமி இராசதுரை போன்றவர்களின் பங்களிப்புக்குறிப்பிடத்தக்கது. பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு இவர்களை எழுத்துப்பணியில் ஊக்குவித்தது. சுதந்திரன், வீரகேசரி, தினகரன், கலைச்செல்வி, அமுதம், ஈழச்சுடர், கல்கி, உமா, பூந்தொட்டி போன்ற உள்ளூர் வெளியூர் பத்திரிகைகளில் இவர்களுடைய படைப்புகளை வெளியிட்டன. அன்னலட்சுமி ராசதரை 'யாழ்நங்கை' என்னும்



புனைபெயருடன் வீரகேசரியில் பணி செய்து கொண்டு எழுதினார். பாலேஸ்வரி ஆசிரியையாகப் பணியாற்றி எழுத்துப்பணியையும் செய்தார். எனவே பெண் எழுத்தாளர்களுக்கு அவர்களுடைய எழுத்துப் பணிக்குத்துணையாக ஒரு தொழிலும் இருந்தமையால் அதனைத் தொடர்ந்து செய்ய முடிந்ததெனலாம்.

இந்த வரிசையில் பவானி, சாந்தினி, குறமகள், புதுமைப்பிரியை குந்தவை, பாலாம்பிகை நடராசா போன்றவர்களும் சிறுகதைகளை எழுதி ஈழத்துச் சிறுகதைக்குத் தம்மாலான பங்களிப்பைச் செய்தனர். ஈழத்துப் பின்புலத்தை இவர்களது சிறுகதைகள் களமாகக் கொண்டிருந்தன. தமிழ்நாட்டுக் கதைக்களங்களையே சிறுகதைகளில் பார்த்த வாசகர்களுக்கு இவர்களுடைய கதைகள் ஒரு பிரதேசப்பற்றை ஏற்படுத்துவதாக இருந்தன. இதனால் வாசகர்களிடையேயும் ஈழத்து இலக்கியம் பற்றிய கருத்துத் தோன்றலாயிற்று. கோகிலம் சுப்பையா இந்தவகையில் 'தூரத்துப்பச்சை' என்ற நாவலை எழுதி 1964ஆம் ஆண்டு வெளியிட்டார். மலைநாட்டுச் சூழலை அந்த நாவல் கதைக்களமாகக் கொண்டது. பிரதேசப் பண்பாட்டம்சங்களைப் பதிவு செய்யும் எண்ணத்துடன் இந்நாவல் எழுதப்பட்டது. தனது பிரதேசத்தை ஒரு பெண் எப்படி நோக்குகிறாள் என்பதற்கு இந்தநாவல் விடைகூறுவதாக அமைந்துள்ளது.

1960க்குப்பின்னர் ஈழத்தில் ஆக்க இலக்கியத்தில் ஏற்பட்ட முன்னேற்றமான வளர்ச்சிக்குப் பெண்படைப்பாளிகளும் உதவியுள்ளனர். தமிழ் மொழியில் எழுதுவதுடன் நின்று விடாமல் பிறமொழியில் உள்ளவற்றையும் எமது வாசகருக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் சரோஜினி அருணாசலம் 'இணைபிரியாத தோழர்' என்ற நாவலைச் சிங்கள மொழியிலிருந்து மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். இந்த நாவல் 1973ஆம் ஆண்டு வெளிவந்தது. இம்முயற்சியில் பெண்படைப்பாளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இவரைக் குறிப்பிடலாம்.

பெண்களின் இலக்கிய முயற்சிகள் பற்றிய தேடலை இளந்தலைமுறை மேற்கொள்ள வேண்டும் என்பதே இச்சிறு எழுத்துருவின் இலக்காகும். இழத்து இலக்கிய முயற்சிகளை மீளாய்வு செய்யும் பெரும்பணியில் பெண் படைப்பாளிகளின் பங்களிப்பைப் பற்றியும் தேடல்கள் தேவை. யாழ் இலக்கியவட்டம் இம்முயற்சியில் மரபான நிலையை மாற்றிப் புதியதொருமரபை. உருவாக்கலாம். பெண்படைப்பாளிகளின் பங்களிப்பைபற்றிய விரிவான செய்திகளைத் தேடித் தொகுத்து எதிர்காலத்தலைமுறைக்கு அவர்கள் பணியை அறிமுகம் செய்யலாம். ஜீவநதி போன்ற சஞ்சிகைகளை அதற்குரியகளமாகவும் பயன்படுத்தலாம். இது ஈழத்து இலக்கியவரலாற்றை விரிவாக எழுதுவதற்கும் பயன்படும்.

■ ■ ■

## இலங்கை இலக்கியப்பேரவை விருது 2006 - 2007

2006, 2007ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதை, கவிதை, காவியம், நாடகம், சிறுவர் இலக்கியம், பல்துறை, சமயம் சார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. தேர்வுக்கான நூலின் ஒரு பிரதியை சி.சிவதாசன், செயலாளர் இலங்கை இலக்கியப்பேரவை, இல. 58 கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ நேரிலோ சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நாவேந்தன் விருதுக்காக சிறுகதை நூலின் பிரதி அனுப்பியோர் மீண்டும் அனுப்பத்தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியாவது...!



இனியவளே, நீ
மௌன அஸ்தமிப்பில்
புது உதயம்
தேடுதலையும்,
கனவுகளின் விளிம்பில்
கண்ணீர்
நனைத்திடாமற்,
கவனமாய் நகர்ந்த உன்
நகர்தலையும்
கண்டும் காணாததாய்
பயணிக்கிறது புது உலகம்!
நீயோ,
மலர்களின் மலர்விலும்,
உதிர்விலும்
அர்த்தங்கள் சிருஷ்டித்து,
அந்தரத்தில் மிதந்து
சுற்றுலகை வெறித்தபடி
ஆழ்தவமியற்றுகிறாய்!
கரைபுரளும் அலையாய்
நிலைபிறழ் உலகின்
மடியதனில்
மென்மையாய் புதுமகவாய்த்
துயின்றிடத்தான்
ஏங்குகிறாய்!
நியாயமானதுதான்
உனதினது ஏக்கங்கள்!
இப்படி... இப்படியே
காலம் கரைதலை விடவும்
நீ... மழலையாய்
முகிழ்த்தபடியேயிருந்திருந்தது
கனவுலகில் மட்டுமே
சஞ்சரித்தால்
வேறெதற்காயோ,
எவர்க்காயோ
உனதாசையெலாமொதுக்கிப்பின்
விகசித்து
அந்தரிக்கும் தேவையென்ன?
களங்கமற்றவளே,
நான் என்னதான்
சொல்வதிங்கு?
இப்படித்தான்
அன்றுதொட்டின்றுவரை
தொடர்ந்தபடி
எம்மவரின் கண்ணீர்ப்பயணங்கள்
விதியின் கரங்களில்
பொம்மைகளாய்
பணிகள்
ஆராயப்பட்டும்,
விலைபேசப்பட்டும்,
சந்தேகப் பார்வைகளால்
திணறடிக்கப்பட்டும்,
குற்றங்கள்
அலசப்பட்டும்
எவரெவர்க்காயோ!
அத்தியாயமாய்
புரட்டப்படுகின்றது!
அன்பதன்
தார்ப்பரியங்கள்
எவராலும்
உணரப்படாமலே
கனவுகள் கலைகிறது!
காலமது கடக்கிறது!
பயணிப்பின் வழியில்
பாதங்கள் சளைக்கிறது!
இனிவரும்
புலரியதிலாவது
இன்னிசை மலர்வொன்று
முகிழ்க்கிறதா?
பார்ப்போம்!

ச. நிரஞ்சனி



# உதயம்

**கார்த்திகாயினி சுபேஸ்**

குழந்தைகளின் ஆரவாரத்தால் கலகலத்துக் கொண்டிருந்தது வீடு.

அங்கும் இங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்தியா.

'இன்று எனக்கும் ஒரு குழந்தையிருந்திருந்தால் இவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்குமல்லவா...?' என்ற நினைவு நெஞ்சை இறுக்க கண்களில் நீர் முட்டி நின்றது.

மிகவும் பிரயத்தனப்பட்டு கண்களில் நிறைந்த நீரை வெளியில் சிந்தவிடாது கண்களுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

இது அவளுக்குப் பழகிப் போய்விட்ட ஒரு செயல்.

தனக்குக் குழந்தையில்லையே என்ற கவலையை முகத்திலும் செயலிலும் காட்டிக் கொள்ளாமல் இதயத்தின் ஓர் அறையில் போட்டு மூடிவிட்டு எந்தநேரமும் கலகலப்பாய் இருப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருப்பவளுக்கு கண்ணீரை அடக்குவதும் கைவந்தகலை இல்லையில்லை கண் தந்த கலையாகிவிட்டதில் வியப்பேதும் இல்லையே!.

'அவளுக்குப் பிள்ளை இல்லையெண்டகவலை கொஞ்சமும் இருக்கிற மாதிரித் தெரியவில்லை' என்று சித்தி ராஜம் சொல்லும் போது மெலிதாகச் சிரித்து விட்டுச் செல்வாள் நித்தியா. குழந்தைக்காக ஏங்கும் இவளின் ஏக்கத்தை கூடவே இருக்கும் கணவன் பார்த்திபன் மட்டுமே அறிவான்.

நேற்று நடந்த மாமாவின் மகனின் திருமண வீட்டிற்கு கணவன் பாாத்திபனுடன் வந்த நித்தியாவை 'நின்று நாளைக்குப் போகலாமே' என கட்டாயப்படுத்தி மறித்துவிட்ட மாமியின் சொல்லை மீறமுடியாமல் போய்விட்டது அவளால்.

இவர்களோடு இன்னும் சில உறவினர்களும் நின்றார்கள். அவர்களின் குழந்தைகள் அந்த மாலை நேரத்தில் முற்றத்தில் போடப்பட்டிருந்த மணப் பந்தலினுள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் விளையாட்டை அங்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்த கதிரை ஒன்றில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் நித்தியா.



நித்தி... இந்தா இவளக் கொஞ்சம்பிடி... அவர் தேத்தண்ணி கேட்டவர் போட்டுக்குடுப்பம் எண்டால் விடுறாளில்லை' என்றவாறு குழந்தையை நீட்டினாள் வேணி.

குழந்தையை வாங்கி மடியிலிருத்தினாள் நித்தியா தலையை நிமிர்த்தி இவளைப் பார்த்த குழந்தை கண்ணைச் சிமிட்டிச் சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்தி உனக்கும் தேத்தண்ணி போடவே'

'இல்ல வேண்டாமக்கா'

'பார்த்திபன் குடிப்பாரோ...'

'அவர் இஞ்ச இல்ல கடைக்குப்போட்டார்'

'அப்பசரி.. நீ கொஞ்சநேரம் இவளைப் பார்த்துக் கொள் நான் 'டக்' கெண்டு வந்திடுறன்.'என்று சொல்லி விட்டு வேணி போனதும் குழந்தையிடம் பார்வையைத் திருப்பினாள் நித்தியா. குழந்தை மீண்டும் அவளைப் பார்த்துச் சிரித்தது. 'என்னடா... எங்கட சாருக்குட்டி பாப்பா குடிச் சிட்டுதா....' என குழந்தையிடம் கதை கேட்க அது அவளது வாயில் தனது கையை வைத்துச் சிரித்தது.

மெத்தென்ற குழந்தையின் பிஞ்சுக்கையைப் பிடித்துத் தன் கன்னத்தில் வைத்து அக் குழந்தையின் அழகை ரசித்தபடி சிந்தையில் ஆழ்ந்தாள் நித்தியா.

நித்தியாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால் இப்பொழுதெல்லாம் குழந்தைகளை தூக்கி வைத்திருப்பதை அவள் தவிர்த்து விடுகிறாள். அதற்கு காரணமும் இருக்கிறது.

குழந்தையை வைத்திருக்கும் போதுதெரியாதவர்கள் என்றால் 'உங்கள் குழந்தையா' எனக் கேட்பார்கள் 'இல்லை' என்று பதில் சொன்னால் 'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்' என அடுத்த கேள்வியைக் கேட்பார்கள்.

தெரிந்தவர்கள் என்றால் 'உன்ர பிள்ளையை வைச்சுக் கொஞ்ச வேண்டிய நேரத்தில ஆற்றையன் பிள்ளையளை வச்சு கொஞ்சிக் கொண்டிருக்கிறாய்' ஆசைக்கு ஒரு பிள்ளையை எண்டாலும் பெத்துப்போடு..' என்பார்கள்.

இவ்வாறான தேவையற்ற மனதுக்குப் பிடிக்காத பேச்சுக்களைத் தவிர்ப்பதற்காகவே அவள் குழந்தைகளை தூக்குவதைக் குறைத்துக் கொண்டாள்.

இந்தமாதிரி தேவையற்ற மனக்கசப்புக்களை தவிர்ப்பதற்காகவே அவள் எந்த நல்லது கெட்டதுக்கும் போவதைத் தவிர்த்தாள். ஆனால் இத்திருமண நிகழ்வுக்கு வரவேண்டிய கட்டாயம் வந்துவிட்டாள். எது நடக்கக் கூடாது என அவள் நினைத்தாளோ அதுவும் நடந்து விட்டது.

நேற்றும் இக்குழந்தையைத் தான் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள் நித்தியா.. அப்போது அருகில் இருந்த ஒரு பெண்மணி

'இது உங்கட பிள்ளையா...? என்னபெயர் என்றாள்

'சாருஷா.. அக்காவின் மகள்'

'உங்களுக்கு எத்தினை பிள்ளையள்..?'

'... பிள்ளைகள்... இல்லை..'

'கலியாணம் முடிச்சு கனகாலமோ...?'

'ஐஞ்சு வருஷமாகுது...'

'ஏன் வைத்தியம் ஏதும் செய்யேல்லையே..'

'செய்து கொண்டு தான் இருக்கிறம்'

அதற்கு மேல் அங்கிருக்க மனமில்லாமல் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள்ளே சென்று விட்டாள் நித்தியா.

சிலர் பார்க்கும் பார்வையே இவளுக்கு இன்னும் பிள்ளை இல்லையா என்பதைப்போல் ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். அந்தப் பார்வைகள் பேச்சுக்களில் இருந்து தப்புவதே பெரும் பாடாய் இருந்தது அவளுக்கு. எப்போது வீட்டுக்குப் போவோம் எனக் காத்திருந்தவள் பார்த்திபன் வருவதைக் கண்டவுடன்.

'ஏனப்பாஇவ்வளவு நேரமும் நிண்டனிங்கள் ஆறுமணியாகபோகிது வாருங்கோவன் வீட்டுக்குப் போவம்' என ஆவலோடு கேட்டாள். அவன் பதில் சொல்வதற்கு முன்..

'என்ன அவசரம் ஆறுதலாப் போகலாம் தானே? பிள்ளையா குட்டியா,' என்றாள் அயல்வீட்டுக்காரி ஒருத்தி. தீயைத் தொட்டதுபோல சட்டெனத் திரும்பி நித்தியாவைப் பார்த்தான் பார்த்திபன்.



கைகளைப் பிசைந்தபடி நிமிர்ந்தால் கண்ணை நிறைத்து இருக்கும் நீர் வெளிவந்துவிடுமோ என்ற பயத்தில் தலையைக் குனிந்தபடி நின்றாள் நித்தியா. மெல்லிதாக நடுங்கிக் கொண்டிருக்கும் அவளது கைகள் கோபத்தைக் கட்டுப்படுத்த பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தன.

அவளைப் பார்க்க பார்த்திபனுக்கு பாவமாக இருந்தது.

'சீ... எனக்கே இப்படி இருக்கிறது என்றால் பாவம் அவளுக்கு. இந்தச் சனங்களுக்கு வேறவேலை இல்லை. ச்சா..' மனதுள் புழுங்கினான் பார்த்திபன்.

ஏன் பிள்ளை, நீ கலியாணம் கட்டி ஐஞ்சாறு வரியம் இருக்குமே... கூனோ.. குருடோ.. பிள்ளை ஒண்டப் பெத்தால் தான் நாலுசனம் மதிக்கும்.. இல்லாட்டி மலடி எண்ட...' ஐயோ...! கொஞ்சம் நிப்பாட்டுறீங்களா...?' அடக்கி வைத்த ஆதங்கம், ஆத்திரம் எல்லாவற்றையும் சேர்த்து கொட்டிய நித்தியாவின் வார்த்தைகளால் நிஷப்தமானது வீடு. 'பிள்ளையில்லை எண்டால் இந்த உலகத்தில சந்தோஷமா வாழவே முடியாதா.. பிள்ளையளப் பெத்தவை எல்லாரும் ஏதோ சந்தோஷமா இருக்கினம் எண்டமாதிரி கதைக்கிறீங்கள்... பிள்ளையளப் பெத்தால் ஏதோ ஒருவகையில் அதுகளால கஸ்ரப் பட்டுத்தான் ஆகவேண்டும். ஏன் நீங்கள் சந்தோஷமா இருக்கிறியளோ.. 'நான் பத்துப்பிள்ளையளப் பெத்தன் ஒண்டு கூட என்னைத் திரும்பிப் பாக்கிறதில்லை' எண்டு ஊர் முழுக்கப் புலம்பிக் கொண்டு இருக்கிறீங்கள்.. இண்டைக்கு உங்கட பேத்திக்கு நடந்தது என்ன? ஒரே ஒரு பொம்பிளப்பிள்ளை எண்டு கண்ணுக்குள்ள வச்சு வளர்த்த உங்கடமகள், அவளுக்கு என்ன நடந்தது? காதலிச்சவன் ஏமாத்திப் போட்டான் எண்ட கவலையில விசராக்கி இன்னும் சுகமாக முடியாமல் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்து வாழ்ந்து கொண்டி ருக்கிற உங்கட மகளின்ர நிலை உங்களுக்கு தெரியாதா? சரஸ்வதி அக்காவுக்கு பிறந்த ஊனமான பிள்ளையால அவவுக்கு எவ்வளவு கவலை. தனக்குப்பிறகு ஆர் அந்தப் பிள்ளையைப் பாப்பினம் எண்டு எல்லாரிட்டையும் சொல்லி கவலைப் படுறது தெரியாதே' சுனாமி வந்த நேரம் பெத்தபிள்ளையள் செத்துப் போக தாய்மார் விட்ட கண்ணீர் உங்களுக்கு தெரியாதே? எல்லாம் தெரிஞ்சு கொண்டும் நீங்கள் இப்படிக் கதைக்கலாமே இவையள விட ஒருவகையில் நான் குடுத்து வைச்சவள் மூச்சு வாங்கப் பேசினாள் நித்தியா.

'நித்தியா சரி, சரி, விடும். வாரும் போவம்..'

'பார்த்திபன் சூழ்நிலை புரிந்து அவளைக் கூப்பிட்டான்'

'இந்த கலியாண வீட்டில எத்தினை பேர் என்னட்ட இந்தக் கேள்வியைக் கேட்டவை எண்டு தெரியுமே.. உங்களுக்கு... இதுக்குத் தான் நான் ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை வாங்கோ போவம்..'

அத்தை மறித்ததையும் கேளாமல் பார்த்திபனோடு அவள் புறப்பட்டு விட்டாள்.

வீட்டுக்குப் போனதும் கட்டிலில் விழுந்து அடக்கிவைத்த கண்ணீரைக் கொட்டித் தீர்த்தாள் நித்தியா.

பார்த்திபனுக்கு அவளைப் பார்க்க பாவமாகவும் வேதனையாகவும் இருந்தது.

'இப்ப ஆறுதல் படுத்தப் போனால் இருக்கிறகோபத்தை எல்லாம் என்மேல் தான் காட்டுவாள்' என நினைத்தபடி மௌனமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரையில் சாய்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். குலுங்கிக் குலுங்கி அழுதவளின் உடல் மெல்ல மெல்ல வழமைக்கு வந்தது. அழுதகளைப்புத் தீர அவள் அப்படியே படுத்திருந்தாள்.

மியாவ்... மியாவ் மியாவ்..

பூனை கத்தும் சத்தம் கேட்டு சட்டென எழுந்தாள் நித்தியா என்னப்பா.. பூனை குட்டி போட்டுட்டுது போல' அவளின் முகத்தில் ஓர் மலர்ச்சி.

கலியாண வீட்டுக்குப் புறப்படும் போதே பூனை நிறைமாத வயிற்றோடு படுப்பதற்கும் நடப்பதற்கும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. பூனையைப் பார்த்த நித்தியா நாம் இல்லாத நேரம் குட்டி போட கஸ்ரப்படுமே என நினைத்து.. ஒரு பெட்டியில் பழைய துணிகள் சிலவற்றைப் போட்டு பூனையைத் தூக்கி அதற்குள் விட்டு பக்கத்தில் சாப்பாடும் வைத்து விட்டுத்தான் சென்றாள். ஆனால் தன் கவலையில் பூனைபற்றிய நினைவை மறந்திருந்தவள் பூனையின் சத்தம் கேட்டதும் ஓடிச் சென்று அந்தப் பெட்டியைப் பார்த்தாள். நான்கு அழகான குட்டிகளுடன் பூனை படுத்திருந்தது. அப்படியே பெட்டிக்கு அருகிலேயே அமர்ந்தாள். பின்னர் வந்த பார்த்திபனும் அவளுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டு பெட்டிக்குள் இருந்த பூனையையும் குட்டிகளையும் பார்த்தான்.

நான்கு குட்டிகளையும் நித்தியா மெல்லத் தடவிப்பார்த்தாள் பஞ்சு போன்ற அதன் உடல் மென்மையிலும் மென்மையாக இருந்தது. ரோஸ்நிறத்தில் அதன் மூக்கும் பிஞ்சுக் கால்களும் மெத்தென்று இருந்தன. கண்களை மூடியபடி தாயின் உடலுக்குள் சுருண்டு கிடந்த அவற்றை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

பூனையின் தலையைத் தடவியபடி ஏதோ யோசனையில் இருந்த நித்தியா...

'இந்தப் பூனை செய்த புண்ணியம் கூட நான் செய்யேல்ல போல...' என்றாள்.

பார்த்திபன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

'நித்தி... ஏன் இப்படிக் கதைக்கிறீர் பாரும் எங்களுக்கும் பிள்ளை பிறக்கும் கவலைப் படாதையும்'

'இல்லையப்பா.. இண்டைக்கு நான் கோபத்தில் என்னென்னெல்லாமோ பேசிப் போட்டன். அவையள் என்ன நினைச் சினமோ தெரியாது. உண்மையில எனக்கு அந்த நேரம் என்ன பேசுறன் ஏது பேசுறன் எண்டே தெரியேல்ல... கோவத்தில் ஏதேதோ பேசிப்போட்டன் நான் அப்பிடியெல்லாம் பேசியிருக்கக் கூடாது..ச்சா..'

'சரி.. சரி விடும்.. பேசினது பேசியாச்சு .. இனி அதைப் பற்றிக் கதைச்சு என்ன நடக்கப் போகுது.

'நான் உங்களத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு ஒற்றை காலில் நிக்கேக்க அம்மா சொன்னது இப்பவும் எனக்கு நினைவிருக்கு...'

'அப்பிடி என்ன சொன்னவா..? கேட்டான் பார்த்திபன்

'உன்ர விருப்பத்துக்குத் தான் கல்யாணம் கட்டுவன் எண்டு பிடிவாதம் பிடிச்சு எங்களக் கஸ்ரப்படுத்திறாய். நாளைக்கு உன்ர பிள்ளை இப்பிடி நடக்கேக்க தான் எங்கட வேதனை உனக்கு விளங்கும் எண்டவா. அந்த வார்த்தை பலிக்க எனக்கு பிள்ளையே இல்லாமல் போச்சு...' நித்தி இப்ப என்ன நடந்து போச்சு எண்டு இப்பிடிக் கதைக்கிறீர். டொக்டரிட்ட காட்டிக் கொண்டுதானே இருக்கிறம்.. அதெல்லாம் சரிவரும்.. இந்தக் காலத்தில பிள்ளை இல்லையே எண்டு கவலைப்படத் தேவையே இல்லை. அந்தளவுக்கு வைத்தியத் துறை வளர்ந்து விட்டது. ஆரும் என்னவும் சொல்லினம் எண்டு



அலட்டிக் கொள்ளாதையும்.. பாரும் இந்தப் பூனையை மாதிரி நீரும் நாலுபிள்ளைக்கு அம்மாவாகப் போறீர்' என்றான் புன்னகையுடன்.

'ஐயோ.. நாலு பிள்ளையா.. தாங்காதப்பா.. ஒண்டு ரெண்டு போதும்' எனச் சொல்லிச் சிரித்த நித்தியாவுடன் கூட அவனும் சேர்ந்து சிரித்தான்.

'நித்தி இந்த நாலு பூனைக் குட்டிகளையும் பார்க்க எனக்கு பாரதியார் பாட்டு ஒன்று நினைவில் வருகிறது...'

'என்னபாட்டு...'

*'வெள்ளை நிறத்திலொரு பூனை எங்கள்*
*வீட்டில் வளருது கண்டீர்*
*பிள்ளைகள் பெற்றதப் பூனை*
*அவை பேருக்கொரு நிறமாகும்.*
*சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்*
*சாந்து நிறமொரு குட்டி*
*பாம்பின் நிறமொரு குட்டி*
*வெள்ளைப்பாலின் நிறமொரு குட்டி...*

எனப்பாடிய பார்த்திபனை இடைமறித்த நித்தியா 'எனக்கு தெரியும் இந்தப்பாட்டு... மிச்சத்த நான் பாடுறன் கேளுங்கோ..' எனச் சொல்லி விட்டு பூனைக் குட்டி ஒன்றைத் தூக்கி அணைத்தபடி...

*"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்*
*அதில் மானிடர் வேற்றுமையில்லை*
*எண்ணங்கள் செய்கைகளெல்லாம் - இங்கு*
*யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்...'*

என்று பாடிய நித்தியாவை இடைமறித்த பார்த்திபன் 'சரி சரி.. நீர் வாத்தியாரிண்ட மனிசி எண்டத நிருபிச்சுப்போட்டீர். எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டின ஆரும் என்னவும் சொல்லினம் எண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக் காதையும்'

'இல்லையப்பா எனக்கு பிள்ளையில்லை எண்டது கூட கவலை இல்லை. எல்லாரும் இப்பிடிக் கதைக்கிறது தான் எரிச்சலாக் கிடக்கு...'

'சரி விடும்... ஏன் தேவை இல்லாத கதை கதைச்சுக் கொண்டு இருக்கிறீர். நாளைக்கு கிளினிக் போக வேணும் மறக்காமல் எல்லா றிப்போட்டையும் எடுத்து வையும். அங்க தேத்தண்ணி கூட குடிக்க விடாமல் கூட்டிக் கொண்டு வந்திட்டீர் வயிறெல்லாம் புகையிற மாதிரிக் கிடக்கு கொஞ்சம் தேத்தண்ணி போட்டு தாருமன்..' "கொஞ்சம் பொறுங்கோ.. முகம் கழுவிப்போட்டு வந்து போட்டுத் தாறன்" என்றபடி துவாயையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்ல நித்தியா புறப்பட்டபோது வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

வெளியே வந்த பார்த்திபனைத் தொடர்ந்து நித்தியாவும் வந்தாள். அங்கே மூர்த்தி நின்றிருந்தான்.

'அண்ணை.. எங்களுக்கு தென்னங் குத்தி தேவைப்படுது.. உங்கட அப்பாட்ட கேட்டனாங்கள். உங்க வீட்ட காய்க்காமல் சோடை பத்திப் போன ஒரு தென்னம்பிள்ளை நிக்குதாம் அதை தறிக்க சொன்னவர். நாளைக்கு காலம்பிற வந்து தறிச்சுக் கொண்டு போகவே.. அண்ணை...'

'வேண்டாம், வேண்டாம், அது காய்க்கும்.. நல்ல செழிப்பான தென்னை அநியாயமா ஏன் அதை தறிப்பான்..'

'இல்லை அண்ணை.. அதோட வைச்ச தென்னையளே காய்க்க வெளிக்கிட்டு ஆறேழு வருஷமாச்சு. இனியும் அது காய்க்காதண்ணை'

'காலம் சென்டாலும் அது காய்க்கும் எனக்கு அதை தறிக்க விருப்பம் இல்ல. அப்பாட்ட நான் சொல்லுறன்.. நீங்கள் வேற எங்கையேனும் விசாரிச்சுப் பாருங்கோ...' என காட்டமாகச் சொல்லி விட்டு வீட்டுக்குள் வந்தவனை புன் சிரிப்புடன் உற்றுப் பார்த்தபடி நின்றாள் நித்தியா.. அந்தப் பார்வை ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லியது.

கிளினிக் போய் வந்தாப் பிறகு நித்தியாவுக்கு மனதில் நம்பிக்கை பிறந்திருந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் எதிரொலி அவள் முகத்திலும் தெரிந்தது... 'உங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. நித்தியாவுக்கு உடம்பில சத்தில்ல. இந்த மருந்துகளை ஒழுங்கா குடிச்சிங்கள் எண்டால் ஒரு வருஷத்துக்குள்ள... பிள்ளையோட என்ர கிளினிக்குக்கு வருவீங்கள் பாருங்கோ...' என்று வைத்தியர் சொன்ன வார்த்தைகளே அவள் மனதை நிறைத்து விட்டது. அதனால் எப்படியும் தான் தாயாவேன் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

காலங்கள் ஓடின...

ஆறுமணி ஆச்சுதப்பா... வேலைக்குப் போற எண்ணம் இல்லையே எழும்புங்கோவன்.. நேரம் போகுது..' நித்தியாவின் அதட்டலோடு கண் விழித்த பார்த்திபன் துவாயையும் சரத்தையும் எடுத்தபடி கிணற்றடிக்குப்போனான்.

வீட்டு வேலைகளில் மும்முரமானாள் நித்தியா.

'நித்தீ... நித்தீ.. இஞ்ச ஓடிவாரும்..'

கிணத்தடியில இருந்து பார்த்திபன் கத்திய கத்தலில் என்னாச்சோ ஏதாச்சோ என கையிலிருந்த தும்புத்தடியையும் போட்டு விட்டு கிணற்றடிக்கு ஓடினாள் நித்தியா.

'என்னப்பா.. என்ன நடந்தது...' 'இஞ்ச வந்து பாருமன்' என அவள் கையைப்பிடித்து இழுத்து தன்னருகில் நிறுத்தி ஒருகையால் அவள் தோளை பிடித்தபடி மறுகையால் அந்த தென்னை மரத்தை காட்டினான் பார்த்திபன்.

இனி காய்க்காது எனச் சொல்லப்பட்ட தென்னையில் பாளை ஒன்று எட்டிப்பார்த்திருந்தது. அந்தப் பாளைக்குள் இருந்து தென்னம் பூ மெதுவாக எட்டிப்பார்த்தது.


காய்க்காத மரம் இனி பூத்துக் காய்க்கப் போகிறது.

'அண்டைக்கு இந்த மரத்தை வெட்ட விட்டிருந்தால்..'

அந்தப் பாளையையே பார்த்துக் கொண்டிருந்த நித்தியாவின் மனதில் என்னென்னவோ எண்ண ஓட்டங்கள்.

சாதனை ஒன்று நிகழ்ந்து விட்டதைப் போல இருவரும் சந்தோஷத்தில் திளைத்தனர். அந்த சந்தோஷம் அத்தென்னை மரத்தையும் தொற்றிக் கொண்டது போல அதுவும் தாய்மையின் பூரிப்பால் தன் ஓலைகளைச் சிலிர்த்தசைத்து சந்தோசத்தில் அங்கும் இங்கும் அசைந்தாடிக் கொண்டு இருந்தது. காற்றின் அசைவால் நாதம் எழுப்பிய தந்திக் கம்பிகளாய் அசைத்து கொண்டிருந்த கீற்றுக் களின் இடைவெளியில் கிழக்கில் உதயமான ஆதவன் கண்சிமிட்டிச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் ஒளியில் பாளையின் இடையே தெரிந்த பூக்கள் பொன் போல் தகதகத்துக் கொண்டிருந்தன.

□□□



## நூல் அறிமுகம்

*நூல்* :- குருகவி.ம.வே.மகாலிங்கசிவம் வரலாறும் ஆக்கங்களும்

*ஆசிரியா* :- பா.மகாகலிங்கசிவம்

*வெளியீடு* :- பட்டப்படிப்புகள் கல்லூரி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*விலை* :- 150/=



# பெண்களின் பாடல் ஆக்கத்திறனையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒப்பாரிப்பாடல்கள்

**கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்**

தமிழரிடையே வழங்கும் நாட்டார் பாடல்கள் மனித உணர்வுகளையும் உறவுகளையும் பண்பாட்டையும் துல்லியமாக வெளிப்படுத்துவன. எழுத்தறிவற்ற பாமர மக்களிடையே அவை அவர்களது சமூகபண்பாட்டுப் பொருளாதார உறவுகளை எடுத்துக்காட்டுவன. இந்தவகையில் தாலாட்டுப் பாடல்கள், சிறுவர்விளையாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், காதல் பாடல்கள், சடங்குப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என இவை காணப்படுகின்றன. இவற்றில் தாலாட்டும் ஒப்பாரியும் பெண்களின் ஆக்கத்திறனை வெளிப் படுத்துவன. தாலாட்டு குழந்தையின் வரவைப்பாட ஒப்பாரி மனிதனின் இறப்புக்காகப் பாடப்படுகிறது.

இந்த ஒப்பாரிப்பாடல்கள் ஒருவரது மரணத்தின் போது அச்சடங்கு நடைபெறும் தருணத்தில் பாடப்படுகின்றன. பெண்கள் பிரேதத்தின் பக்கத்தில் வட்டமாகக் கூடியிருந்து ஒப்பாரி வைப்பர். சாவீட்டுக்கு புதிதாய் வருகின்ற பெண் அந்தப் பெண்களுடன் சேர்ந்து ஒப்புக்கு ஒப்பாரி சொன்னபின் எழுந்து போய் ஓரிடத்தில் இருப்பாள். செத்த வீட்டுக்கு வருகின்ற பெண்கள் அனைவரும் அவ்வாறே அந்த வீட்டுப் பெண்ணுடன் சேர்ந்து ஒப்பாரி சொல்ல வேண்டும். அதன் பின்னர் எட்டுநாள் வரை அதிகாலையிலும் செக்கல் பொழுதிலும் ஒப்பாரி பாடப்பட்டு துயரம் வெளிப்படுத்தப் படும்.ஆயினும் ஒருவர் இறந்து நாளாயினும் அவரை நினைக்கும் போதும் துயரங்கள் ஏற்படும் போதும் பாடப்படுவதுண்டு .யாழ்ப்பாணக்கிராமங்களில் சில பெண்கள் துயரம் வரும் போதெல்லாம் ஒப்பாரிகளைப் பாடுவர். இந்த ஒப்பாரிகளைப் பாடுவோர் பெரும்பாலும் வயதான பெண்களே . சில இடங்களில் கூலிக்கும் ஒப்பாரி சொல்பவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது அது மறைந்து விட்டது.

பொதுவாக ஒப்பாரி சொல்லும் மரபே மாறி விட்டதெனலாம். யாழ்ப்பாணத்தில் உள்ரேர்க் கிராமங்களில் மட்டும் இவ்வழக்கம் குறைந்தளவில் காணப்படுகிறது. காரணம் தற்காலப்பெண்கள் ஒப்பாரி சொல்வதைக் கௌரவக் குறைவாகக் கருதுவதாகும் . படித்த பெண்கள் ஒப்பாரி சொல்வதை விரும்புவதில்லை. ஒப்பாரியை நினைவில் வைத்துச் சொல்வோர் மிகக் குறைவானவர்களாகவேயுள்ளனர். மேலும் சாதாரண காலங்களில் தேவையற்ற சந்தர்ப்பங்களில் ஒப்பாரியைச் சொல்வதென்பது இன்னொரு இறப்பு நேரிடுவதற்குக் காரணமாகலாம் என்ற நம்பிக்கையும் சில இடங்களில் உண்டு. தற்போது ஒப்பாரியின் இடத்தை சிவபுராணம் அல்லது அந்தந்த சமயப்பாடல்கள் பிடித்துக்கொண்டு விட்டன.

காலங்காலமாக எழுத்தறிவற்ற படிப்பு வாசனையற்ற பெண்கள் தமது உள்ளத்து உணர்வுகளை எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும் களமாக சாவீட்டினைப் பயன்படுத்துவதும் உண்டு என்கிறா். சிவலிங்கராஜா. அத்துடன் தமது உறவினரிடை நிலவும் பிரச்சினைகளையும் இப்பாடல் களினடியாக வெளிப்படுத்துவர்.

***"அழுவார் அழுவாரெல்லாம் தன்கரைச்சல் திருவன் பெண்டிலுக்காக அழ ஒருவருமில்லை"*** என்ற பழமொழி இதையே சுட்டி நிற்கிறது. அதாவது செத்த வீட்டில் அழுகின்ற அனைவரும் தத்தம் பிரச்சினைகளையே சொல்லி அழுதிருக்கின்றனர் என்பதை இது காட்டுகிறது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒப்பாரிகள் இறந்தவரின் உறவுமுறையின் அடிப்படையில் இறந்தவருடன் பேசும் ஒரு கூற்றாக அமைவதைக் காணலாம்.

என்னை ஆளவந்த ராசாவே -மனைவி
என்னப் பெத்த சீதேவியே- மகள்
என்ர மகளே- தாய்
என்ர மகனே- தாய்
என்ர பிறவியரே- சகோதரி
நான் பெறாமகனே- பெரியதாய் அல்லது சிறியதாய்

இவ்வாறு அழைத்து இப்பாடல்களை ஒரு ஓசை ஒழுங்குடன் பாடுவர் கேட்பவருக்கு இந்த ஓசை துக்கத்தைக் கொடுக்கும் .

**மனைவியின் ஒப்பாரி**

மனைவி கணவன் இறந்த போது பாடும் ஒப்பாரியானது அவளது கணவனது ஆளுமையையும் அவன் இறந்ததால் தான் அடையப்போகும் துயரத்தையும் வெளிக்காட்டும்.சடங்கு நிகழ்ச்சிகளைப்பார்த்து அவளது துயரம் வெளிப் படுவதை பின்வரும் பாடலில் காணலாம்.

*பயறு வறுத்தினமோ ஐயா என்ர ராசா*
*துரையே துரைவடிவே*
*உனக்கு வாய்க்கரிசி போட்டினமோ*
*உன்னை இழந்ததனால்*
*என்ர உதரமெல்லாம் பதறுதையோ (வழங்குமிடம் முல்லைத்தீவு)*

அத்துடன் கணவனை இழந்ததனால் பதறுவதைச் சொல்லுகிறாள்.
பின்வரும் பாடல்களில் பெண் கணவனை இழந்தால் சமூகம் அவளை மதிப்பதில்லை என்பதைக் காணமுடியும்.

*என்னை ஆளவந்த ராசாவே*
*தட்டிலே மைஇருக்க*
*தாய்கொடுத்த சீர்இருக்க*
*தாய் கொடுத்த சீரிழந்தேன்*
*தரும் தாலி தானிழந்தேன்*
*தனி இருந்து வேலையென்ன*
*புண்ணியரை முன்னை விட்டு*
*நான் பெண்ணிருந்து வேலையென்ன (வழங்குமிடம் மூதூர)*

*முத்துப்பதித்த முகம் என்ர ராசா*
*முழுநிலவாய் நின்ற முகம்*
*நினைப்பேன் திடுக்கிடுவென்*
*உன்ர நினைவு வந்த நேரமெல்லாம்*
*போகக்கால் ஏவினதோ*
*பொல்லாதாள் தன்னைவிட்டு*
*நாக்குப்படைச்சவையள்*
*இனி நாகரியம் பேசுவினம்*
*மூக்குப் படைச்சவையள்*
*இனி முழுவியளம் பேசுவினம் மூளி அலங்காரி*
*இவள் மூதேவி என்பினமே (வழங்குமிடம் கரவெட்டி யாழ்ப்பாணம்)*

இந்த இருபாடல்களிலும் பெண் தான் கணவனை இழந்ததனால் ஏற்பட்டதன் துயரத்தையும்சமூகம் தன்னை இழிவாக நோக்கும் என்பதையும் வெளிப்படுத்துவதைக் காணலாம். விதவை முழுவியளத்துக்கு ஆகாதவள் என்ற நம்பிக்கை தமிழரிடையே நிலவுகிறது. அந்தநம்பிக்கை இவ்விதவைப்



பெண்களின் உளவியலை எவ்வாறு பாதிக்கிறது என்பதையே அம்மனைவி ஒப்பாரியினூடாகச் சொல்லுகிறாள்.பாவஞ் செய்தவர்களே கணவனை விரைவில் இழக்கிறார்கள் என்றும் நம்பிக்கையுண்டு அதனால் தான் அவள் 'மூளிஅலங்காரி மூதேவி என்பினமே' என்று கூறுகின்றாள்.

**தந்தை இறந்தபோது பாடிய பாடல்**

இப்பாடல்கள் தந்தையின் வலிமையைக் காட்டுவனவாக அமைகின்றன.

*ஐயா நீ வாற வழியிலையோ*
*என்ர கண்ணுக்கு*
*வழிமறித்து நில்லனையா*
*நீமாண்ட இடத்திலையோ*
*மாமரமாய் நில்லனனை*
*வேலி அருகிலயோ நீ*
*வீரியமாய் நில்லனையா*

இப்பாடல்கள் கணவனுக்கும் பொருந்தக்கூடியவை. சந்தர்ப்பத்திற்கேற்ப மாற்றிப்பாடப்படுவதுமுண்டு.

**தாய் இறந்த போது பாடிய பாடல்**

*என்னப் பெத்த சீதேவியே*
*கப்பல் சுணங்கிவரும் அம்மா*
*நீங்கள் போட்ட கடிதம்*
*முன்ன வரும்*
*நான் கடிதத்தைக் கண்டவுடன்*
*கடிதத்தை உதறிவிட்டேன்*
*கண்ணீரை இறக்கிவிட்டேன்*
*தோணி சுணங்கிவரும்*
*நீங்கள் போட்ட சுருள்*
*ஓலை முன்ன வரும்*
*சுருள் ஓலை கண்டவுடன்*
*நான் சுறுக்காப் பயணமானேன். (வழங்குமிடம் மூதூர்)*

தாயிடமிருந்து தூரத்திலிருக்கும் மகள் தாய் இறந்த போது கடிதம் போட்டதையும் அச்செய்தி கிடைத்தபின்னரே கப்பல் வருவதையும்பற்றிக் கூறுகிறாள். முக்கியமாக மூதூர்ப்பகுதி போக்குவரத்து தோணி அல்லது வள்ளத்தின் மூலம் நடைபெறுவது வழக்கம். அப்பயணம் பற்றியே இதில் பேசப்படுகிறது.

**சிறுவயதில் இறந்து போன மகனைப்பார்த்து தாய் இவ்வாறு பாடுகிறாள்**
அவள் அவனைப்பற்றி முக்கியமாகஅவனது படிப்பைப்பற்றி வைத்திருந்த கனவுகளை இந்த ஒப்பாரி மூலமாக வெளிப்படுத்துகிறாள்.

*என்ர மகனே பத்துக் கட்டு பனையோல*
*நீ படிக்கும் சுருள் ஓல படிப்பாய் என்றிருந்தேன்*
*படித்து முடியுமுன்னே*
*பாலனுன்னை ஒப்படைத்தேன்*
*எட்டுக்கட்டு பனையோல எழுதும் சுருள் ஓல*
*எழுதிமுடிக்குமுன்னே எமனுக்கே ஒப்படைத்தேன்*

இப்பாடலும் யாழ்ப்பாணத்தில் பயிலப்படுகிறது. இதில் வருகின்ற 'படிப்பாய் என்றிருந்தேன் படித்து முடியு முன்ன பாலனுன்னை ஒப்படைத்தேன்' என்ற அடிகள் இதனைக்காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரி இறந்து போன போது அவளது தங்கை பாடுவதாக இந்த ஒப்பாரிப்பாடல் அமைகிறது.

*என்ர பிறவியரே அக்கா உன்னதேடிவருகினமே*
*உங்கட சின்னமுகம் காண்பதற்கு*
*அக்கா உன்ன நாடி வருகினமே*
*உங்கட நல்லமுகம் காண்பதற்கு என்ர பிறவியரே*
*நீங்க தெருவில கிடந்தாலும்*
*நான் உங்கள தேரிலே கூட்டி வர*
*அக்கா நாம் கூட்டில் இருந்தமம்மா*
*எங்கடை கூடு கலைஞ்சதக்கா*
*என்ர பிறவியரே அக்கா நீ போன வழியறியேன்*
*நீ போய்ப் புகுந்த காடறியேன் அக்கா*
*நான் ஆக்கிவைச்ச சோறு எல்லாம் பாசி வளருதக்கா*
*என்ர பிறவியரே நீங்க பாயில படுக்கயில்ல*
*பத்து நாள் செல்லயில்ல சிவனை வணங்கியல்லோ*
*நான் சிவபூசை செய்து வந்தேன் என்ர பிறவியரே*
*குருவை வணங்கியல்லோ நான் குருபூசை செய்துவந்தேன்*
*நான் குறிப்பெழுதப் போனடத்தை*
*அந்தக்குருடன் உன்ர கதை சொல்லயில்லை*

இவ்வாறான பாடல் யாழ்ப்பாணத்திலும் காணப்படுகின்றது. இந்த ஒப்பாரிப்பாடலில் சகோதரிகளுக் கிடையிலிருந்த அந்நியோன்னிய உறவும்அவள் தனது தமக்கையின் சுகநலனுக்காக சிவனிடம் வேண்டி வந்தமையும் கூறப்படுகிறது. சுகயீனமடைந்த சிலநாட்களிலேயே அவள் மரணமானதும் இப்பாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒருவர் சுகயீனமடைந்தால் அவரது பலனை அறிதற் பொருட்டு குறிப்புப் பார்க்கும் வழக்கம் தமிழரிடையே உண்டு. சோதிடர் தனது தமக்கை சாகப்போவதைக் கூறவில்லை என அவள் ஒப்பாரியில் குறிப்பது இதனை வெளிப்படுத்தும்.

சிறியதாய் தற்செயலாகக் கிணற்றில் விழுந்து இறந்த பெறாமகனைப் பார்த்து பின்வருமாறு பாடுகிறாள்.

*நான்பெறா மகனே*
*நான் உன்ர கண்ணில முளிக்கயில்ல*
*மகனார் நான் உனக்கு*
*ஒரு கைக்கடனோ செய்தனில்லை*
*மகனே நானுனக்கு தூக்கையில சாத்தையில*
*மகனார் நீபடும் பாடோ பார்க்கயில்ல*
*மகனார் நானுனக்கு அன்னப்பால் ஊட்டயில்ல*
*முத்து கிணற்றடிக்கோ*
*நீங்க முகங்கழுவப் போனடத்த*
*மகனே உனக்கு முத்தோ சறுக்கினது.*
*மகனே நீங்க தங்கக் கிணற்றடிக்கோ*
*மகனே நீங்க தண்ணி அள்ளப் போனடத்தை*
*தங்கம் சறுக்கினதோ*

இப்பாடலில் கிணற்றில் விழுந்து காயமடைந்த சிலநாட்களிலேயே இச்சிறுவன் இறந்துள்ளமையை ஊகிக்க முடிகிறது.

உண்மையில் பெண்களால் பாடப்படும் ஒப்பாரிப்பாடல்கள் அவ்வம் மக்களின் வரலாற்றுச் செய்திகளாய் அமைகின்றன. என்பதை மேலே குறிப்பிட்ட பாடல்கள் காட்டுகின்றன. ஏனைய நாட்டார் பாடல்கள் பெரும்பாலும்



நினைவில் வைத்து அப்படியே பாடப்படுபவை. அவற்றின் புத்தாக்கத்தில் பெருமளவு மாற்றம் வராது. ஆனால் ஒப்பாரியைப்பாடும் பெண்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப அந்த குறிப்பிட்ட மனிதனின் இறப்புப்பற்றிய செய்திகளையும் அதில் இணைத்துப் பாடுகின்றனர்.எனவே இந்த வகையில் இவை வரலாற்றுத் தகவல்களை அதிகம் கொண்டுள்ளன. அத்துடன் பெண்களின் கற்பனைத் திறனையும் கவித்திறனையும் இவை வெளிப்படுத்தும் இவ்வாறான ஒப்பாரி யொன்றை பேராசிரியர் சிவலிங்கராஜா எடுத்துக் காட்டுவார். அது வருமாறு யாழ்ப்பாணத்தில் ஒருகிராமத்திலே வாழ்ந்த வயோதிபக் கிறித்தவப்பெண் இறந்து விட்டார்.அவரின் உறவினர்கள் எல்லோரும் சைவ சமயத்தினர். கிறிஸ்தவர்கள் இறந்தால் அழும் வழக்கம் பெரும்பாலும் குறைவு.இறந்தவரைச்சுற்றி எல்லோரும் அழாமல் இருந்தார்கள் அப்போது அயற் கிராமத்தில் இருந்து வந்த இறந்தவரின் உறவுப்பெண் சைவ சமயத்தைச் சேர்ந்தவர். அம்மரண வீட்டிற்கு வந்து ஒப்பாரி வைத்து அழத்தொடங்கினார்.

*என்ரை ஆத்தை இவை வேத சமயமெணை*
*விரும்பி அழ மாட்டினமாம்*
*நாங்கள் சைவ சமயமணை*
*உன்னோட சருவி அழமாட்டினமாம்*
*ஊர்தேசம் விட்டாய் உறவுகளைத்தான் மறந்தாய்*
*மேபிள் துரைச்சியென்று இஞ்ச*
*மேட்டிமைகள் பேசுகினம்*
*ஊரும் அழவில்லையெணை*
*என்ரை ராசாத்தி*
*உறவும் அழவில்லையெணை*

ஆனால் இந்த வகையில் சாதாரண மனிதனின் வரலாற்றையும் கற்பனையையும் கொண்டு விளங்கும் இப்பாடல்கள் மறைந்து வருகின்றமை மிகவும் கவலைக்குரியதாகும். குறைந்தது நினைவில் வைத்திருப்பவர்களிட மிருந்தாவது இவற்றைச் சேகரித்தல் அவசியமான பணியாகும். □□□

**சிறுகதை எழுத்தாளரும் 'தினகரன்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான அமரர் ராஜ ஸ்ரீகாந்தன் அவர்களின் 4ஆவது நினைவுதின (20.04.2008) ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி**

*முதற்பரிசு - ரூபா 3000.00*
*இரண்டாம் பரிசு - ரூபா 2000.00*
*மூன்றாம் பரிசு - ரூபா 1000.00*

**போட்டி விதிகள்**

சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்

போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விபரங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடதுபக்க மூலையில் 'அமரர் ராஜ.ஸ்ரீகாந்தன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**போட்டி முடிவுத்திகதி : 30. 04. 2008**

**அனுப்ப வேண்டிய முகவரி :** ஆசிரியர்
'ஜீவநதி'
கலை அகம்
அல்வாய் வடமேற்கு
அல்வாய்

இப்போட்டிக்கான பரிசுகளை அமரரின் சகோதரர்கள் வழங்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியப்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

*க.தங்கேஸ்வரி*

பெண்கள் உரிமைபற்றியும் சமத்துவம் பற்றியும் பேசும் பெண்ணிலைவாதிகள், கிராமத்துப் பெண்கள் பற்றி அதிகம் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

கிழக்குமாகாணத்தில் கிராமத்துப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். ஆனால் அவர்கள் இதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமைவாதக்கோட்பாட்டினால் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு குடும்பத்தை, குடும்பப் பாரத்தைச் சுமக்கும் சுமை தாங்கிகளாகின்றனர்.

## பால் சமத்துவம் பற்றிய அறியாமை

தற்போது உலகெங்கும் பேசப்படும் பெண் உரிமை பற்றியோ பால் சமத்துவம் பற்றியோ இவர்கள் அறியார்கள். பெற்றோர் சொற்படி யாராவது ஓர் ஆணை (பெரும்பாலும் குடும்ப உறவினர்) கைப்பிடித்து குடும்ப வாழ்க்கையை மேற்கொள்கின்றமை இதில் பாலவிவாகம் (சிறுவயதில் திருமணம்) பெரிதும் இடம் பெறுகின்றது இதனால் பெண் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) சிறுவயதிலேயே அவர்கள் இரண்டு, மூன்று குழந்தைகளை பெற்று குடும்பச்சுமையைப் பெரிதாக்கிக் கொள்கின்றனர்.

2) இவளது கணவன் ஒரு இளம்வாலிபன். பெரும்பாலும் விவசாயத் தொழில் செய்பவன், இவனது ஒரே நோக்கம் இளம் மனைவியுடன பாலுறவு கொள்வது மட்டுமே.

3) இளம் தாயின் தேகசுகமும் குழந்தைகளின் தேகசுகமும் புறக்கணிக்கப்படுகின்றன.

4) குறைந்தவருமானம் காரணமாக குடும்பத்தில் பொருளாதார பிரச்சினைகள் தொடர்கதை ஆகிவிடுகின்றன. இப்பிரச்சினைகள், குடும்பச் சச்சரவுகளைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்து கணவன் மனைவியை விட்டு பிரிந்து செல்லும் நிலை ஏற்படுகின்றது.

5) பிரிந்து சென்ற கணவன் எங்காவது புதிய திருமணம் செய்து கொள்வான்.

6) கைவிடப்பட்ட மனைவி வாழ்நாள்முழுவதும் தனித்து விடுபட்ட குடும்பத்தைக் கொண்டு நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள்.

## படிப்பற்ற கணவனால் ஏற்படும் பிரச்சினைகள்

கிராமப்புறங்களில் படிப்பற்ற கணவனால் மனைவிக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஏராளம்.

1) குடும்பத்தலைவன் என்ற எண்ணத்தில் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வான் கணவன்

2) வருமானம் போதாமையால் குடும்பச்சண்டைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும். இவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்கு குடிக்கத் தொடங்குவான். நாளடைவில் குடிபோதைக்கு அடிமையாகி குடும்பப் பொறுப்புகளை மறந்துவிடுவான்.



3) அதனால், குடும்பச்சுமை முழுவதும் மனைவியின் மேலேயே இறங்கிவிடுகிறது.

4) இவை எதையுமே விளங்கிக் கொள்ளாத கணவன் நாள்தோறும் குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து நொறுக்குவதையும் சட்டிபானைகளை உடைப்பதையும் வாடிக்கையாக்கி கொள்வான்.

5) ஆனாலும் இரவில் இருவரும் உறவாகிவிடுவார்கள். அதனால், மேலும் மேலும் குழந்தைகள் பிறக்கின்றன.

## மனைவியின் பொறுமை

குடும்பத்தில் எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மனைவி கணவனை வெறுப்பதில்லை. நாளடைவில் அவனும் மனைவிக்கு ஒரு சுமையாகி விடுகிறான். இவ்வாறு பல வருடங்கள் கழிந்தபின் கணவன் நோயாளியாகி இறந்து விடுகிறான். ஈற்றில் மனைவி இளவயதில் விதவையாகி சொல்லொணாக் கஷ்டங்களுடன் விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிடுகிறாள். குழந்தைகளை வளர்த்து ஆளாக்கிவிடும் பொறுப்பு முழுவதும் அவள் தலையில் சுமத்தப்படுகிறது. கூலி வேலை செய்து பிழைப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழிகிடையாது.

## அகதிவாழ்க்கை

போர்ச்சூழல் காரணமான அகதிவாழ்க்கை அடிக்கடி பெண்களுக்கு ஏற்படுகிறது. சுனாமி அனர்த்தத்தின் போது வெள்ளப் பெருக்கின் போது இவ்வாறான இடம் பெயர்வும் மீள்குடியமர்வும் பலமுறை நடந்தன. இப்படியான சந்தர்ப்பங்களில் உடுத்ததுணியோடு புறப்படும் குடும்பங்களில் அதிகம். துன்பப்படுபவர்கள் பெண்களே. இவர்களே குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது. ஆண்களும் இடம் பெயர்கின்றனர். ஆனால் அகதி முகாம்களில் வசதிகள் இல்லாத சூழலில் பெண்களே எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அகதி முகாம்களில் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் இடம் பெறுகின்றன.

## இளம் விதவைகளின் வாழ்க்கைப்பிரச்சினைகள்

இப்பகுதிகளில் குடும்ப அங்கத்தவர் காணாமற்போவது ஒரு பொதுவான நிகழ்வு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இளம் வயதிலேயே கணவனை இழந்து விதவையாகும் பெண்களின் சோகக் கதைகள் மிகவும் பரிதாபகரமானது. கணவனை இழந்து வீடுவாசல்களை இழந்து சோகம் கப்பிய நிலையிலும் இவர்கள் பிள்ளைகளைப் பராமரித்து ஆளாக்கவேண்டிய பொறுப்பு இவர்களுடையதே.

இடம் பெயர்வின் போது இவர்கள் பாய்தலைகாணியுடன் பிள்ளைகளைக் கூட்டிச் செல்வதும் விதவையான பின் ஒருவேளை உணவுக்காக உடலைக்கசக்கி பிழிந்து விளைவித்த காய்கறிகளை சந்தைக்கு கொண்டுசென்று விற்பனை செய்து சில்லறைச் சாமான்களை வாங்கிவருவதும் அன்றாடம் நிகழும் சோகக் காட்சியாகும். இருண்டுவிட்ட எதிர்காலத்துடன் கடமைக்காக வாழும் இப்பெண்களின் சோகத்தை யார் அறிவார்? பெண்ணிலைவாதம் பேசுவோர் இவர்களுக்கு என்ன உதவிகளைச் செய்கின்றனர்? இவர்களை இயல்பு வாழ்வுக்கு மீளச் செய்வதற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

பெண்களின் உரிமைக்காகப் பாடுபடுவோர் இவ்வாறு வாழ்விழந்த பெண்களுக்கு வாழும் உரிமையை வசதியை மீட்டுக் கொடுப்பதும் பெண் உரிமையின் பாற்பட்டதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையில்லாப் பிரச்சினை**

கிராமப் புறங்களில் வறுமைகாரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவோர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேபோகிறது. கல்வியின் மகத்துவத்தை அறியாது தமதுபிள்ளைகளைப் பாடசாலைகளிலிருந்து இடைநிறுத்தி வயல்வேலைகளுக்கு அனுப்பும் பெற்றோர் இன்னமும் கிராமப் புறங்களில் இருக்கவே செய்கின்றனர்.

அதுமட்டுமல்ல. மிகவும் கஷ்டப்பட்டு க.பொ.த(சா/த,உ/த). பரீட்சை பாஸ் செய்த பெண்களும் வேலை எதுவும் கிடைக்காமல் பெரிதும் கஷ்டப் படுகின்றனர். நல்ல பெறுபேறுகளைப் பெற்ற பெண்கள் வேலைதேடி அங்கும் இங்கும் அலைகின்றனர். அவர்களுக்கு ஏற்றவேலைகளைத் தேடிக் கொடுப்பதும் ஒரு நல்லகாரியமாகும். இதற்கான ஒரு செயற்திட்டம் அவசியம்.

பெண் உரிமை, பால்சமத்துவம் என்பவற்றின் பேரால் கோடிக் கணக்கான பணத்தைச் செலவிடுவோர் இவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதையும் ஒரு கடமையாக கொள்ளலாம் அல்லவா?

இவ்வாறுவேலை தேடிக்கொண்ட பெண்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய பலத்தைப் பெற்றுவிடுவதால் ஆண்களின் தயவை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது அல்லவா? அதுவே பெண்விடுதலைக்கான யதார்த்த ரீதியான செயற்பாடாகவும் அமையும் அல்லவா. □□□

## எனது கனவில் சிரித்தவர்கள்

*காலமுள் கிழித்த*
*காயத்திலிருந்து வடிகிற*
*குருதியை வழித்து*
*கோபத்துடன்*
*மேகங்களில் வீசியெறிகிறது*
*செவ்வந்திச் சூரியன்*
*சாலையோரத்து உதிர்சருகு*
*தன்னை மிதித்த கால்களை*
*முறிப்பதாய்ப் பேசியபடியே*
*முறிகிறது துசுள்களாய்*
*"தெரியாதே மிதித்தேன்"*
*எனச் சத்தியமிட முடியாத ஒரு*
*நேர இடைவெளிக்குள்*
*என்னை*
*கொட்டி விட்டுச் சுருள்கிறது*
*சிறு எறும்பு*
*இவ்வாறாக இவைகள்*
*வாழ்ந்துவருகிற உலகில்*
*வாழ்ந்து வருகின்ற நான்*
*சகோதரனுக்கோ*
*துணைவருக்கோ*
*கொடுப்பினையில்லாதபடிக்கு*
*வீதிக்கிறங்கிய பொழுதொன்றில்*
*என்னுடலில் இச்சையுற்ற*
*ஒற்றை வார்த்தையை உமிழ்ந்தாய்*
*என்மீது*
*காறித் துப்பிய உமிழ்நீராய்*
*அந்த எச்சில்*
*பிறகாதுகள் ஏதாவதொன்றில்*
*விழுந்திருக்குமோவென*
*அலைகிற என் கண்களை*
*மேலும் தாழ்த்தி நடந்தேன்*
*உடல் நடுங்கிப் பதற*
*என் அதிஷ்ட வேளை*
*எவரும் கேட்டிருக்கவில்லை*
*எவரும் கேலிக்கவில்லை*
*எனினும்.....*
*இரவானது அமைதியுற்றதன் பிறகு*
*என் கனவில் வந்து*
*என்னைப் பார்த்துச் சிரித்தன*
*செவ்வந்திச் சூரியனும்*
*ஒரு சருகும்*
*சின்னதோர் எறும்பும்*
*தாங்க முடியவில்லை.*

*சாரங்கா தயாநந்தன்*
*(லண்டன்)*



# சீதனம் கொடுத்தால்...

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.**

'சமையல் எரிவாயுவின் விலை இப்படி ஏறினால் திரும்பவும் விறகடுப்புத்தான் பாவிக்கவேண்டும்'

அவித்த இடியப்பத்தை எடுக்குமுன்பே எரிவாயு அடுப்பைத் தணித்த சியாமளியின் சிந்தனை இப்படிச் சென்றது.

மின்னடுப்பிலிருந்த சொதி கொதிக்கவும் அதையும் நிறுத்திவிட்டு சொதியை இறக்கினாள்.

'விறகுகூட வரவர விலையேறுகிறது சிக்கன அடுப்புத்தான் சரி' ஒரு அடுப்பிற்கு விறகு வைத்து எரிக்க அதனுடன் இணைத்து உருவாக்கப் பட்ட அடுப்பிலும் சேர்த்து இரு அடுப்பு களில் சமைக்கக் கூடியதாக உருவாக்கப்பட்டது சிக்கன அடுப்பு.

பனங்காணியில் நின்ற புளியமரத்தை விற்றபோதுதான் விறகின் விலை அவளுக்குத் தெரிந்தது. அதனாலே தான் சிக்கன அடுப்பிடமும் நினைவு சென்றது.

உழுத்தம்பருப்பைக் கழுவிக்கொண்டு நின்ற சியாமளியை அவளுடைய தாய் கண்ணம்மா ஜன்னலூடாகக் கண்டிருக்க வேண்டும்.

'அந்த மரத்தை வித்துத் தான் சாப்பிடவேணுமெண்ட நிலையிலையோ இருக்கினம்?...'

சியாமளியிடம் நேரே வந்து கூறாமல் அவள் கேட்பதற்காக வென்றே கண்ணம்மா கதைத்த மிகுதி வாக்கியங்கள் அரையல் இயந்திரம் இயங்க ஆரம்பித்ததால் அதன் சத்தத்துள் அமிழ்ந்து போய்விட்டன..

'நேரே அழைத்துப் பேச முடியாத அளவிற்கு நான் அந்நியமாகிவிட்டேனா? கன்னிகா தானம் என்றதும் மகளைத் தானம் செய்துவிட்டதாக பெற்றோர் எண்ணுகிறார்களா?'

காதில்பட்ட வாக்கியம் மனதை நோகச்செய்ததுடன் புளியமரம் விற்ற நினைவையும் மீண்டும் கொண்டுவந்தது.

சியாமளிக்கே அதைத் தறித்தபோது கவலையாகவிருந்தது நினைவு தெரிந்த காலம்முதல் அதனுடன் அவளுக்கு உறவு அதன் கீழ் ஆடியோடி விளையாடி துளிர், பூ, பிஞ்சு, காய், பழம் என்று அதைச்சுவைபார்த்து வளர்ந்தவள்.

அவளைவிட அம்மாவுக்கு அதன்மேல் கூடிய ஈடுபாடு புளி வியாபாரம், அதன்கீழே சொரியும் இலை குப்பைகளைக் கூட்டி, எரு குப்பையுடன் சேர்த்து கூட்டெரு விற்பனை என்று கண்ணம்மா பணம் சம்பாதிக்க அது பேருதவி செய்து கொண்டிருந்தது.

இப்பொழுது சியாமளியின் கணவன் ஹரிஹரன் அதை விற்று விட்டான். அம்மாவுக்கும் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

'சீதனம் கொடுத்திட்டம், இனிக் கதைக்கேலாதுதான்... அரையல் இயந்திரம் நிறுத்தப் பட்டதும் கேட்ட வசனம் முடியு முன்பே யாரோ மோட்டார்சைக்கிளில் வரவும் கண்ணம்மா மௌனமாகி உள்ளே சென்றாள்.

இந்த எண்ணம் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் ஊறிவிட்டதா? காசு வாங்கிக் கொண்டா கொடுத்தார்கள்? இல்லையே பெற்ற பெண்ணுக்குக் கொடுத்தார்கள். அதில் அவர்களுக்கு உரிமை இல்லையா? அப்பாவும் அம்மாவும் இந்த எண்ணத்தின் காரணமாக ஒதுங்கிவிட்டார்களே.

வல்லிபுரமும் கண்ணம்மாவும் மருமகன் ஹரிஹரனுக்கு மிகுந்த மரியாதை கொடுத்தார்கள். இது என்ன சம்பிரதாயமோ? மகளையும் சொத்தையும் மருமகனுக்கு விற்கிறார்களா? என்ன? சொல்லப் போனால் சொத்தும் பணமும் கொடுப்பதால் மருமகனை வாங்குகிறார்கள். ஆனால் ஏன் இப்படி?

மருமகன், மறுமகனாம் ஆனால் ஹரிஹரன் அவருடைய பெற்றோரை உறவுகளாகவே கருதுவதில்லை. அதுமட்டுமா? உதாசீனமும் செய்கிறான்.

படிப்படியாக அவர்கள், வீட்டில் சுதந்திரமாக நடமாடுவதை தவிர்த்து ஓர் அறைக்குள் தம் வாழ்வைச் சுருக்கிக் கொண்டார்கள்.

வல்லிபுரமும் கண்ணம்மாவும் வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் தாங்களே மண்ணும் கல்லும் சுமந்து கட்டிய வீடு.

இராசாத்தி போல் மகள் வாழவேண்டுமென்று அதைச் சீதனமாகக் கொடுத்தார்கள். வந்த ஒருவனால் அந்த வீட்டில் அவர்கள் ஒதுக்கப்படுவ தென்றால் பெண்ணைப் பெற்ற பாவத்தினாலா?

இதனாலேதான் பாரத நாட்டிலே வீட்டை மகனுக்குக் கொடுத்துவிட்டு சுதந்திரமாக இருக்கிறார்கள் போலிருக்கிறது.

தோசைமாவைக் கரைத்து வைத்துவிட்டு, சியாமளி நீர்க் குழாயைத் திருகி பாத்திரங்களைக் கழுவத்தொடங்கினாள். குழாய் நீரைப் பார்த்ததும் முதன் முதலாக நீரிறைக்கும் மின்னியந்திரத்தை வீட்டில் பொருத்திய நாள் நினைவிற்கு வந்தது.

கண்ணம்மா முட்டையும் பாலும் விற்று, புளிவிற்று, கிடுகுவிற்று, ஆட்டுக்கடா விற்று சேர்த்த பணத்திலேதான் அதை வாங்கிப் பொருத்தினாள் அதில் அவளுக்கு ஒரு பெருமிதம் குழாயில் நீர் சொரிந்த போது குடும்பமே குதூகலித்தது.

கண்ணம்மா கிணற்றடியில் குளிக்கும் ஓசை கேட்கிறது. இப்பொழுது அவளோ வல்லிபுரமோ குழாய்நீரை பயன்படுத்துவதில்லை. அதுவும் ஹரிஹரனின் வார்த்தைப் பிரயோகத்தின் பயன்தான்.

அவர்கள்தான் பொருத்தம் பார்த்து விசாரித்துப் பார்த்து பலதும் பார்த்து அவனை சியாமளிக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

சியாமளியின் தந்தை வல்லிபுரம் ஒரு விவசாயி கண்ணம்மாவின் திறமையும் இருவரது ஓயாத உழைப்பும் அவர்களின் பொருளாதாரம் முன்னேறக் காரணமாய் இருந்தது.

சியாமளியும் அண்ணன் பிருந்தாபனும் குறை தெரியாமல் வளர்க்கப்பட்டார்கள். பெற்றோருடன் சேர்ந்து அவர்களும் பாடுபட்டு உழைத்ததும் முன்னேற்றத்துக்குக் காரணந்தான். இருவரும் படித்து பட்டதாரிஆகி ஆசிரியர்களானார்கள். ஹரிஹரன் ஒரு விரிவுரையாளர். சமூகத்தில் குறிப்பிடக்கூடிய நிலையிலிருந்தான், வீடு, காணி, பணம், என கைநிறைய சீதனம் கொடுத்து அவனை மருமகனாக்கினார்கள்.



மகளுக்கு சிறப்பான ஒரு வாழ்வு அமைந்து விட்டதாக அப்போது ஆனந்தித்தார்கள்.

பிருந்தாபனும் திருமணமானதும் தனது சீதனவீட்டிற்குச் சென்றுவிட்டான்.

வல்லிபுரமும் கண்ணம்மாவும் தங்களால் உழைக்க இயலும்வரை மகனிலோ மகளிலோ தங்கியிருக்க விரும்பவில்லை.



விவசாயம், கால்நடை வளர்ப்பு என்று தமது பழைய வாழ்வைத் தொடர்ந்தனர். அவர்களுடைய செயற்பாடுகள் தனக்கு மரியாதைக்குறைவாக இருப்பதாக ஹரிஹரன் கருதினான்.

'மார்ச் எட்டாந்திகதி சர்வதேச மகளிர் தினமாம் அன்றைக்கு ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றச் சொல்லி வந்து கேட்டிருக்கினம் மகளிர் தினம் தனியப்போறது சரியில்லை. நீரும் வாரும்.'

சமையலறை வாசலில் வந்துநின்ற ஹரிஹரன் கூறினான். "அதற்கென்ன வாறன்"

பதில் கூறிவிட்டு வேலையில் கவனமாகவிருந்த சியாமளி கணவன் வாசலிலேயே நிற்பதுபோலத் தோன்றவே திரும்பிப்பார்த்தாள்.

ஒருசிரிப்புடன் அவன் நின்று கொண்டிருந்தான். அந்தச்சிரிப்பு..?

"அம்மா சொல்லியதைக் கேட்டுவிட்டு ஏதாவது கொட்டப் போகிறாரோ? நெஞ்சின் ஆழத்துக்கு ஊடுருவி வலிக்கின்ற சில கணங்கள் உருண்டன. தவிப்போடு அவள் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பாசத்திலேயே வளர்த்தெடுத்த பெற்றோருக்கும் கணவனுக்கும் நடுவே எவரையும் சமாதானப்படுத்த முடியாது அவள் படும்பாடு!

இது என்ன வாழ்க்கை!

'பெண்களுக்கெதிராக ஏதேதோ வன்முறைகள் நடக்குதாமே அதை ஒழிக்கிறதைப் பற்றிப் பேசட்டுமாம். அப்படி என்ன வன்முறை நடக்குது?

ஹரிஹரனின் கேள்வியிலும் சற்றே பெரியாகியிருந்த அவனுடைய சிரிப்பிலிருந்த அதே கிண்டல் தொனித்தது.

'அப்பாடா இது வேறு விஷயம்'

அவனுடைய கேள்வியின் தாக்கத்தை உணராமல் எதிர்பார்த்த தாக்குதல் நடக்காததால் அவள் நிம்மதியடைந்து எதுவும் பதில் கூறாமல் தன் வேலையில் மும்முரமானாள். பதில் கூறினால் பிரச்சனைதான். பயனிருக்காது. அனுபவம் அவன் கூறுவதைச் சகிக்கப் பழக்கிவிட்டிருந்தது.

'எங்களைத்தான் இப்ப யாராவது காப்பாற்றவேணும் நாங்கள் தான் கூட்டம் நடத்தவேணும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சிரிப்புடன் ஹரிஹரன் திரும்பி நடந்தான்.

கூட்டம் ஆரம்பமாகும் நேரத்தில் ஹரிஹரனும் சியாமளியும் சென்றிறங்க ஆரவாரமான வரவேற்பு.

பெண்மையின் மேன்மை பற்றி, பெண்களுக்கு நடைபெறும் வன்முறைகள் பற்றி, சீதனக் கொடுமைபற்றி, பெண்களின் திறமை பற்றி மேடையிலிருந்தவர்கள் மாறி மாறிப் பொழிந்துதள்ள சியாமளிக்கு அலுப்புத்தட்டியது. அவள் கூட்டங்களுக்குப்போய் பேச்சுக்களைக் கேட்க ஆர்வங்காட்டிய காலம் முதல் கேட்டுக்கேட்டு இன்றுவரை கேட்கும் விடயங்கள்.

பேசியும் கேட்டும் பயன்...?

ஹரிஹரனின் சிரிப்பு நினைவிற்கு வருகிறது.

அவனைப் பேச அழைத்தனர். அவளைப் பார்த்து அதே சிரிப்பு உலகப்பெண்கள் அனைவரையும் பார்த்துச் சிரிப்பதாக ஒரு பிரமையோ?

வழமைபோல் பெண்ணின் பெருமை, திறமை என்று போய் அவன் பேச்சு சற்று திசைமாறியது.

'இத்தகைய பெண்கள் மேல் ஆண்கள் குறைகாணவும் வேதனைப்படுத்தவும் காரணங்களிருக்க வேண்டும்.

சியாமளி பேச்சிலே கவனமானாள்.

'இன்றைய பெண்களுக்கு சுவையாகச் சமைக்கத்தெரியாது'

'அடப்பாவி, வேலைக்குப் போகும் போது கூட அலுக்காமல் விதம் விதமாகச் சமைத்துக் கொடுத்தும் இப்படிச்சொல்கிறாரே!'

அவனுடைய மனச்சாட்சியும் விழித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

'எனது மனைவி சுவையாகச் சமைப்பார். எனக் கூறி சபையோரிடையே ஓர் ஆரவாரத்தையும் ஏற்படுத்தினான்.

'சாப்பாடு சரியில்லாவிட்டால் கணவனுக்குக் கோபம் வரும்'

'காதலி கொடுத்தால் கசப்பும் சுவையாக இருக்குமென்று இலக்கியங்கள் சொல்கின்றனவே. இவருடைய கருத்து எதிர்த்திசையாக இருக்கிறது.'

'தாம்பத்திய உறவு சரியில்லாவிட்டாலும் கணவன் மனைவியிடையே பிணக்கு ஏற்படும். கணவன் குறைகாண்பான்'

'இதைத்தானே வேண்டாமென்கிறார்கள். சுவையாகச் சமைத்துப் போடவும் வீட்டு வேலைகள் செய்யவும் மஞ்சத்தில் சுகந்தரவும் மட்டுமே பெண்களிருக்கிறார்கள் என்று எண்ணாதீர்கள் என்பதை வலியுறுத்தித்தான் எல்லோரும் பேச இவரென்ன சொல்கிறார்? நல்ல ஆளைப் பேச அழைத்தார்கள். சியாமளி உள்ளே சிரித்தாள்.

'இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் பெண்கள் வேலைக்குப்போகிறார்கள் காரியாலய வேலையோடு அவர்கள் வீட்டுவேலையையும் செய்வதால் கஷ்டப்படுகிறார்கள். அதனால் பிரச்சனைகள் எழுகின்றன. அவர்கள் பொறுமையிழக்கிறார்கள்'

'பொருளாதாரப் பிரச்சனை தான் பெண்களை வெளியே வேலைக்கு அனுப்பவைத்ததே தவிர அடிப்படையான முற்போக்கு மன மாற்றமல்ல. நிதித்தேவை படிப்படியாக படிக்க, உத்தியோகம் பார்க்க வாகனங்களோட பெண்களை



அனுமதித்திருக்கிறது என்பதுதான் உண்மையான விடயம்.'

'எனவே வீட்டுவேலைகளை அவர்கள் இலகுவாகச் செய்யக் கூடியதாக நவீன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அதனால் வேலைப்பழு குறையும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

'எங்கள் வீட்டிலே சகல நவீன வசதிகளுமிருக்கின்றன ஆனால் நான் முள்மேலிருக்கிறேனே.'

'நாம் மற்றுமொன்றைக் கவனிக்கவேண்டும். இந்தியாவில் திருமணமானதும் பெண்கள் கணவன் வீட்டிற்குப் போவதால் அங்கே பெண்கள் கஷ்டப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் பெண்ணுக்கு வீடு சீதனமாகக் கொடுக்கப்படுகிறது. பெண் தனது வீட்டிலே தான் வளர்ந்த சூழலிலேயே பெற்றோர் சகோதரங்களுடன் வாழ்வதால் இங்கு பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிகழ்வது இல்லை.

இவருடைய தாம்பத்திய உறவு ஆசையை நிறைவேற்றி நான்கைந்து பெண்பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் இவரால் எத்தனை வீடுகள் கட்ட முடியும்? குறைந்தது ஆறு பெண்களையாவது பெற வேண்டுமென்ற ஒரு குரூர ஆசை சியாமளியுள் எழுந்தது.

சீதன வீட்டிலிருந்து நான் மட்டுமல்ல என் பெற்றோரும்படும் அவஸ்தை! எவ்வளவு ஆனந்தமாய் நாங்கள் வாழ்ந்த வீடு இப்போது கசப்பும் கண்ணீருமாய்...

வீட்டிற்கு வந்து சேர்கின்றார்கள். பின்புறம் சாந்தாவின் குரல் கேட்கின்றது. சாந்தா அம்மாவிடம் வாடிக்கையாகப் பசுப்பால் வாங்குபவள்.

'சியாமளி உம்முடைய அப்பா அம்மாவிடம் சொல்லும் இங்கை இருக்கிறதெண்டால் சீராய் இருக்கச் சொல்லி ஹரிஹரன் உஷ்ணமாகிக் கூறினான்.

'நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைய ஒவ்வொரு வீடும் பங்காற்றவேண்டும். பால்மா வாங்குவதை விட்டு பசு வளர்க்க வேண்டும். இப்படி பல ஆலோசனைகள் கூறி கட்டுரை எழுதியிருந்தீர்களே. உங்களுடைய மாமா, மாமி அப்படிப் பங்காற்றுவதை ஏன் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை?

சியாமளியின் வழமையான மௌனம் மீறப்பட்டதைச் சகிக்க முடியாமல் அவன் பார்வையிலும் சூடேற்றினான்.

அப்பாவும் அம்மாவும் இப்படிக்கஷ்டப்பட்டு, சிறுகச் சிறுகச் சேர்த்து அருமையாகக் கட்டிய வீடுதான் இது இதில் இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை அவர்கள் தொடர்ந்து வாழவேண்டும். நீங்கள் உண்மையான மனிதத்தன்மை உள்ளவராக இருந்தால் அவர்கள் இங்கே மகிழ்ச்சியாக, சுதந்திரமாக வாழவிடுங்கள்.'

அவனுடைய கண்களை நேர்கொண்டு பார்த்து சியாமளி தீர்க்கமாகக் கூறினாள். □□□

*அடுத்த இதழ் ஆண்டுநிறைவு மலராக வெளிவர உள்ளது. பெறவிரும்புவோர் 150/= காசோலை/மணியோடர் மூலம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சினைகளும் தமிழ்ப்பெண்களும்

*றஞ்சி (சுவிஸ்)*

தமிழ் பெண்களாகிய நாம் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் மற்றைய நாட்டு பெண்களிலும் பார்க்க கூடுதலாகவே உள்ளன. எமது கூட்டு வாழ்க்கை முறை, சாஸ்திர விதிகள், சமூகக் கட்டுப்பாடுகள் பண்பாடு என்பன எம்மை இன்னும் இன்னும் பிரச்சினைகளை எதிர்நோக்கவே செய்கின்றன. குடும்பம் என்கின்ற அமைப்பை விட்டு வெளிவந்து வாழும் பெண்களும் சரி குடும்ப அமைப்புக்குள் , நாலுசுவருக்குள்ளே வாழ்ந்து வரும் பெண்களும் சரி, ஏன் வேலை செய்யும் பெண்ணாக இருந்தாலும் சரி அவர்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சினைகள் கூடுதலாக ஒரு பெண்ணின் ஒழுக்கம் பற்றியும் பாலியல் தன்மை பற்றியதாகவுமே இருக்கின்றது. இவ்வாறு பெண்ணை அடக்கி ஒடுக்க சமூகத்தால் வரை யறுக்கப்பட்டது தான் அவளின் பாலியல்பு பற்றியதாகும்.

இதை விட பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதால் மட்டும் தான் உளவியல் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறாள் என்றால் அது தவறானது. ஏன் ஆண்களும் கூட உளவியல் பிரச்சினைக்கு உள்ளாகின்றான். ஆனால் கூடுதலாக எல்லா சமூக அமைப்பினுள்ளும் பெண்களே பாதிக்கப்படுகிறாள். பெண் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் கூடுதலான சமூகங்களில் பெண்கள் ஒடுக்கப்படுவதும் சுரண்டப்படுவதும் தன் சுய ஆளுமையை வெளிக்கொண்டு வராத அளவிற்கு கட்டுப்படுத்தப்படுகிறாள். உயிரியல் ரீதியாக மட்டும் அன்றி பெண் என்பவள் குறையுடையவள் ஆணுக்கு குறைந்தவள் என்ற சிந்தனை பெண்கள் சமூகத்தினுள்ளும் வீட்டிலும் வேலைசெய்யும் இடங்களிலும் நசுக்கப் படுகிறார்கள். இதுவும் ஒரு வகை உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு பெண்ணை உளவியல் ரீதியில் கூடுதலாக பாதிப்பது இந்த ஆணாதிக்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ள 'கற்பு' ஒரு பெண்ணை சமூகம் அடக்கி ஒடுக்க பாவிக்கும் ஒரு ஆயுதம் என்றே கூறலாம். அத்துடன் குடும்பத்தில் நிகழும் சச்சரவுகள் உட்பட கணவன் மனைவிக்கிடையிலான உறவுகள், மனைவி, பிள்ளைகள் சகோதரிகள் மேல் ஆண் நடாத்தும் ஒடுக்குமுறைகள், போராட்டச்சூழல், போராட்டத்தினால் கணவன்மாரை இழந்த பெண்கள் பொருளாதாரம் போன்ற காரணங்களினாலும் பெண்களுக்கு உளவியல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. புகலிடங்களில் ஆணாதிக்கத்தின்பேரால் எமது தமிழ் பெண்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்படவில்லை என்று மறுப்பது தவறானது.

அடிக்கிற கை தானே அணைக்கும் புருசன் தானே அடிக்கிறான் இன்றைக்கு புருசனும் பெண்டாட்டியும் அடித்துக் கொள்வார்கள் நாளைக்கு சேர்வார்கள் போன்ற கருத்துக்கள் உட்பட பல பிற்போக்குத்தனங்களுக்கு ஆதரவளிக்கும் ஆணாதிக்கத்தால் பெண்கள் மேன்மேலும் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு மனநோய்க்கு ஆளாகின்றார்கள். இதற்கு ஒரு உதராணம் புகலிடத்தில் பாடசாலைக்கு போகும் சிறுமியொருத்தியிடம் ஒரு தடவை நீதிமன்றத்தில் வாக்கு மூலம் கேட்கப்பட்டது அதற்கு அச்சிறுமி அவர் அப்பாவா? அவருக்கு பேசவே தெரியாதே? அவர் என்னை, தம்பியை,



அம்மாவை எந்தக் கேள்வியும்கேட்காமல் எந்த நேரத்திலும் அடிப்பார் என்றாள். அச்சிறுமியின் அடிமனதில் ஆழமாக பதிந்து விட்ட அச்சம்பவம் அவளை உளவியல ரீதியாக பாதித்திருப்பதையே காட்டுகின்றது. இப்படி பலவற்றை நாம் காண்கிறோம். இதே போல் இன்றைய சினிமாக்களும் பெண்களை உளவியல் ரீதியில் தாக்கம் செலுத்தி வருவதால் பல பெண்கள் பிரச்சனைகளை அலசிப்பார்க்க முன்வருவதில்லை. மக்களின், பெண்களின் ஏன் ஒரு சமூகத்தின் யதார்த்த வாழ்க்கையை பிரதிபலிப்பவைகளாக இருந்தால் பரவாயில்லை. இச்சினிமா மூலமாக பல பெண்கள் தம்மைச்சுற்றி ஒரு கற்பனை வாழ்க்கையை உருவகிப்பது மட்டுமல்ல இறுதியில் தம் பிரச்சினைக்கான தீர்வுகளைக் கூட சினிமா பாணியிலேயே நடத்து கின்றார்கள். உண்மையிலேயே இது ஒரு வருந்தத்தக்க விடயமாகும். இவ்வாறு பல வகைகளில் பெண்கள் கூடுதலாக தமிழ் பெண்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறாாகள். எங்களுக்கு ஏன் வீண் வேலை என்னும் மனோபாவங்களும் இனவாதமும் பாதிப்புற்ற பெண்களை மேலும் தளர்வுறச் செய்கின்றன. அதனால் "ஜன்னல்களைத் திறந்து விடுங்கள் அப்போது தான் வெளியே மழை பெய்கின்றதா, பனி கொட்டுகிறதா அல்லது வெயில் காய்கின்றதா என்று தெரியும். வெளியிலுள்ள நறுமணங்களும் பறவைகளின் பாடல்களும் அவதிப்படுவோரின் அழுகுரல்களும் நமக்கும் கேட்கும்." □□□

## வார்த்தைகள் இழந்த வாழ்க்கை

சில பூக்கள்
நறுமண சுகந்தம் எனப்
பொழுதுகள்
விடிந்தன அப்போது!

இப்போது ஒவ்வொரு
விடியலிலும்
குருதியின் சுவடுகள்..!

மனிதம்
மரணித்துத் தெருவில்
உலவுகிறது!

தூரத்தே
தெருவில்
மல்லாந்து கிடக்கும்
மனித உடல்...
அருகே செல்ல
யாருக்குத் துணிச்சல்..?

குருதியின் வீச்சத்தோடு
அடுத்த குண்டு
குறிபார்த்துக் காத்திருக்கையில்...

பூக்கள்..
நறுமண சுகந்தம்..
எங்கிருந்து வரும்..?

நானும் நீயும்
எல்லோருமாய்...
வார்த்தைகளற்றுக்
கடந்து கொண்டிருக்கிறோம்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு பிணங்களாய்...

தாட்சாயணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழித் தமிழில் பெண்களின் புலமைத்துவம் : ஔவையார்

செல்வஅம்பிகை நடராஜா (விரிவுரையாளர்)

ஒரு நாட்டின் நாகரிகத்தை மதிப்பிடுவதற்கு, அந்நாட்டுப் பெண்களின் கல்வியே முதன்மையானதாகக் கருதப்படுவது இயல்பு. அந்த உண்மையைப் பண்டைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனராதலால், தம் பெண் மக்களுக்கு உயர்ந்த கல்வியை அளித்து வந்தனர். பழந் தமிழ் நாட்டில் புலமை மகளிர் பலர் சிறந்து விளங்கினார்கள்.

அவ்வாறு விளங்கிய மகளிருள் ஔவையார் முதன்மையானவராகக் கொள்ளப்படுகின்றார். பாணர் குடியில் தோன்றிய ஔவையார், இளமையில் முறையே பயின்று முத்தமிழிலும் வித்தகராக விளங்கினார். தமிழிலக்கியங்களில் ஔவையார் என்னும் பெயரினை உடையார் பலராகக் காணப்படுகின்றனர். சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார், சுந்தரர் காலத்தில் வாழ்ந்த ஔவையார், கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவையார், பிற்கால ஔவையார் என ஔவையார்கள் பலராகக் காணப்படுகின்றனர். சங்க காலத்தில் புகழ் பெற்று விளங்கிய ஔவையார் மீது பிற்காலத்தவர்கள் கொண்ட மதிப்பால் சிறப்புக் கருதி ஔவையாரின் பெயரைத் தமக்குப் பெயராக வைத்துக் கொண்டனர். இதனாலேயே, ஔவையார் என்ற பெயரில் பலர் வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் போக்குவரத்து வாய்ப்புக்கள் இல்லாத காலத்தே தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வந்தவர். பேரரசர், சிற்றரசர் ஆகிய அனைவருடைய அவைகளிலும் சென்று, பலரையும் கண்டு இனிய பாக்கள் பாடியுள்ளார். அவர் பாடியனவாக எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் பாடல்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு அமைகின்றன.

*குறுந்தொகை* - 15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183,200, 364, 388
*நற்றிணை* - 129, 187, 295, 371, 381, 390, 394
*அகநானூறு* - 11, 147, 273, 303
*புறநானூறு* - 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103, 104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311,315, 367, 390, 392

ஔவையாரின் பாடல்களாகக் குறுந் தொகையில் பதினைந்தும் நற்றிணையில் ஏழும் அகநானூறில் நான்கும் புறநானூறில் முப்பத்துமூன்றும் ஆக ஐம்பத்தொன்பது பாட்டுக்கள் காணப்படுகின்றன.

அரச கடமைத் தொடர்புடையவர்களில் பெண்பாற் புலவரான ஔவையார் குறிப்பிடத்தக்கவராவார். புறத்திணைப் பாடல்களை அதிக எண்ணிக்கையில் பாடியுள்ளமை இக் கருத்துக்குத் தக்க சான்றாகும். அதியமான் நெடுமானஞ்சி, தொண்டைமான், அதியமான் மகன் பொருட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவென்கோ, உக்கிரப் பெருவழுதி, பெருநற்கிள்ளி போன்ற மன்னர்களைப் பாடியுள்ளார். நாட்டின் நன்மை கருதித் தூது செல்கின்ற அரச கடமையிலும் ஔவையார் பங்கேற்றுள்ளார். அதியமான் அஞ்சிக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையாருக்குத் தொண்டைமான் தன் படைக் கலக் கொட்டிலையே காட்டுகின்றான். இது



அரசியல் நிலையில் புறநானூற்றுப் பாடல்கள் எழுந்த காலத்துப் புலமையாளரின் பங்களிப்பைக் காட்டுவது மட்டுமல்லாமல் பெண்களின் தலைமைத்துவ ஆற்றலையும் காட்டுகின்றது.

அரசர் தமது கடமைகளைச் செய்யாதவிடத்து அதனைச் சுட்டிக் காட்டியுமுள்ளார். பரிசில் கொடாது காலம் நீடித்த அதியமானைப் பற்றிய பாடல் ஒன்றுண்டு. ஔவையார் கற்றவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறுவதால் அவர்களுக்கு மன்னன் உரிய காலத்தில் உரியவற்றை உதவ வேண்டும் என வலியுறுத்திக் கூறுகின்றார். அரச கடமைகளைச் சிறப்பாக ஆற்றிய மன்னர் புகழ் மாயாது என்பதையும் ஔவையார் புறநானூற்றுப் பாடலில் காட்டத் தவறவில்லை.

ஔவையார் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று வந்தவர். தமிழ் நாட்டின் பகுதிகள் பல நீர்வளம் மிகுந்தும் நெல் விளையும் இடங்களாகவும் இருந்தன. அவற்றிற்கு மாறாக எதுவுமே விளையாத கற்பாங்கான பகுதிகளும் மலைகளும் அடர் காடுகளும் இருந்தன. அவ்விடங்களிலெல்லாம் சுற்றி வந்த ஔவையாருக்கு வளமுடைய பகுதியை நல்ல நாடு என்றும் வளமற்ற பகுதியை அல்லாத நாடு எனவும் மக்கள் கூறி வந்தார்கள். அதனை அறிந்த ஔவையார் அம் மக்கள் கொண்டுள்ள கருத்துத் தவறானது என்று உணர்ந்து அது பற்றிய தமது சிந்தனையை ஒரு சிறிய பாடலாக வெளிப்படுத்தினார்.

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறநானூறு187)*

நாட்டின் சிறப்பை எடுத்துக் கூறும் ஔவையார் அரசியலில் ஆண்களின் திறமை எப்படி இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் நிலத்தின் சிறப்பை உணர்த்தி நிற்பவர் ஆடவர் என்ற கருத்து வெளிப்பட்டு நிற்கின்றது. நிலத்தில் வாழ்கின்ற ஆடவர்கள் இயல்புக்கேற்ப நிலமானது நாடு, காடு, பள்ளம், மேடு என வழங்கப்படும். ஆண்களின் திறமையினால் பள்ளம் மேடாகின்றது. காடு நாடாகின்றது. ஆண்களின் வினைத் திறமையால் மனித வாழ்வியல் சிறப்படைகின்றது என ஔவையார் கூறுகின்றார். ஆண்களின் வாழ்வியலின் ஒழுங்கு நிலைக்கேற்பவே, நிலத்தின் தன்மைக்கேற்பவே நல்ல நாடு உருவாகும் என்ற ஔவையாரின் கருத்து அரச கடமையை அவர் நன்குணர்ந்திருந்தமையைத் தெளியப்படுத்துகின்றது. பல நாடுகளுக்குச் சென்று மன்னர்கள் பலருடன் கொண்டிருந்த தொடர்பினாலும் அரச கடமைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் கூர்மையாக நோக்கும் திறனாலும் ஔவையார் தமது கருத்தினைப் பாடல்களில் தெளிவாகக் கூறும் பண்புடையவராக விளங்கினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட இப் பாடலின் பொருள் எக் காலத்திற்கும் பொருத்தமான ஓர் உண்மையாக அமைந்து விளங்குகின்றது. ஔவையாரின் சிந்தனையின் வடிவங்களாக வெளிவந்த செந்தமிழ்ப் பாடல்கள் ஆழ்ந்த பொருளுடையவை. அவருடைய புலமைத் திறமை அவரை மன்னரோடு சரிசமமாகப் பழக வாய்ப்பளித்தது. ஔவையாரின் திமிர்ந்த ஞானச் செருக்கும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியும் கொண்ட பண்பு நலனே அவரைப் புலமைச் சான்றோர்களில் ஒருவராக இன்றுவரை நிலைபெற வைத்துள்ளது. □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் மனைவி

உன்னை நேசிப்பதில்
இருக்கும் வலி
என்னால் தாங்கிட
முடியாதளவு பெரிது

நின்னைப் பற்றிய அச்சத்தில்
நினதருகே நடக்கிறேன்
நீ நிற்குமிடத்திலிருந்து
இருள் ஆரம்பமாகிறது
நீயெனைப் பார்க்கையில்
நின் நயனங்களுக்குள்ளிருந்து
இரவு ஆரம்பமாகிறது
ஓ! சூரியனோடு கூடவே
நிழலும் வாழ்கிறதென்பதை
இதற்கு முன்னம்
நான் அறிந்திலேன்!

எப்போதும் தாம்
துரத்தி விரட்டுகிற
நிழலைப் பார்ப்பதற்காய்
எல்லா உயர்ந்த மரங்களும்
சூரியனுக்குப் புறமுதுகு காட்டித்திரும்பி
பூமி பார்த்தபடியிருக்கின்றன.

எல்லா மிளிர்ந்தொளிரும்
பொருளினதும் பாதத்தடியே
மேல் நோக்கிப் பார்த்தபடி
இரவு இருக்கிறது.
ஓ! நான் பாடவேண்டும்
ஆட வேண்டும்
ஆயினும்
நிழலிலிருந்து என் கண்களை
என்னால் உயர்த்த முடியவில்லை
என் கிண்ணத்தைச் சுற்றி
இருள்
கவிந்து கிடக்கின்றது

என்ன இது?
உற்றுக் கேள்
தளர்வுற்ற அழகு
காற்றில் பொங்கும் சப்தத்தை
அஃது சங்குக்குள்
பொங்கிடும் சப்தமென!
காட்டுப்பூ மணியசைக்கும்
வானம்பாடி நிலநிறத்தே
மிளிரும் இடத்தே
மரணத்தின் பொங்கும் ஓசையும் கூடவே!

உன்னை நேசிப்பதில்
இருக்கும் வலி
என்னால் தாங்கிட
முடியாதளவு பெரிது!!!

***ஆங்கிலத்தில்-D. H. Lawrence (1885 - 1930)***
***தமிழில்-கெகிறாவ ஸுலைஹா***

D. H. Lawrence (1885 - 1930)

ஒரு நிலக்கரித் தொழிலாளித் தந்தைக்கும் ஒரு ஆசிரியத்தாய்க்கும் மகனாய்ப் பிறந்த D.H.Lawrence அடிப்படையில் ஒரு ஆசிரியர். அதிகம் நாவல்கள் எழுதினார். எழுத்திலிருந்த தாகம் காரணமாக தன் ஆசிரியத் தொழிலைக் கைவிட்டவர். வகுப்புவாதத்தையும், நகரமயமாக்கலையும் நவீன வாழ்வின் யந்திரத்தனத்தினால் விளைந்த சமூகப் பிரச்சினைகளையும் சாடி நின்றவர். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான முரண்பாடுகள் கொடூர சமத்துவமின்மைகள் அவரை எப்போதும் வாட்டி நின்றன. அவரது Sons and Lovers, The Rainbow, Women in Love மற்றும் Lady chalteleys lover போன்ற நாவல்கள் இதற்கு நல்ல உதாரணங்கள். காதலின் புனிதம் திருமண வாழ்வின் மகோன்னதம் ஒரு தாரக்கொள்கை, கற்பு, பாலியல் ரீதியான உறவின் பேணுதல்கள் பற்றியே அவரது கதைகளும் கவிதைகளும் அதிகம் பேசி நிற்கின்றன. நோயின் காரணமாக தொலைந்து போன நிம்மதி தேடி மெக்ஸிகோ, இத்தாலி, சிலி போன்ற தேசங்களுக்கெல்லாம் அலைந்து திரிந்த பின் இறுதியாக தன் 45ம் வயதில் 1930-ல் காசநோய் காரணமாக France-ல் மரணமானார்.



## நேர்காணல்



கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அண்மையில் அவர் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாவது பெண் பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறையின் பெருவளர்ச்சிக்காக உழைத்துவரும் அவருடனான நேர்முகத்தை வெளியிடுவதில் 'ஜீவநதி' மகிழ்ச்சி அடைகின்றது.

***1) நீங்கள் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் முதலாவது தமிழ் பெண் பேராசிரியர் என்ற வகையில் பெண்கட்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?***

'வாழ்க்கை மதிப்பீடு' என்னும் சொல் வாழ்வின் யதார்த்த நிகழ்வுகட்கு மனிதன் அளிக்கும் மதிப்பினைக் குறிக்கின்றது. வாழ்விலே முழுமைபெற வாழ்க்கை பற்றிய சரியான மதிப்பீடுகளைக் கொண்டிருக்க வேண்டும். மனித வாழ்வினைச் செம்மையுறச் செய்வதில் சிலமுக்கிய செயற்பாடுகள் மதிப்பீடு, அன்பு, சேவை, நேர்மை, உழைக்கும்திறன் என்பன சைவத் தமிழ் பண்பாட்டில் முதன்மை பெற்றுள்ளன. சமயநெறி, தத்துவ இயல் சார்ந்த ஆய்வுகளில் காணப்படும் திருப்புமையங்களை நன்கு அறிந்து கொள்வதும் அவசியமாகும். விழுமியங்கள் மனிதவாழ்வின் நெறியுடன் ஒழுங்குடன் வாழவழிப்படுத்தும். ஒருவன் தான் தெரிவுசெய்யும் இலட்சியங்களை செயற்படுத்துவதில் அவனுக்குத் தைரியம், அர்ப்பணிப்பு, பற்றுறுதி, ஒத்துழைக்கும் மனப்பாங்கு என்பவை இருக்க வேண்டும். பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் கூட வாழ்வுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் அறிவியல், ஆன்மீகம், ஒழுங்குமுறை ஆகிய நெறிகளில் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும். அன்பு, சமநீதி, சமத்துவம், சமாதானம் என்பன தனிமனித வாழ்வின் ஒழுங்கு நெறிப்படுத்தும் உயர் இலட்சியங்களாகும். கல்வித்துறையில் பெண்களும் பெரும்பாலும் முன்னேற்றம் அடைந்துள்ள இன்றைய நிலையில் கற்றதன் வழி நின்று மேற்சொன்ன விழுமியங்களைக்கடைப்பிடித்து ஒழுகுவதுதான் தானும் தனது குடும்பமும் தான் வாழும் சமூகமும் அமைதியான முன்னேற்றமான ஒரு உயர் செல்நெறியில் செல்வதற்கு வழிகாட்டியாக அமையமுடியும்.

***2) பாரதிகண்ட புதுமைப் பெண்ணைப்பற்றிய 'புரிதல்' இன்று ஏற்பட்டுவிட்டதா?***

இன்று தமிழ்ப் பெண்கள் புற உலக வாழ்விலே அறிவியல், கல்வித்தகைமை, நவநாகரிக வாழ்வு உயர் தொழில்வளம் என்பவற்றிலே பலசாதனைகளை படைத்துள்ளனர். எனினும் தமிழ்ப் பண்பாட்டுச் செல்நெறியில் பாரதியின் 'புதுமைப் பெண்ணாக' சகலதுறைகளிலும் சுதந்திரம் பெற்றுவிட்டார்கள் என்பது சந்தேகமே. நவீன பெண்ணியம் பற்றிய புரிதலும் தமிழ் பண்பாட்டில் பெண்ணியம் பற்றிய புரிதலும் நிச்சயமாக வேறு பட்டவைதான்.

*"நிமிர்ந்த நடையும் நேர் கொண்டபார்வையும்*
*திமிர்ந்த ஞானச்செருக்கும் உள்ளதால்*
*செம்மை மாதர் திறம்புவதில்லை யாம்..."*

என்று பாரதி கண்ட புதுமைப் பெண் கல்வியறிவிலே மட்டுமல்ல உயர் ஞானச் செல்வத்திலும் நிறைவு பெற்றிருக்கவேண்டும். அத்தகைய ஞானச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்குள்ளோர் செம்மை மாதர்கள் - அவர்கள் நடத்தையிலும் ஒருபோதும் மாறுபடுவதில்லை. உபநிடதகாலத்திலும் அறிவிலும் ஞானத்திலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த அரசசபைகளிலும் சரிநிகர் சமானம் பெற்ற கார்க்கி, மைத்திரேயி போன்றவர்களும். வாகனமோட்டுவதிலும் கைகேயி, விஜயை போன்ற உத்தமப் பெண்மணிகளையும் அன்றைய உலகம் கண்டுள்ளது. இன்று அறிவிலே புதுமைபடைக்கும் தமிழ் சினிமாக்களின் தரம் பற்றிப் பாரதி வரவேற்பாரா? புரிதல் என்பது கல்வி ஒழுக்கத்திலே கலைபண்பாட்டினைப்பேணும் பழக்க வழக்கங்களில் அன்பில் முழுமை அடைவதே இன்றைய தேவையாகும். அந்தவகையில் தமிழ்ப் பெண்கள் பலர் உயர்நிலையில் இருந்தாலும் பாரதிகண்ட 'புரிதல்' என்னும் உணர்வில் பெரும்பாலும் முழுமைபெறமுடியவில்லை என்றே கூறவேண்டும்.

***3) ஒரு நல்ல குடும்பப் பெண்ணாக விளங்குவதற்கு இன்றைய பெண்கட்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?***

எமது சமயம் பெண்கட்கு மட்டுமல்ல எல்லோருக்குமே அளவற்ற சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அதன் விளைவுகளை நாம் இன்று சமுதாயத்திலே கண்கூடாகக் காண்கிறோம். சுதந்திரம் என்பது கட்டுப்பாடற்ற நிலை என்று பொருளல்ல. எமது சமயப் பண்பாட்டு மரபுகளிற்கு கட்டுப்பட்டவர்களாக வாழ்வதுடன் அவற்றினை அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய கடப்பாடும் குறிப்பாகப் பெண்களிடம் தங்கியுள்ளது. இந்து சமயத்தின் பலமும் பலவீனமும் அதனிடத்தேயுள்ள சுதந்திரமான பண்புதான். அதனைச் சரியாகப் பாதுகாப்பது இந்துக்களின் கடமையாகும். இன்றைய பெண்கள் வாழ்விலே குடும்பம், தொழில், குழந்தை வளர்ப்பு, கல்வித்தேடல் எனப் பலவகைப்பட்ட சுமைகளால் அழுத்தம் பெற்றுள்ளனர். நாட்டுச் சூழல், போரியல் வாழ்வு இத்தனைக்கும் மத்தியிலும் பொறுமை, சகிப்புத் தன்மை, கண்ணியம், கடமையுணர்வு, அன்புடைமை போன்ற பண்புகளுடன் இருப்போர் பாராட்டத் தக்கவர்களே. பெண்கள் பலர் உயர் அதிகாரத்திலே தொழிலில் இருந்தாலும் அவர்கள் தாம் வீட்டிலே பெற்றோருக்குப் பிள்ளை கணவனுக்கு மனைவி, பிள்ளைகட்குத் தாய், மாமியாருக்கு மருமகள் என்ற பல பாத்திரங்களை வகிப்பதனை மறந்து விடக் கூடாது. அலுவலக அதிகாரங்களை வீட்டிலே உபயோகப் படுத்தக்கூடாது. படிப்பு உழைப்பிற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் பொருள் தேடலுக்கும் மட்டுமே உதவவேண்டும். அது குடும்பத்தில் உயர்வு, தாழ்வு மனப்பான்மையாக வளரப்படித்த பெண்கள் இடமளிக்கக் கூடாது.

இன்றுள்ள வாழ்க்கைச் செலவு நோக்கில் இருபாலாரும் உழைப்பது இன்றியமையாத தேவையாகிவிட்டது. அதனைப் புரிந்து கொண்டு கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை புரிந்துணர்வு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கினை விருத்தி செய்வது குடும்பத்திற்கும் குழந்தைகட்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். கல்வியறிவில் மேன்மை பெற்று உயர்தொழில் துறைகளில் கடமையாற்றும் பல பெண்கள் சீதனக் கொடுமைகளால் இன்னும் பாதிக்கப்படுகின்றனர். பெண்கள் சமத்துவம், சமஉரிமை என்பன இவ்விடத்தில் கேள்விக்குறியாகின்றது. சீதனம் வழங்குவதே தவிர வற்புறுத்தி வருத்தி வாங்கப்படுவதல்ல. பெண்களின் உழைப்பும் தொழிலுமே அவர்கட்கு ஒரு சீதனம்தான் வாழ்க்கைச் செலவு காரணமாக உழைப்பினை நாடும் பெண்கள் சீதனத்திற்காகவும் உழைக்கும் கொடுமை பரிதாபமானது. இந்நிலைமாறும் போது தான் பெண்களின் உன்னதம் உயர்நெறி, அறிவுசால்புலமைக்கு உரிய மதிப்பு ஏற்படும். பணமில்லாமல் வாழ்க்கையில்லை என்பது உண்மைதான் பணம் மட்டும் தான் வாழ்க்கையல்ல என்பதனையும் இருபாலாரும் உணர்ந்து கொள்ளும் போதே குடும்ப வாழ்விலே அன்பு சமாதானம் மகிழ்ச்சி இவை நிலவமுடியும். ☐☐☐



# பெண்களும் தலைமைத்துவப் பண்பும்

கலாநிதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம்

**அறிமுகம்:-**

இன்றைய உலகில் பெண்கள் பல துறைகளிலும் தடம் பதித்த வரலாற்றினைக் காண முடிகின்றது. சீரிய எண்ணங்களை வளர்த்துச் சீரான முறையில் சிந்தித்துச் செயலாற்றும் மனப் பக்குவம் படைத்தவர்களாகப் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றார்கள். இன்று கல்வி தொடர்பான விழிப்புணர்வு கொண்ட பெண்களின் சமூக அமைப்புத் தோற்றம் பெற்று வருகின்றது. ஆரம்ப காலச் சமூக அமைப்பை எடுத்து நோக்கினாலும் பெண் என்பவள் சுதந்திரமாக வாழ்ந்த நிலையை அறிய முடிகின்றது. சமூகம், கலாசாரம், அரசியல், பொருளாதாரம் என இப்படி எல்லா நிலைகளிலும் தாய் என்பவள் சகல அதிகாரங்களும் உடையவளாக விளங்கினாள். அவளுக்கு எல்லா விதமான உரிமைகளும் இருந்தன. சகல சுதந்திரங்களும் உடையவளாக விளங்கினாள். அத்துடன், கல்வியாளர்களாய், வீரத் தாய்மார்களாய், அரசி என்ற அந்தஸ்து உடையவளாய் எல்லா வகையான ஆற்றல்களையும் பெற்றிருந்தனர். இலக்கியங்கள் எல்லாம் பெண்களின் பெருமை பேசின. அன்பு, அருள், பாசம், பரிவு, கனிவு, கடமை, கருணை, தியாகம் இவை அனைத்தும் சேர்ந்த மொத்த உருவமாகப் பெண்கள் போற்றப்பட்டார்கள். கால கதியில் ஆண் இனத்தின் அகம்பாவ, ஆணவப் போக்கும் அறியாமை வழிப்பட்ட மத, சாதிக் கட்டுப்பாடுகள் போன்றவற்றாலும் பெண்ணினத்தின் பெருமைகள் சீரழிக்கப்பட்டன. இக் கட்டுப்பாடுகள் பெண்களின் வாழ்க்கையை நடைப் பிணமாக்கின. வேதகாலத்திலும் பழந் தமிழர் காலத்திலும் பெண்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டி வாழ்ந்து காட்டியுள்ளார்கள். இந் நிலை இடைக்காலம் வரை தொடர்ந்தது. பின் தோன்றிய சமுதாய மாற்றமும் சூழலும் பெண்ணடிமைக்கு வித்திட்டன. இன்று பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகக் கல்வி கற்பதன் விளைவு பெண்களின் வாழ்வு சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகி விட்டது.

**பெண்களும் கல்வியும்:-**

ஓர் ஆண் கல்வி கற்றால் அது அவனுடனேயே முடிந்துவிடும். ஆனால், ஒரு பெண் கல்வி கற்றால் அது முழுக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், சமுதாயத்திற்குமே பயன்படும். இன்று பெண்கள் சமுதாயத்தின் இன்றியமையாத பிரிவினராகச் செயற்பட்டு வருகின்றனர். இன்றைய சமூகப் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவு வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பவர்கள் பெண்களாவர். இன்று அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சுகாதாரம், நலத்துறை, கல்வி என்பவற்றை மேம்படுத்துவதன் மூலமாகச் சிறந்த பெண் மனித வளத்தை விருத்தி செய்ய முனைந்து செயற்பட்டு வருகின்றன. பெண்களின் வாழ்க்கை சிறக்க வேண்டுமானால், தொழில் வாய்ப்புகள் பெண்களுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும். இதனால், கல்விக்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்க வேண்டும். தொழில் உலகிற்குப் பொருத்தமாகப் பெண் மனிதவளம் விருத்தி செய்யப்பட வேண்டுமானால், கல்வி தொடர்பான பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்

❑ பல வகையான கற்கை நெறிகளில் ஈடுபடக்கூடிய மனப்பாங்கு உடையவர்களாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்களுக்கான கல்வி வாய்ப்பை அதிகமாக்கல்.
- பெண்களுக்கான விசேட கல்வி வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- உயர் தொழில் வாய்ப்புக்களுக்கான கல்வி நெறிகளை ஏற்படுத்தல்.
- பெண்கள் கல்வி தொடர்பாக ஏற்படும் பல விதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.
- ஆண்களுக்கு வழங்கப்படும் அதேயளவு கல்வி வாய்ப்புக்களைப் பெண்களுக்கும் வழங்குதல்.
- பெண்கள் தொடர்பான மூடநம்பிக்கைகளை அகற்றுதல்.

இத்தகைய அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள் கல்வி மேலும் வளர்ச்சி யடையச் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். இலங்கையின் மனிதவளவிருத்தி, வளர்ச்சி என்பவற்றில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்குப் பெண்கள் கல்வி தொடர்பான முயற்சிகள் கை கொடுத்து உதவின.

**பெண்களும் தலைமைத்துவமும் :-**

இன்றைய சமூக அமைப்பில் பெண்களின் கையில் பல பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கால கட்டங்களில் சமூகத்தில் உயர்நிலையில் உள்ள பெண்கள் மட்டுமே கல்வி, சமூக, அரசியல் சீர்திருத்தப் போராட்டங்களில் பங்கு பெற்றனர். செல்வாக்கு மிகுந்த பெண்களின் குடும்ப வாழ்க்கையும் சிறப்பாக அமைந்தது. அவர்கள் அக் குடும்பத்தில் சிறப்பிடம் வகித்தார்கள். சமூகச் சீர்திருத்தங்களில் ஈடுபட்ட ஆண்கள் தம் குடும்பத்துப் பெண்களையும் இத்தகைய செயல்களில் ஈடுபடுத்தினர். இவர்கள் சமூகத்தில் தமக்கு எதிராகச் செயற்படும் விடயங்களை எதிர்க்கத் துணிவு பெற்றவர்களாக விளங்கினர். வெளி உலகத் தொடர்புகளும் இவர்களுக்குத் துணை நின்றன.

இன்றைய பெண்கள் மறைந்து கொண்டிருக்கும் பழைய உலகிற்கும் நவீன உலகிற்கும் இடையே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். பெண்கள் குடும்ப வாழ்வில் தலைமை ஏற்போராகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் பெண்கள் அக்குடும்பச் சுமையைத் தாங்குவோராக இருக்கும் நிலையைக் காணமுடிந்தது. குடும்பத்தில் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதிலும் பெண்ணின் பங்கு அதிகமாக இருந்தது. இன்று குடும்பச் சுமையில் ஆண்களும் பங்கு கொள்ளும் நிலை ஏற்படுகின்றது. பெண் சில சமயங்களில் ஆணுக்கு நிகரான தன்மை பெற்றும் விளங்க வேண்டியுள்ளது. வன்மையும் மென்மையும் இரண்டறக் கலக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

*"பெண்ணியல் மனமும் ஆண் இயல் அறிவும்*
*அண்ணுற வகுத்த அருட் பெருஞ்சோதி"* (வள்ளலார்)

இக்கருத்து எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக விளங்குகின்றது. குடும்பத்தின் உயர்வும் தாழ்வும், வளர்ச்சியும், வீழ்ச்சியும், பெருமையும், சிறுமையும் ஒரு பெண்ணிடம்தான் உள்ளது. கல்வியறிவு, பொருளாதாரம், சுதந்திரம், சம உரிமை போன்றவைகள் இன்று பெண்களுக்குப் போதியளவு கிடைக்கின்றன. இன்று பெண்களுக்கான சம உரிமையை நிலைநாட்ட ஐ.நா.சபையும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. இதன் காரணமாக 1945ம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த மாநாட்டில் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க அனைத்து நாடுகளும் முன்வர வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனையடுத்துப் பெண்களினது உரிமையை நிலைநாட்ட தனி அமைப்புகள் சர்வதேச அளவில் உருவாக்கப்பட்டன. சமூகப் பொருளாதாரரீதியில் பெண்களுக்குச்சம உரிமையும் முன்னேற்றமும் கிடைக்க இந்த அமைப்புகள் பாடுபட்டன.



இதனால் மார்ச் 8ம் தேதியை பெரும்பாலான நாடுகள் சர்வதேச மகளிர் தினமாகக் கடைப்பிடித்து வருகின்றன. இந்நாளில் பெண்களின் நலனுக்காகப் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

குடும்பப் பொறுப்பை சுமந்த பெண்கள் இன்று நாட்டின் பொறுப்பையும் ஏற்றுச் சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களாக உருவாக்கப் படுகின்றார்கள். எல்லாத் துறைகளிலும் உயர்ந்த ஊதியத்தில் வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றன. தொழில் உலகில் தலைமைத்துவப் பதவிகளை ஏற்கும் உடற்பலமும், மனோபலமும் கொண்டவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். கால மாற்றத்திற்கேற்ப தம்மையும் அதனுடன் பொருத்தி வாழும் தலைமைத்துவமும் திறமும் அவர்களிடம் குடி கொண்டுள்ளன. ஆரம்ப காலப் பெண்கள் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அதன் மூலம் திருப்தியடைந்தனர். தற்போது பெண் மனித வளத்தினை நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பயன்படுத்தும் போது நாட்டின் மொத்தவருமானத்தில் அவர்களின் பங்கும் அதிகமாகும் என்பது வளர்ச்சியடைந்த நாடுகளின் கருத்தாகும். இதனால் திட்டமிட்ட முறையில் பெண்மனிதவளம் இத்தகைய முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பெண்களின் உளவியற் பலத்தை அதிகரிக்கும் வகையில் தாழ்வுணர்ச்சியை அகற்றும் வகையிலும் மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறியும் வகையிலும் கல்விச் செயற்பாடுகள் பெரிய அளவில் திட்டமிடப்பட்டு பெண்களுக்கும் வழங்கப்படுகின்றன. இத்தகைய பெண் மனிதவளத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் பங்களிப்பு கல்வியின் மூலமே அவர்களைச் சென்றடைகின்றது.

**முடிவுரை**

சாதாரண நடைமுறை வாழ்க்கை அமைப்புகளையும் எடுத்துப் பார்க்கும் போது ஒரு குடும்பத்தின் உயர்விலும் ஒரு பெண் பங்கு பெறுபவளாக உள்ளாள். குடும்பத்தின் செயற்பாடுகளை அவர்கள் கவனிக்காது விடின் அக்குடும்பம் பல இன்னல்களுக்கு ஆளாக நேருகின்றது. பெண்கள் எவ்வளவுதான் உயர்ந்த பதவிகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டாலும் குடும்பத்தின் சுமையும் அவளிலேயே சாய்ந்துள்ளது. அவர்கள் நாள் முழுவதும் ஓய்வின்றி உழைக்கின்றார்கள். அத்துடன் குழந்தைப் பேறு அவளின் கல்வியில், தொழிலில் சில தடைகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நிலைகளால் சில இடங்களில் அவளது பதவியுயர்வுகளும் உயர்பதவிகளும் சிக்கலாக அமைந்த நிலைமைகளும் உண்டு. எனவே இவையெல்லாவற்றையும் கடந்து பெண்கள் பல தடைகளுக்கு மத்தியில் அவற்றை வெற்றி கொள்கின்ற நிலையும் காணப்படுகின்றது. பெண்களின் முன்னேற்றம் சமுதாய முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. இதனால் பெண்களின் வாழ்வைத் தாழ்வாக மதிக்கும் சமூக மதிப்புகள் இன்று மாற்றப்பட்டு வருகின்றன. பெண் பல்வகையான ஆற்றல்கள் மிகுந்தவள். அவளது உழைப்பு குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் திட்டமிட்ட கல்வி நடவடிக்கைகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் பெண்களின் தலைமைத்துவப் பண்பு மேலும் வளர அதிக வாய்ப்புகள். உண்டென்பது உணரப்பட்டு வருகின்றது. ☐☐☐

தபால் செலவின் அதிகரிப்பினால் இனி இலவசப்பிரதிகள் வழங்கப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குட்டி இளவரசியுடனான வானவில் நாட்கள்

ஆழியாள் (அவுஸ்திரேலியா)

உனது மெல்லிதாய் வறுபட்ட கோப்பிக்கொட்டைக் கண்களும், ஹேசில் பருப்புகளைப் போன்ற நிறத்துக் குட்டைத்தலைமயிரும் பல காலத்து இனக்கலப்பால் உனக்கு வரமாய் வாய்த்துள்ளதென்று உன்னைப் பார்க்கும் பலரும் என்னைப் போல் ஊகித்திருப்பார்கள்.

காட்டுத்தீ உன் நகரத்து எல்லைகளில் பரவுவதற்கான வாய்ப்பு அதிகமென அறிவித்தல்கள் கேட்டுக்கொண்டிருக்கும் நாளொன்றில் நீ முக்காற் கால் அளவில் மெல்லிய வெள்ளைக்காற்சட்டை போட்டிருந்தாய். உன் தாய் வழக்கமாய் - நமக்கு ஒருவரை ஒருவர் தெரிந்த மூன்று சொச்ச வருடங்களாய் - உனக்கு முழுக் காற்சட்டை தான் அணிந்து விடுவாள். அன்று வழக்கம் மாறியிருந்தது. நான் கவனித்து உன்னிடம் கேட்டேன் என்ன விசேஷம் என்று. நீ உன் முக்காற் காற்சட்டையை முன்னும் பின்னுமாய்ப் பார்த்துக்கொண்டிருக்க, உன் தாய் கடும் வெயிலைக் காரணமாக்கிப் பதில் சொன்னாள். நீ கேட்டாய் அப்படியானால் வெயிலின் உக்கிரம் இன்னும் கூடினால் அரைக்காற்சட்டை போடலாமா என. ஆப்கானிய, கஸ்மீரிய (பாகிஸ்தானிய நிலப் பரப்பு) கலப்புடைய உன் தாய் விடுக்கெனச் சொன்னாள் இல்லையில்லை உன் கால்கள் கறுத்து அசிங்கமாகிவிடும் என்று.

ஏன் கறுப்பை அசிங்கம் என்கிறாய்? என்று உன் தாயிற்கான என் கேள்வி அமைந்ததுடன் கறுப்பை அசிங்கம் என்றால் என்னை அசிங்கம் என்கிறாய் என்ற ஆதங்கமும் என் பேச்சில் வெளிப்பட்டது. சில வினாடிகளின் பின் என் நிறத்தில் என்ன குறை கண்டாய் என்று சொல் பார்க்கலாம் என்ற சண்டை பகிடியாகவோ, உண்மையாகவோ எழுந்ததை உணர்கிறாய். உன் தாயிற்கும், எனக்குமான பன்னிரண்டு வருட நட்பு இவ்வருடத்துப் பருவ கால மழையைப் போல பொய்த்துப் போய் விடுமென்றோ அல்லது உனக்கும் எனக்குமான மூன்று சொச்ச வருட வண்ணத்துப்பூச்சி துரத்திப் பிடிக்கும் விளையாட்டை இழந்து விடக் கூடாதென்றோ அல்லது தனது தாயில் ஒரு குழந்தை காட்டும் அன்பின் இயல்பினாலோ அல்லது பிறப்பிலேயே பின்நவீனத்துவம் பற்றி ஓரளவு புரிதலுள்ளவளாக நீ இருந்ததினாலோ அல்லது ஏதோ சும்மா ஒரு முனைப்பினாலோ இப்படிச் சொல்கிறாய் - கால் வெயிலில் தெரிந்தால் கறுத்து அசிங்கமாகிவிடும் என்று சொல்ல வேண்டியதில்லை. வெயில் தோலை எரித்துவிடும் என்று சொல்லலாம்.

அன்றைய மத்தியானத்தை நீ என்னுடன் கழிக்க விரும்புவதாகச் சொல்கிறாய். உன் தாயும் நீயும் குடியிருந்த வாடகைவீட்டிலிருந்து, என் வாடகை அறைக்கு உன்னைக் கூட்டிப் போவதாகத் தீர்மானமிருந்தது. சைக்கிள் கரியரில் குந்தியிருந்து உன் சிறு கைகள் என் இடுப்புச் சட்டையைப் பற்றிப் பிடித்தபடி வருகின்றன. போகும் வழியில் உனக்கு வெளிகளில் மேய்ந்து கொண்டிருக்கும் செம்மறி ஆடுகளைக் காட்டினேன். சைக்கிளில் இருந்து இறங்கி அவற்றைப் பார்க்க விரும்பினாய். ஏதோ ஒரு மரநிழலின் கீழ் நின்றோம். பெரும் புதினமாக செம்மறிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாய். அவற்றிற்கு நாய் மாதிரிக் கால்கள் இருப்பதாகச் சொன்னாய். குரைக்காமல் வேறொரு சத்தம் செய்வதாகச் சிரித்தாய். கன



நேரமாக அவ்விடத்திலேயே நின்றாய். உன்னை மறந்து நிற்பதாக நான் நினைத்தேன். என் அறைக்குப் போகலாம் என்று உனக்குப் பட்டபோது நாங்கள் போய்ச் சேர்ந்தோம்.

அந்த அறையில் இருந்த ஒரே தளபாடமான கட்டிலில் நாங்கள் இருவரும் உட்கார்ந் திருந்தோம். உனக்குப் பக்கத்தில் சிறு குப்பைக் கூடையும், எனக்குப் பக்கத்தில் கட்டுக் கட்டாக பழைய தினசரிகளும் இருந்தன. ஒரு கத்திரிக்கோலையும், தாள்கள் சிலவற்றையும் உன்னிடம் கொடுத்து வெட்டி விளையாடச் சொன்னேன். உனக்கோ சரியாக வெட்ட வரவில்லை. நான் வெட்டிக் காட்டினேன். சில உருவங்களை மந்திரக்காரி போல வெட்டினேன். கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாய். அதன்பின் உனக்குக் கத்தரியால் தாறுமாறாக வெட்ட முடிந்தது. நீ வெட்டும் போது கீழே விழுந்த குப்பைகளை உனக்கருகே இருந்த குப்பைக் கூடைக்குள் போடச் சொன்னேன். நீ அவ்வாறே செய்தாய். உனது பக்கம் சுத்தமானது. என்பக்கமாகக் கிடந்த தாள்களையும் போடச் சொன்னேன். மறுத்துவிட்டாய். உனது முகத்தை இறுக்கிக் கொண்டாய். மறுப்பின் காரணத்தைக் எனக்குத் தெரிவிக்கலாமா எனக் கேட்டபோது நான் வெட்டின குப்பையை நான்தான் சுத்தப்படுத்த வேண்டும் எனச் சொன்னாய். உனது காரணத்தை புரிந்து கொண்டதாய்ச் சொன்னதோடு என் தவறுக்கு மன்னிப்பும் கேட்டேன். உனது முகத்தசைகளின் இறுக்கம் சிறிது தளர்ந்தாற் போல இருந்ததாய் இப்போது எனக்குப் பட்டது. மிகுந்த தூக்கம் வருவதாகச் சொன்னாய். சில செக்கன்களில் என்னருகில் அப்படியே நித்திரையாகிப் போனாய்.

அன்றைய பின்னேரம் வழக்கமான கோடைகாலத்துப் பின்னேரங்களுள் ஒன்றாக இருந்தது. நீ உனக்குரிய சாப்பாட்டுத் தட்டை ஏந்தினபடி வீட்டின் முன் புறத்திலிருந்த படிக்கட்டுகளில் போய் அமர்கிறாய். மண்ணிறமும், மென் நீலமும் கலந்த அத்தட்டில் அப்பிளுடைய படமும், வாழைப் பழத்துடைய படமும் வரையப் பட்டிருந்தது. அவ் வரைபடத்துக்கு குறுக்காயும், மறுக்காயும் அரிசியாலான நூடில்ஸ் இழைகள் சிக்கலாகிக் கிடந்தன. அவற்றோடு வட்டமாக வெட்டப்பட்டு அவிக்கப் படாத கரட்டுகளும், பதமான அரை அவியலில் அவரைக் காய்களும், பச்சைத் தக்காளித் துண்டங்களும், சில கறுப்பு ஒலிவம் பழங்களும் கிடந்தன.


நீ உன் விரல்களால் ஒவ்வொரு நூடில் இழையையும் பற்றி வாயில் வைத்து சிறு பாம்பொன்றை உறிஞ்சுவது போல உள்ளிழுத்தபடி என்னைப் பார்க்கிறாய். இப்போதைய கால நிலை மிக ரம்மியமாக இருக்கிற தெல்லா என்று உன்னிடம் பொதுவாகச் சொல்கிறேன். ம்... இன்னும் கொஞ்ச நாளைக்கு இப்படித்தான் இருக்கும் பிறகு மாறிவிடும் என்கிறாய். உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்க “அது அப்படித்தான்“ என்று விஷயத்தை, விறகை முறிப்பது போல முறித்துத் தூரப் போடுகிறாய். இன்றைக்கு மொள்ளைமாரி மாதிரி ஏதோ ஆவேசத்தில் இருக்கிறாய் என்று நினைத்த என் நினைப்புக் கரைவதற்குள் இன்னுமொரு நூடிலை உறிஞ்சி விழுங்கிவிட்டுச் சொல்கிறாய் - சில நாட்களில் பூக்கள் அதிகம் பூக்கும், மரங்கள் பச்சையாகும், வண்ணாத்திப்பூச்சிகள் பறக்கும், சின்னப்பட்சிகள் கூடுகட்டும் என்றும், சில நாட்களில் மரங்கள் மொட்டையாக நிற்கும், முழு நாளுமே கடுங்குளிரடிக்கும் என்றும், சில நாட்களில் மரங்கள் நிறம் மாறி இலைகள் கொட்டும் என்றும் சொன்னாய்.

உனக்கு எந்த மாதிரியான நாள் பிடித்தமானது என்று கேட்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமாய் ஆகாயம் தெரியும் நாட்களில் உனக்கு விருப்பம் என்கிறாய் அதுதான் உன் சாப்பாட்டுத்தட்டிலும் அந்நிறம் இருக்கிறது என்கிறாய். பிறகு நீலவானத்தை விடவும், கடும்நாவல் நிறவானில் வெள்ளி நிறத்து நட்சத்திரங்கள் மின்னும் நாள்தான் உனக்கு விருப்பம் என்கிறாய். அப்படியான வானத்தைப் பார்த்திருக்கிறேனா என்று என்னிடம் கேட்கிறாய். இதுவரை நான் பார்க்கவில்லை. உன்னைப்போலவே நானும் கடும்நாவல் நிறவானில் வெள்ளி நிறத்து நட்சத்திரங்கள் மின்னும் நாளைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறேன் என்றேன். நீ சிரிக்கிறாய். சில வாய்கள் மேலும் சாப்பிட்டுவிட்டு மீண்டும் சிரிக்கிறாய். இரவுகளில் நித்திரை கொள்ளப் போகும் போது கடும்நாவல் நிறவானையும் ஒளிரும் நட்சத்திரங்களையும் நினைத்துக் கொண்டு தூங்கினால் கனவில் அவை வந்து நம்மைக் கு'ஷிப்படுத்தும். கனவில் தான் அது நடக்கும். உண்மையில் அதற்காக நான் காத்திருக்கத் தேவையில்லை என்கிறாய். ஏன் அப்படிச் சொல்கிறாய் என்றேன். அப்படிக் காத்திருப்பவர்கள் முட்டாள்கள் என்றும் அதனால்தான் அவர்கள் தலையில் வெள்ளிகள் தோன்றி கண்கள் பூஞ்சையாகிப் போகின்றன என்றும் என் நரைத்த தலையைப் பார்த்துச் சொன்னாய். □□□

## பெரும்பாம்பு



கூடலின் பிந்தைய அமைதியை
துடைத்தெறிந்து
ஒலிக்கிறது தொலைபேசி

விரல்களால்பற்றி
காதோடு இழைக்கிறேன்
அதன் துளைகள் வழியே
பீறிடுகின்றன எண்ணற்ற பாம்புகள்

நொடிப்பொழுதில்
சட்டைகளை உரித்து
கண்ணியொன்றைப் பின்னுகின்றன
பிளவுபட்ட நாக்குகளால்
உறுப்புக்களைத்
துழாவி ருசிக்கின்றன

என்னுடலெங்கும்
பிசுபிசுப்பான செதில்தடங்கள் பரவ
முட்டையிடவும் குட்டியீனவும்
இடம்தேடித் திரிகின்றன

கலவியுறாத செழித்த பாம்புகள்
என் கருத்த தசைகளின் மேல்
பற்களை அழுத்துகின்றன

விஷத்தில் குளித்த எழுத்துக்கள்
நீலம்பூத்த என் தோலிருந்து
நுரைத்துப் பொங்க

எல்லா பாம்புகளையும்
விழுங்குகின்றேன்.
நானே பெரும்பாம்பாகி

**சுகிர்தராணி (இந்தியா)**



# சர்வதேச பெண்கள் தினம் மார்ச் 8

**றஞ்சி (சுவிஸ்)**

உலகெங்கிலும் அடிமை விலங்கைச் சுமந்திருக்கும் அனைத்துப் பெண்களுக்கும் இத்தினம் அர்த்தமுடையதாக உள்ளது. இன்று உலகெங்கும் பெண்கள் சுரண்டப்பட்டும்,அடக்கப்பட்டும் வருகின்றார்கள். பிற்போக்குத்தனமான சமூகக்கட்டுப்பாடுகளும் மதவா:தங்களும் ஆண்மேலாதிக்கத்துடன் சேர்ந்து பெண்களுக்கே புத்திமதிகளை உதிர்த்து வருகின்றன. ஆனால் பெண்ணுக்கு சமஅந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்று பெண்கள் குரல் கொடுக்க முனையும் போது பெண்கள் ஆணாதிக்க சட்டங்களாலும் சமூகத்தாலும் அடக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கான வாக்குரிமை, சமஉரிமை, சம ஊதியம், பெண்களின் இரண்டாந்தர நிலை, பெண்களை பாலியல்தொழிலில் ஈடுபடுத்தல், வன்முறைகளும் நிர்வாணக்காட்சிகளும் தொலைத்தொடர்புகளில் அதிகரித்து வருதல், போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடுகளில் பெண்கள் பாலியல் வன்முறைகளுக்குட்படல்,சிறுவர்களை பாலியலில் ஈடுபடுத்தல், பெண் சிசுக்கொலை, தேசியவிடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பாதிப்பு,அணுஆயுத எதிர்ப்புஉலகசமாதானம் போன்ற உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கிலும் ஆணாதிக்க கருத்தியலில் மூழ்கியிருப்பவர்களை தட்டி எழுப்பும் நோக்குடனும் போராடும் பெண் இனத்திற்காகவும் இந்த மார்ச் 8 ஆம் திகதியை உலகப் பெண்கள் தினமாக பெண்கள் அமைப்புக்கள் கொண்டாடி வருகின்றன.

பெண்களின் போராட்டம் ஆண்களுக்கு எதிரானதல்ல பெண்களை பாரபட்சமாக நடத்தும் இந்த ஆணாதிக்க சமூக அமைப்பு முறைக்கே எதிரானது.

அத்துடன் எம் மண்ணில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான மனிதவுரிமைமீறல்களுக்கு எதிராகவும் மார்ச் 8ல் சமாதானத்தை முன்னெடுக்க அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியவர்களாகவும் இத்தினத்தில் குரல் கொடுக்க நாம் கடமைப்பாடு உடையவர்களாகிறோம். எமது உணர்வுகளை எமது வெற்றிகளை எமது சோகங்களை எமது ஆற்றல்களை நாம் இரு கரம் நீட்டி வலுப்படுத்துவோம்.



*பொங்கிவரும் சோக*
*ஆற்றிற்கு அணைகட்ட*
*குருதியில் தோய்ந்த*
*கொடியின் கீழ் அணிநடக்க*
*எங்கள் கரங்களை ஒன்றாகப்*
*பிணைத்துக் கொள்வோம்.*



நாம் 2008 இல் காலடி எடுத்து வைத்திருக்கும் இவ்வேளையில் பலருக்கு வருடத்தில் இது ஒரு முக்கிய தினம் என்றே குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுப்புனல்



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் செ. பிறைநிலா கல்வி கற்கின்றார். இவர் கவிதை, கட்டுரை எழுதுவதில் நாட்டம் உள்ளவர். இவரை 'ஜீவநதி' அறிமுகம் செய்து வைப்பதில் பெருமை கொள்கிறது.

## சோகமும் சுகமாய் மாறும்...

இளவேனிற் காலம் ஈந்த
இளகிய மாலை வெயிலில்
இதந்தரும் சூழல் மேவும்
அழகிய அந்திப் பொழுதில்

நுண்ணிய அலைகள் தோன்றும்
நுரைகளை வெளியே தள்ளும்
ரம்மியமான காட்சி...
ரசித்தேன் சிறிது நேரம்!

ஆகாயப் போர்வை போர்த்திப்
பரந்திருந்த கடற் கன்னி
பார்வையிலே நீலமாகி
நீக்கமற நிறைந்திருந்தாள்.

உயர்ந்த நெடு நீள் வானை
அலைக்கரம் கொண்டு தொட்டு
ஆசையுடன் அணைத்திருந்தாள்
தொடுவான எல்லையிலே.

அலையினால் அநர்த்தம் ஆகும்
கதையெலாம் மறந்து நானும்
சிலிர்ப்புடன் சிந்தை அள்ளும்
எழிற் கோல அழகு கண்டேன்.

சோகங்கள் தொலைத்து விட்டு
சோர்வெலாம் நீங்கி நானும்
சோகமற்ற சுகங்களோடு
என்வழி தொடர்ந்தேன்.



# பால் நிலை பாரபட்சம் ஒழியாதவரை பெண்ணிய இலக்குகளை எட்டமுடியாது

**சந்திரகாந்தா முருகானந்தன்**

பால் நிலை அசமத்துவத்தால் இன்றைய நவீன உலகப் பெண்கள் கூடப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். பால் சமத்துவத்தை ஏற்படுத்த, பெண்களை வலுவூட்டினால், இவ்வுலகில் வினைத்திறனான செயற்பாடுகளையும், உச்ச விளைதிறனையும் எட்ட முடியும். உலகை உயர்வடைய வைப்பதில் பெண்களின் வகிபங்கு குறைத்து மதிப்பிடத்தக்கது அல்ல என்பதை ஆணாதிக்கவாதிகள் முதலில் உணர வேண்டும்.

பால்நிலை சமத்துவம் என்பது பெண்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல. அது அவர்களது உரிமை. பால்நிலை பாரபட்சம் நீக்கப்படுவதால் சிறப்படையப் போவது பெண்களின் வாழ்நிலை மட்டுமல்ல, இதற்கு மேலாகப் பல அனுகூலங்களும் அறுவடையாகும். இதனால் குடும்பம், சமூகம், தேசம், உலகம் எனப் பலமுனைகளில் அபிவிருத்தியை எட்ட முடியும். எனவே பெண்கள் சிறப்புற சமவுரிமையுடன் வாழ வலுவூட்டப்பட்டால், ஆக்கபூர்வமாக பல நன்மைகளால் இவ்வுலகும், அடுத்த தலைமுறையும் சிறப்புறும்.

குழந்தைகள் பராமரிப்பிலும், வளர்ப்பிலும் பெண்களின் பங்கே அதிகமாக இருப்பதை மறுக்க முடியாது. எனவே பெண்ணியம் மேம்பாடடையும் போது சிறுவர்களின் அறிவு, ஆரோக்கியம், ஆற்றல் என்பவையும் அபிவிருத்தியடையும். அண்மைக் காலமாகப் பெண்களது அந்தஸ்தில் சில பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்ற போதிலும், இன்றும் பல பெண்கள் பாதாளத்தில் வீழ்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் கோடிக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் பால் நிலை பாரபட்ச நோக்கினால் வறுமையும், நோயும், துன்பமும் மேலோங்கி இருக்கின்றன. பெண்ணிய மேம்பாட்டிற்காக உழைக்கும் மகளிர் அமைப்புகள், பெண்கள் மற்றும் சிறுமியர்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்கின்றன. எனினும் முழுமையான சமத்துவத்தை எட்ட முடியாமல் மரபுக்கத்திகளும் பாரம்பரியத்துவக்குகளும் அச்சுறுத்தி நிற்கின்றன. கலாசாரப் பண்பாட்டு அம்சங்களும், மதங்களின் நடைமுறைகளும் விடுதலைப் பாதையை அடைத்து நிற்கின்றன. சம்பிரதாயங்களும், சடங்குகளும் கழுத்தை நெரிக்கின்றன.

மதங்களைப் பற்றிப் பேசும் போது பெண்ணியவாதிகள் சிந்தித்துச் செயற்பட வேண்டியவர்களாகவே உள்ள நிலையே உள்ளது. மதத்தில் ஊறியவர்கள், அதற்கெதிரான கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. மகளிர் தினத்தில் நான் வழங்கிய செவ்விக்கு பலத்த எதிர்ப்பு. பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து கடித மூலமும், இருவர் நேரில் வந்தும் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். நான் மதங்களுக்கு எதிரானவள் அல்ல. இறை நம்பிக்கை அற்றவளுமல்ல. நடைமுறை வாழ்வில் பெண்களுக்கான பாரபட்சங்களை மட்டுமே குறிப்பிட்டேன்.

பெண்ணியவாத செயலூக்கிகள் பலரின் ஆய்வு விமர்சனங்களில் மதமும் பெண்களும் பற்றிய காத்திரமான ஆய்வு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சிலர் எதிராகவும், சிலர் ஆதரவாகவும் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நிலைப் பாரபட்சத்தினாலும், சமூகக் கட்டமைப்பின் பலமுனை அழுத்தங்களினாலும் பின்தங்கிய நாடுகளில் வாழும் பெண்கள், தமது அடிப்படை உரிமைகளுக்குப் போராட முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள். மேலும் இப்பாரபட்சத்தினால் குடும்பத்துள்ளும், வெளியேயும் பலவகை வன்முறைகளினாலும் தினமும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

எமது பாரம்பரியத்துள், மனைவியைக் கணவன் அடித்துத் துன்புறுத்தினாலும் கூட, அனைத்தையும் சகித்துக் கொண்டு அவனுடனேயே வாழ நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். வன்முறைகளைக் கூட பொறுத்துக் கொண்டு அடிபணிந்து போகாவிட்டால் சமூகம், முழுப் பழியையும் பாதிக்கப்பட்ட பெண்ணிலேயே போட்டு விடுகிறது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டால் கூட, சட்டங்கள் இருந்தாலும் கூட, பல சந்தர்ப்பங்களிலும், அவமானப்பட நேரிடும் என்பதால் சட்டத்தை நாடாமலும் நாடுகின்ற சமயங்களில் கூடச் சாட்சியங்கள் இல்லாமையால் நீதி கிடைக்காமலும் போகின்ற துர்ப்பாக்கிய நிலை!

பெண்ணியம், காலம் காலமாக பாரபட்சத்துடன் ஓர் அடிமை போல் வாழ்ந்த வருகின்ற பெண்ணினத்தின் விடுதலையை நோக்காக செயற்படும் பெண்ணிலை வாதத்தை முன்வைக்கின்ற போதிலும், அடக்குமுறைகள், சுரண்டல்கள் போன்றவற்றிலிருந்து விடுபட முடியாமலே பல பெண்கள் உள்ளனர். விழிப்புணர்வு பெற்ற சமுதாயம் கூட இன்னமும் பெண்ணியத்தை முழுமையாக அங்கீகரிக்கவில்லை.

அனைத்து குடும்ப சமூக தளங்களிலும் ஆண் பெண் இரு பாலாருக்கும் முழுமையான சமத்துவம் ஏற்படுத்தப்பட வேண்டியது இன்றைய தேவையாகும். பெண் விடுதலைக்குத் தடையாக உள்ள சிந்தனைகள், செயற்பாடுகள் என்பவற்றின் நியாயமற்ற தன்மையை ஆணாதிக்கத்தில் மூழ்கியுள்ளவர்கள் உணர்ந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் கூடியான முரண்பாடற்ற போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். பெண் படைக்கப்பட்டதே ஆணுக்கு மகிழ்ச்சி தருவதற்கே என்ற மரபு நிலைப்பட்ட பாரம்பரியமாகத் தொடரும் கோட்பாட்டில் மாற்றம் வேண்டும். ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட அநீதியான, பக்கச் சார்பான கருத்தியல்களில் மாற்றம் காணுதல் காலத்தின் தேவையாகும்.

பெண்ணிய இலக்குகளை எட்ட நினைக்கும் பெண்கள் எல்லாம் வேண்டி நிற்பது. எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதே. பெண்ணியம் பற்றிய பால் பாகுபாடற்ற புரிதலினால்தான் பெண்கள் மட்டுமன்றி, முழு உலகுமே சுபிட்சமாக வாழும் நிலை ஏற்படும். □□□

**அயலகத் தமிழ் இலக்கியம்**

தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக்கழகம் தமிழ்ப்பல்கலைக்கழக நூலகத்தில் அயலகத் தமிழ் இலக்கியப் பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளது. அதனால் அயல்நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் பின்வரும் முகவரிக்கு தங்களது நூல்களின் இரண்டு பிரதிகளை அனுப்பிவைக்குமாறு அந்தனி ஜீவா(ஆசிரியர், கொழுந்து) அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்.

நூல்களை அனுப்ப வேண்டி முகவரி :- *Dr.A.Karthikeyan*
*Prof a .Head*
*Dept. of tamil studies in foreign coumtries*
*Tamil university , Tanjavur 613010*
*South India*



# உண்மை = பெண்மை

**கெகிறாவ ஸஹானா**

அந்த மையித்து வீடு (மரண வீடு) நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆம். தனது மாணவர்களுக்கெல்லாம் இஸ்லாத்தையும், அதன் கொள்கை களையும் தெளிவாக கற்பித்த, இஸ்லாமிய நாகரிகம் பாட விரிவுரையாளர் சுப்யான் தனது நாற்பத்தைந்தாவது வயதில் மாரடைப்பினால் திடீரென காலமாகிவிட்டார்.

மிகச் சிறிய வீடு முன்னும், பின்னும் ஆண்களே அதிகம் கூடியிருந்தார்கள். சுப்யான் ஆசிரியரிடம் கற்றவர்கள்.. கற்றுக் கொண்டிருப்பவர்கள்... சகாக்கள் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள்... அதிகாரிகள்.. எங்கும் ஓரே ஜனத்திரள் அலைமோதிக் கொண்டு இருந்தது. அந்த அலையில் குறிப்பிடத்தக்களவில் நின்று கொண்டிருந்த பெண்கள் கூட்டமோ நெருக்கித் தள்ளி ஒதுக்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

லேசாக நெஞ்சு வலிக்கிறதென்று நேற்றுக் காலை அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிககப்பட்ட சுப்யான், மாலையில் தனது மனைவியுடன் நல்லபடியாக பேசியிருக்கிறார். இன்று அதிகாலை மனைவி ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது கணவரின் ஜனாஸா வைத்தான் (பூதவுடல்) காண முடிந்தது. அவர் தனது மார்க்கத்தை எவ்வாறு படிப்பித்தாரோ அவ்வாறே வாழ முயற்சித்தவர். ஏறக்குறைய வாழ்ந்தும் காட்டியவர். அவரது வேண்டுகோளின்படி உடனே மையித்து அடக்கம் செய்யப்பட ஏற்பாடாகியிருந்தது.

மாலை மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது நேரம். இன்னும் சிறிது நேரத்தில் அஸர் (மாலைநேர) தொழுகைக்கான அதான் (அழைப்பு) ஒலிக்கும். அதற்குள் மையித்தைக் குளிப்பாட்டி கபனிடும் (இறுதியாக அணிவிக்கப்படும் தையலற்ற வெள்ளைத் துணி) வேலைகளைச் செய்தாக வேண்டும்.

அந்தச் சிறிய வீட்டின் முன்ஹோல் ஏறத்தாழ 10 X 10 சதுர அடிகள் அளவே விஸ்தீரணம் கொண்டது. அதன் மத்தியில் போடப்பட்டிருந்த சிறிய பலகைக் கட்டிலின்மீது அவரது ஜனாஸா வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டுக் கிடந்தது.

'பொம்புளைகளுக்கு மைய்யித்தக் காட்ட மாட்டாங்களாம்'' பக்கத்தில் ஒருத்தி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட லத்தீபாவுக்கு தலை வலித்தது. எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறோம்..? கடைசியாக ஒருமுறை Sir இன் முகத்தை பார்த்துவிட்டுப் போவதற்குத்தானே.. இப்போது இப்படிச் சொன்னால்....

அருகிலிருந்த நுஸ்ரத்தின் முகத்தைப் பார்த்தாள் அவள். "பேசாம உள்ளுக்குப் போவோம் நீ வாவேன்" என்றாள் அவள்.

எவ்வளவு இங்கிதமான ஆசிரியர்.. என்ன அருமையாகப் படிப்பிப்பார். சொல்லப்போனால் இன்று அனுராதபுர மாவட்டத்தில் உலவு கின்ற எல்லாப் பட்டதாரிகளுமே அவரிடம் கற்றவர்கள்தான் அல்லவா? அந்த அன்பு, மரியாதை அபிமானம் காரணமாகத்தானே மாத்தளையில் இருந்து மையித்துச் செய்தி கேள்விப்பட்டு ஓடோடி வந்து இருக்கிறோம்...

லத்தீபாவின் சிந்தனைகள் ஒரே திக்கில் சென்று கொண்டு இருந்தன. கால்கள் தொய்ந்து இற்றுவிடுமோ என வலித்தன பெண்கள் கூட்டம் நெஞ்சோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சு முட்டி, மூச்சு விடுவதற்குக் கூட அல்லல்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தச்சிறிய வீட்டைச் சுற்றியிருந்த வேலி ஏற்கனவே கூட்டத்தால் மிதிக்கப்பட்டு சிதிலமாகியிருந்தது. அந்த வேலிக் கட்டைகளின் மீது வயோதிபப் பெண்கள் சிலர் தாளாமல் உட்கார்ந்து கொண்டனர். பெண்கள் கூட்டத்தில் ஒரு அலை வீட்டின் பின்புறமாக உள்நுழைய முண்டியடித்துக்கொண்டு சென்று கொண்டிருந்தது.

'வா நாங்களும் அவங்களோட போவோம் ''நுஸ்ரத் லத்தீபாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு முன்னேறினாள். ஒருவாறாக வீட்டைச்சுற்றி பின் வாசலை அடைந்தார்கள்.

ஏதோ சஞ்சீவனம் கேட்பதற்காக தெய்வத்தின் சந்நிதியில் காத்துக்கிடப்பவர்கள் போன்று அந்தப் பெண்கள் எல்லோரும் வாடி வரண்டு கிடந்தார்கள். தாகத்தால் நாக்கு உலர்ந்து மேலே ஒட்டிக் கொண்டது. ஒவ்வொரு முகத்திலும் சோகம், கவலை, எதிர்பாராத மரணத்தின் அதிர்ச்சி, துயரம்... நிலத்தில் கால்கள் பாவாமல் மிதப்பதே போன்று லத்தீபாவும் நுஸ்ரத்தும் பின்கட்டு தாழ்வாரத்தைத் தாண்டி நடுக்கூடத்தை அடைந்தார்கள்.



முன்ஹோலில் யாரோ ஒரு ஆணின் குரல் உரத்துக் கேட்டது. 'நீங்க எல்லாரும் இப்படி நெருக்கியடிச்சிக்கிட்டு ஆம்புளமையத்தப் பாக்கணும்னு வந்து நிக்கி றீங்களே... இது சரியா? யோசிச்சிப் பாருங்க...'' நிதானமாக, ஆனால் உறுதியாக அக்குரல் ஒலித்தது.

மீண்டும் நுஸ்ரத்தின் முகத்தைப் பார்த்தாள். ஏதோ தவறு செய்கிறோம் என்ற தாழ்வுணர்வு அந்தப் பார்வையில் தொனித்தது.

'இன்னும் கொஞ்ச தூரம் தான். கிட்டப்போய் எப்பிடி ஆவது பாத்துருவோம். வா பேசாம...' நுஸ்ரத் பிடித்திருந்த கைகளை இறுகப் பற்றினாள்.

பத்தடி தூரம் செல்வது பத்து கிலோ மீற்றரைக் கடப்பது போன்று கஷ்டமாக இருந்தது. அந்த சந்தடிக்குள் எதிரேயிருந்த அறையில் சோகமே உருவாக அமர்ந்திருந்த Sir இன் மனைவியையும். மகளையும் கண்டாள் லத்தீபா. Sirஇன் மகளை முன்பு ஒருமுறை கண்ட ஞாபகம். அதை வைத்து Sir இன் மனைவி இவர்தானோ என்று அவளால் ஊகிக்கமுடிந்தது.

Sir எப்பவுமே தனது மனைவியை 'ராசாத்தி' என்றே குறிப்பிடுவார். தனது மனைவிக்கு அவர் அவ்வளவு உயர்ந்த இடம் வழங்கியமை கண்டு மாணவிகள் வியப்படைவார்கள். அந்த 'ராசாத்தி' சுந்தரரூபியாக இருப்பாள் என்று கற்பனையும் செய்வார்கள். ஆனால், லத்தீபாவின் கண்முன்னே தெரிந்தது மிகமிக சுமாரான ஒரு பெண் முகம்.

வந்திருந்த சில பெண்கள் ராசாத்திக்கு ஸலாம் கொடுத்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

Sir இருமி இருமி அந்த இருமலூடே கற்பிக்கும் கோலம திடீரென லத்தீபாவின் கண்முன்னால் வந்தது. ஏறத்தாழ பதினைந்து வருஷங்களுக்கு முன்பே Sir இற்கு தொடர்ச்சியான ஆஸ்த்துமா



இருந்து வந்திருக்கிறது.

இதோ நெருங்கிவிட்டார்கள். வெள்ளைத் துணியால் மூடிய மையித்தின் காலண்டையில் வந்துவிட்டார்கள்.

அவர்களுக்கு முன்பாக சென்று மையத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்த பெண்கள் நெருக்கித் தள்ளிக் கொண்டு மையத்தின் முகத்திரை களைவதற்காகக் காத்துநின்று கொண்டு இருந்தார்கள். நுஸ்ரத்தின் முதுகோடு ஒட்டியபடி நின்று. அவளது கழுத்துக்குமேலே எம்பிப்பார்த்தாள் லத்தீபா.

'எவ்வளவோ சொல்லிட்டேன் நீங்க யாரும் கேக்குற மாதிரியில்ல சரிசரி சுருக்கா பாத்துட்டு இடத்தைக் காலி பண்ணுங்க. இதனால ஒங்களுக்கும் பாவம்ன மய்யித்துக்கும் பாவம்...' மீண்டும் அந்த மனிதர் நிதானமாகவும், உறுதியாகவும் கூறினார்.

திடீரென லத்தீபாவுக்கு பொறிகலங்கினாற் போலிருந்தது.

'அந்தாபார்... Sir முகத்தைக் காட்டுறாங்க.. சுருக்காப்பாரு... நுஸ்ரத் லத்தீபாவை நிமிண்டினாள்.

தனக்குப் பக்கவாட்டில் வெள்ளைத்துணியால் போர்த்திருந்த Sirஇன் கால்களை, பாதங்களை நன்றியுடன் நோக்கின லத்தீபாவின் விழிகள்.

அவளுள் மீண்டும் ஒரு சுழல் தோன்றி புரண்டெழுந்தது. வேண்டாம்.. Sirஇன் முகத்தைப் பார்க்க வேணாம்.. ஆண் மையித்த நெருக்கமான சொந்தமில்லாத பெண்கள் பாக்குறது பாவம்.. எனக்கு எப்பவும் நல்லதையே சொல்லித்தந்த Sirஇற்கு உத்தமனா வாழ்ந்து காட்டிய Sirஇற்கு ஒரு பட்டதாரியா, டிப்ளோமாதாரியா நா உயரக் காரணமா இருந்த Sirஇற்கு நானும் ஏதாவது நன்மை செய்யணுமே....!' பாக்காமலே திரும்பிப் போயிடறது தான் நல்லது...!'' அவளது உள்மனக்குரல் உரத்து ஒலித்தது.

உடனே மறுபுறமாகத் திரும்பலானாள் லத்தீபா.

*****

அந்தக் கல்வி வளநிலையக் கட்டடம் மனித அலைகளால் மோதுண்டு கொண்டிருந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோர்களுமாக அந்த விழா மண்டபத்திலே கூடியிருந்தார்கள். இன்னும் பலர் வந்து கொண்டு இருந்தார்கள்.

மண்டபத்தின் பின்புற உள் அறையில் கல்வி அதிகாரி வீற்றிருந்தார். அவர் தன் முன்னாலிருந்த காகிதக்கட்டுகளை மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்.

இன்று... நல்ல ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் வைபவம். தனது பிரதேசத்தில் சிறந்த தொண்டாற்றிய ஆசிரியர்களுக்கு புள்ளி வழங்கி, அவர்களை கௌரவிக்கும் இந்த விழாவை தனது வருடாந்த செயற்றிட்டமாக அறிவித்திருந்தார் அவர். அதன்படி சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டு இன்று விருது வழங்கப்பட இருக்கிறது. அதைக் காண்பதற்கு சகல ஆசிரியர்களும் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களும் கட்டாயம் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று தனக்குக் கீழுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்திருந்தார் அவர்.

தகுதியான ஒருவர் விடுபட்டிருந்தாலும் பரவாயில்லை, தகுதியற்ற ஒருவர் விருது பெற்றுவிடக் கூடாது என்பதில் அவருக்கு அதீத சிரத்தை. வந்து சேர்ந்த விண்ணப்பங்களைக் கவனமாகப் பரிசீலித்து தனது உதவியாளர்கள் தயாரித்துத்தந்த மனுவை மீள் பரிசீலனை செய்து பல திருத்தங்கள், வெட்டுக் கொத்துகள் இட்டு சிறந்த பத்து ஆசிரியர்களை தனது பிரதேசத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து தெரிந்தெடுத்திருந்தார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கல்வித் திணைக்களத்தினூடாக தனது சுற்றறிககையை அவர் விடுத்திருந்தார். அதன்படி இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகின்ற ஆசிரியர்கள் விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டப்பட்டிருந்தார்கள்.

அந்த சுற்றறிக்கையை ஏற்று ஓரளவான விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. அவற்றையெல்லாம் பார்த்து முடிப்பதற்குள் போதும் என்றாகிவிட்டது அவருக்கு. இதற்கெல்லாம் விண்ணப்பங்களில் காணப்பட்ட குளறுபடிகள்தான் காரணம் என்று சொல்வதற்கில்லை. அவற்றை உள்வாங்கி, ஆராய்ந்து விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்வதில் அவர் மறைமுகமான பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அவர் வேறெந்த கல்வித் தகுதிகளும் இல்லா விட்டாலும் கூட ஒரு கல்வியதி காரியாக தன்னை நியமித்து பணிப்பாளர் என்ற பட்டத்தை அலங்கரிக்கவைத்த அரசாங்கத்தின் அதிகபட்ச விசுவாசி. பலப்பல கல்விகற்ற நிர்வாகத துறையில் பட்டை தீட்டப்பட்ட அனுபவமும் ஆழ்ந்த அறிவும் சான்ற கல்விமான்கள் நிரம்பிய கூட்டங்களின் வாசல் படிகளைக்கூட ஒருபோதும் அவர் மறந்தும் மிதித்ததில்லை. அப்படியிருந்த போதும் அவருக்கு இந்தக் கல்வி அதிகாரி பதவி வாய்த்திருக்கிற தென்றால் அவரது விசுவாசத்தைப் பற்றி கேட்கவா வேண்டும்? அல்லது மறுபுறம் பார்த்தால்.. அவர் எவ்வளவு பெரிய விசுவாசியாக இருந்திருந்தால் இந்தப்பதவி வாய்த்திருக்கும்...!

நேரம் காலை ஒன்பதரையைத் தாண்டிவிட்டிருந்தது. காலை எட்டுமணி என்றால் ஒன்பதுமணி என்பதுதான் நடைமுறைச் சித்தாந்தம். அதிலும் இவர் ஒருபடி மேலேபோய் முப்பது நிமிடங்கள் அதிகமாக எடுத்துக கொண்டபின்னர். உள்வாயிலுக்கூடாக மேடையில் நுழைந்தார்.

மண்டபம் நிரம்பியிருந்தது ஒவ்வொரு தலையும் ஒவ்வொரு சோடிக்கண்களும் அவரது வருகையையே ஆவலாக எதிர் பார்த்திருந்தாற்போன்று...

மேடையில் ஆளுங்கட்சி அதிகாரிகள் அமர்ந்திருந்தார்கள். மண்டபத்தின் முன்வரிசைகளில் மாணவர்கள் வெள்ளைச்சீருடையில் கலகலத்துக்கொண்டிருந்தார்கள். அனைவர் மத்தியிலும் திடீரென ஒரு நிசப்தம். இவர் தனது குள்ளமான தடித்த உருவத்திற்குள்ளே வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்ட கம்பீரத்தை வரவழைத்துக்கொள்ள...

'சிறந்த ஆசிரியமணிகளுக்கெல்லாம் முடிசூடி கௌரவிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்த- அதற்காக அல்லும் பகலும் பாடுபட்ட எமது கல்வி அதிகாரி இதோ வந்துவிடடார்...' அறிவிப்பாளர் உற்சாகமாக வரவேற்புப் பத்திரம் வழங்க தனது இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

அப்போதுதான் கவனித்தார். தனக்கு எதிர் வரிசையில், மண்டபத்தில், பள்ளி மாணவர்களுடன் ஒருத்தியாக வெண் மல்லிகை மொட்டுகள் மத்தியில் பளீரெனத் துலங்கும் ஒற்றை ரோஜாவைப்போல வெண்ணிறச் சேலையில் வந்திருப்பது... ஆஹா... யார் அது? கஸ்தூரி அல்லவா?

மாணவர்களையும் என்னையும் எக்காரணத்தினாலும் பிரிக்கமுடியாது எனுமாப்போல தான் வழக்கமாக உடுத்துகின்ற வெள்ளை நிறச்சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, கருகருவென்ற கண்ணாடிக் கூடாக சாந்தமான தழுவும் பார்வையோடு அந்தப் பெண்மணி அமர்ந்திருந்தாள். இதுவென்றோ சிறந்த ஆசிரியருக்



குரிய முத்திரை! ஓர் ஆசிரியன் மாணவனோடு மாணவனாக கலக்காமல் எப்படி நல்லாசிரியனாக உயர்வது, கஸ்தூரி டீச்சரைப் பற்றித் தான் இந்த உலகமே சொல்லுமே! கல்வியில் அவர் ஏறிய படிகள் எத்தனை.. நிர்வாகத்தில், ஆளுமையில், அன்பில், அர்ப் பணிப்பில் அவர் எத்தனை கோணங்களில் மிளிர்ந்தார்...? அதுமட்டுமா இலக்கியத்தையும் விடவில்லையே.. அவர் எழுதிக்கு வித்த நூல்கள் எத்தனை.. சிந்தனையைத் தூண்டிய உரைகள் எத்தனையெத்தனை! ஆனால் இந்தக் கல்வி அதிகாரியின் சிறந்த ஆசிரியர் பட்டியலில் அவரது பெயர் இல்லையே.. ஏன்?

குறுகுறுக்கும் விழிகளைத் தாழ்த்திக் கொண்ட கல்வியதிகாரி ஏதோ ஓர் உள்ளுணர்வு உந்த மீண்டும் நிமிர்ந்து பார்க்கிறார்.


கஸ்தூரி டீச்சர் அப்படியே தான் இப்போதும் உட்கார்ந்திருக் கிறாள். அவரது பார்வை சாட்சாத் பாரதியின் பெண்மைத் தெய்வத்தின் பார்வையை ஒத்திருப் பதுபோன்று அனுபவக் கல்வியின் சுடரும் உண்மையின் தெளிவும் முன்னரை விட அதிக மதிகம் ஜொலிக் கின்றாற்போல கல்வி யதிகாரிக்குத் தோன்று கின்றது. அந்தக் கணத்தில் நெஞ்சை ஏதோ... தாளமுடியாமல் மறுபடியும் தனது கண்களைத் தாழ்த்திக் கொள்கிறார். □□□


# கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

எமது சங்கச் சேவைகள் :



நுகர்ச்சிச் சேவை
தரமான நூலக சேவை
கிராமிய வங்கிச் சேவை
புலமைப்பரிசில் வழங்கல்
வாடகைச் சேவைகள்



தரமான திரைப்படக்காட்சிக்கூடாக புதிய ரசனையை ஏற்படுத்துதல்
எரிபொருள் சேவை
விவசாய சேவை
நூல்வெளியீடும் விமர்சனங்களும்
கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றம்
"சங்கம் செய்தி" மாதாந்த வெளியீடு.

தொலைபேசி இலக்கம் :- 0122263263
0212264474
0212264725

தொலைநகல் 0212263263

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மாற்றம்

*சௌந்தரி (அவுஸ்திரேலியா)*

கலாசாரம் பண்பாடு என்பதுபற்றி எல்லாம் எழுதி குழப்பும் எண்ணம் என்னிடம் இல்லை. ஆனால் எனது மனதில் இருக்கின்ற கேள்விகளுக்காக இந்தக் கட்டுரையை எழுதுகின்றேன்.

கலாசாரம் பண்பாடு என்ற கேள்வி எழுகின்ற போதெல்லாம் பெண்களைப் பற்றிய விடயங்கள்தான் அலசப்படுகின்றன. பெண்களின் நடை உடை பாவனைகளை உள்ளடக்கியதுதான் கலாசாரமா? அப்படி என்றால் எமது விருப்பங்களுக்கு அப்பால் கால மாற்றத்திற்கு ஏற்றவாறு கலாசாரமும் மாற்றம் அடைந்துதானே ஆகவேண்டும்?

குறிப்பாக வெளிநாடுகளில் பல்லின மக்களோடு சேர்ந்து வாழ்கின்றபோது அவர்களது கலாசார வழக்கங்களின் தாக்கம் எமக்குள்ளும் மாற்றங்களை ஏற்படுத்துவதை தவிர்க்கமுடியாது போய்விடும். இப்படியான மாற்றங்களை புலம்பெயர் சமுதாயத்தில் வெளிப்படையாக காணக்கூடியதாக இருக்கின்றது. உலகமயமாதல் காரணமாக இலங்கை, இந்தியா போன்ற பாரம்பரியத்தை இறுக்கமாக கடைப்பிடிப்பதாக கூறிக்கொள்ளும் நாடுகளிலும் கலாசார மாற்றங்கள் தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகின்றது.

காலத்தின் கட்டாயம் காரணமாக மக்களிடையே ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் காலம் காலமாக காவிக்கொண்டுவந்த சில எண்ணக் கருக்களை இன்றும் மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் இருப்பது வேதனையான விடயம்தான். முக்கியமாக பெண்கள் விடயத்தில் காணும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

எந்த ஓர் கொள்கையும், நடை உடை பாவனையும் அந்தக் காலகட்டத்தில் சரியானதாக இருக்கிறதா அல்லது பொருத்தமானதாக இருக்கிறதா என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமேதவிர நிலமானிய சமூக அமைப்பில் பழக்கமாக, வழக்கமாக, எழுதாத சட்டமாக வந்தவற்றை எல்லாம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வற்புறுத்துவது எந்தவிதத்திலும் சரியாகாது.

சில சந்தர்ப்பங்களில் கால மாற்றத்துடன் சிலர் கடைப்பிடிக்கின்ற மாற்றங்கள் குழப்பமானதாகவும் முரணானதாகவும்கூட இருக்கலாம். அந்த மாற்றங்கள் தவறானவை என்று அவர்கள் உணரும்போது தங்கள் முடிவுகளை மீள்பார்த்து சரிப்படுத்தும் சுதந்திரத்தையும் அவர்களிடமே விட்டுவிடவேண்டும். முரணான மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டதால் ஏற்பட்ட வலியையும் அனுபவித்து அதிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கான காலத்தையும் கொடுக்கவேண்டும்.

பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் நிறை குறைகள் நிறைந்தவர்கள்தான். இது இருபாலாருக்கும் பொதுவான ஓர் நியதி. ஆனால் பொதுவாக பெண்களின் குறைகள்தான் அதிக விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் உட்படுகின்றது. பெண்களை ஓர் தனியான இனமாக அதுவும் இரண்டாந்தர இனமாக கருதுவதால்தான் அவர்களது சிந்தனைகளும் எண்ணங்களும் சரிசமமாக மதிக்கப்படுவதில்லை. குறை நிறைகளை கணிப்பிடும் அளவுகோல்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாக இருக்கவேண்டுமே தவிர பால் வேறுபாடுகளினால் உருவான இயல்புகளை வைத்து அவை கணிக்கப்படக்கூடாது. வித்தியாசமான உடல் அமைப்புகளை கொண்ட ஒரே காரணத்திற்காக வித்தியாசமான அளவுகோல்களை பாவிப்பது எப்படி பொருந்தும்.



குறிப்பாக பெண்களின் மனம் மற்றும் உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை இவை பெண்களுக்கான பிரச்சனைகள் என்று பிரித்துப் பார்க்காமல் பொதுவான ஓர் பிரச்சனையாக, ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படக்கூடிய ஓர் பிரச்சனையாக பார்க்கும் நிலை வளரவேண்டும். அதே நேரம் பெண்களுக்கே உரிய சேவைமனப்பான்மை, தியாகம் போன்ற குணங்களோடு தனிமனிதனுக்குரிய கௌரவம், மரியாதை என்பனவும் கேள்விக்கு உட்படுத்தப் படாதவாறு பெண்களும் இருக்கவேண்டும்.

எமது சமூக அமைப்பானது ஆண்களை முதன்மைப் படுத்தும் சமுதாயமாக தோற்றம் கொண்டுள்ளது. அங்கே தொக்கி நிற்கும் பெண்களைப்பற்றிய மதிப்பீடுகள் இன்றும் தாழ்வாகத்தான் இருக்கின்றது. பெண்ணின் உடல் உள ரீதியான மதிப்பீடுகள் அவைபற்றிய முடிவுகள் பெண்களின் வசம் இல்லாமல் ஆண்களின் ஆளுமையினால் தீர்மானிக்கப்படுவதும் இன்றும் முற்றாக மாறவில்லை. இதுதான் பெண்ணுக்கான எல்லை என்று ஓர் ஆண் கோடு போடும் போது அங்கே ஓர் எதிர்ப்புணர்வையே உருவாக்குகின்றான்.

ஆணென்றாலும் பெண்ணென்றாலும் அவர்களுக்கான எல்லைகளை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஆபத்துக்கள்பற்றி அறிவுறுத்தலாம் ஆனால் தடைகளைப் போடுவது முறையான தீர்வாகாது.

பெண்களின் வாழ்க்கை என்பது என்ன? அந்த வாழ்க்கைக்குள் அடங்கி நிற்கும் அதிசயங்கள், ஆபத்துகள், அனர்த்தங்கள், ஆளுமைகள் என்பவை எவை? அவை பற்றிய சிந்தனைகள் முதலில் பெண்களிடம் இருந்துதான் ஆரம்பமாகவேண்டும். சமூகத்தின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை உணரும் வண்ணம் பெண்களது சிந்தனைகள் வளரவேண்டும்.

தனக்குத்தானே சுயமாக விதித்துள்ள தடைகளையும் சமூகம் பெண்கள்மீது வலிந்து விதித்துள்ள தடைகளையும் மீறி தங்களது எண்ணங்களை, திறமைகளை, சிந்தனைகளை வெளிப்படுத்த பெண்கள் முன்வரவேண்டும். இதற்கு சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் உதவவேண்டும். □□

# பாசம்

எத்தனை பேர்
வெறுத்தாலும்
அப்பாக்கள்
மகளை வெறுப்பதில்லை
மகன்களுக்கோ
அப்பாவை பிடிப்பதில்லை
ஆனால்
ஆளாகிவிட்டால்
அப்பாவுக்கு
அவன் நண்பன்
ஆனால் மகளே – நீ
எனக்கு

எப்போதும் இனிக்கும்
வெல்லம்
ஆண் குழந்தைகள்
அம்மா தோளை விடாத
குரங்குக் குட்டிகள்
பெண் குழந்தைகளோ
அப்பா முகம் விரைவில்
அறிந்து
அம்மா மடியிலிருந்து
அப்பா தோளுக்குத்
தாவும்
அணில் பிள்ளைகள்

- மைத்திரேயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்விடுதலை பற்றி இவர்கள்...

**1) திருமதி விஜயலக்சுமி சுகுமார்** ***(அதிபர், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)***

பெண்விடுதலை என்பது பல்வேறு நாடுகளில் பல வேறு கோணங்களில் நோக்கப்படுகின்றது. இதுசம்பந்தமாக ஆய்வு செய்வதென்பது ஒரு பரந்த செயற்பாடாகும் 'பெண்விடுதலை' என்ற கூற்றை பார்ப்பதற்கு கேட்பதற்கு, வாசிப்பதற்கே பெண்கள் கூச்சப்படவேண்டும். பெண்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா விடுதலை பெறுவதற்கு? பெண்கள் அடக்கி ஆளப்படாமல் இருப்பதற்கு எல்லோருமே சேர்ந்து செயற்பட வேண்டும். நாட்டின் சனத்தொகையில் ஆணும் பெண்ணும் சேர்ந்துள்ளனர். வீட்டில் ஆண் பெண் சேர்ந்து வாழ்கின்றோம். ஆட்சியில் ஆணும் பெண்ணும் பெரிய பதவிகளில் உள்ளனர். கணவன்-மனைவி, சகோதரன்-சகோதரி, ஆண் உத்தியோகத்தர்-பெண் உத்தியோகத்தர் என்ற வகையில் பெண் எந்த வகையிலும் குறைந்தவளல்லவே. பெண் இந்தச் சமூகத்தின் உறுப்பினர். இன்று பெண்கள் கல்வி, பொருளாதாரம், உயர் பதவிகளில் ஆணுக்குச் சரிநிகராக முன்னேறியுள்ளனர். ஒரு சில சமூகங்களில் பெண்கள் உரிமையற்றவர்கள், குழந்தைப் பேற்றுக்குரியவர்கள், அடங்கி இருக்க வேண்டியவர்கள் என்று எண்ணும் போக்கு உண்டு என்றாலும் இதனை யெல்லாம் விழிப்புணர்வுள்ள இன்றைய பெண்கள் மிகச் சுலபமாக நாசூக்காக முறியடித்து வாழத் தெரிந்துள்ளனர் என்றே கூறலாம். எனவே பெண்கள் விடுதலை அடைந்து விட்டனர் என்றும் பாரதியிடமிருந்து நல்ல பெண்விடுதலைக் கருத்துக்களை நாங்கள் பெற்றிருந்தாலும் பாரதியிடமிருந்து நாங்கள் நீண்டபயணம் செய்து மிகத் தூரத்துக்கு வந்த வீரப் பெண்களாக வாழ்வோமாக.

**2) திருமதி. வாசுகி அரவிந்தன்** ***(ஆசிரியர், யா/மெதடிஸ்தபெண்கள் உயர்தரப் பாடசாலை)***

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தளைக்குமாம்' என்று அன்று பாரதி கூறிய பெண்கள் பற்றிய தீர்க்கதரிசனமான செய்தி இன்றைய உலகையே அதிரவைக்கும் பல தளங்களில் கால் பதித்துள்ளது. உலகில் அனைத்துத் தளங்களிலும் பெண்ணின் அறிவியல் சிந்தனைகளின் தாக்கம் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற சமூகக் கருத்தை தீயிலிட்டுப் பொசுக்கியுள்ளது. மேலும் இன்றைய பெண் சமூகம் கல்வி அறிவால் ஆற்றலால் சமூகத்தின் உன்னதமான இடத்தை எட்டிப்பிடித்து விட்டது. வரலாற்றையே மாற்றி யமைத்து விட்ட இன்றைய பெண்ணினம் புறநானூறு கூறிய

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக்கடனே' என்ற ஈன்று புறந்தருதல் என்ற தனது கடமைக்கும் அப்பால் சென்று பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இன்று பெண் அரசியல், சமூகம், விளையாட்டு, விஞ்ஞானம், அறிவியல் என்று பல்வேறு துறைகளிலும் தனது சாதனைகளையும், திறமைகளையும் நிகழ்த்திய பெருமை மிகு செயல்கள் இன்றைய உலகம் காணும் நிஜங்கள். இந்தவகையில் ஆணாதிக்க சமூகம் ஏற்படுத்திய அடக்கு முறைகளையும் வென்று பெணகள் இன்று பாரதியின் கனவை



நனவாக்கி மேலும் தனது பார்வையை விசாலமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

எனவே இன்றைய பெண்ணினம் அனைத்து சக்திகளையும் வென்று இன்னும் பல மேன்மைகளையும் சாதனைகளையும் பெற்று வெற்றித் திருநடைபோட வேண்டும்.

**3) திருமதி. ஆனந்தராணி நாகேந்திரன்** ***( எழுத்தாளர், ஆசிரியர் யா/பொன்னம்பல வித்தியாலயம்)***

விடுதலை என்பது அடக்குமுறைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளுதல் எனப் பொருள்படும். இங்கு பெண்விடுதலை எனும் போது பெண் என்பவள் யாரால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறாள்? எவற்றிலிருந்து அவளுக்கு விடுதலை கொடுக்க வேண்டும் என்ற வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன.

உண்மையில் மனித சமூகத்தில் யாரும் யாரையும் அடக்கியாள முடியாது. அடக்கியாளக்கூடாது. பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்ற நாம் நம்முள் வேறுபட்டு நிற்பது, மனிதநிலை தளர்வடைந்து குரங்குநிலைக்குச் செல்வதற்கு ஒப்பாகும்.

பெண் என்பவள் இன்றைய உலகில் சகல வேலைகளிலும் ஆணுக்கு நிகராக தனது சக்தியை நிலைநாட்டி வருகிறாள். எனவே இன்றைய பெண்களுக்கு வேண்டியது விடுதலை அல்ல சமத்துவமே. பால்நிலைச் சமத்துவம் என்பதே அதுவாகும்.

பெண் என்பவள் மகளாய், மனைவியாய், மருமகளாய், தாயாய், மாமியாய் பல படிமுறைப் பதவிகளை வகிக்கிறாள். அவ்வாறான ஒவ்வொரு நிலைகளிலும் பலவகையான பொறுப்புக்களும் கடமைகளும் அவள்மேல் சுமத்தப்படுகின்றன. அத்தகைய பொறுப்புக்கள் பகிரப்பட்டு எல்லோரும் தத்தமது கடமைகளைச் செய்வார்களேயானால் பால் நிலைச்சமத்துவம் எய்தப்படும் என்பது உறுதி.

நூற்றுக்கும் மேற்பட்ட நாவல்கள், இருநூறுக்கும் அதிகமான சிறுகதைகள், நாடகங்கள், அறிவியற்கட்டுரைகள், பொதுஅறிவு, பத்தி எழுத்துக்கள், கேள்வி-பதில்கள், திரைப்படம், வானொலி என தனது பல்பரிமாண ஆளுமையால் தமிழ் இலக்கிய வரலாற்றில் அரைநூற்றாண்டுக்கும் மேலாக கோலோச்சிய எழுத்துலக ஜாம்பவான் **சுஜாதா** அவர்களின் மறைவிற்கு 'ஜீவநதி' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழுலகு நன்கறிந்த ஈழத்தின் படைப்பாளி **செ.யோகநாதன்** அண்மையில் காலமானார். தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்தில் ஈழத்து சிறுகதை உலகிற்கு காத்திரமான பங்களிப்பை நல்கிய செ.யோ.ஈழத்து சிறுகதை படைப்பாளிகளை 'இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதைகள் தொகுப்பு மூலமாக தமிழகத்தில் அறிமுகம் செய்துவைத்த பெருமைக்குரியவர் சிறுகதை, குறுநாவல், நாவல், குழந்தை இலக்கியம், கட்டுரை, திரைப்படம் என பன்முனை ஆர்வலராய் விளங்கிய அன்னாரின் இழப்புக்கு 'ஜீவநதி' தனது இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) அனுராதபுர மண்ணில் இருந்து வெளிவரும் இருமாத இலக்கிய இதழான 'படிகள்' சஞ்சிகையின் ஆசிரியரும் கவிஞருமாகிய எல். வசீம் அக்ரம் அவர்களது 'மண்ணில் துழாவும் மனது' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் அனுராதபுரம் ஸாகிரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கலாபூஷணம் அன்பு ஜவகர்ஷா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் அறிமுக உரையை ஊடகவியலாளரும், எழுத்தாளருமான எம்.சி. றஸ்மின் அவர்களும் ஆய்வுரைகளை கெக்கிறாவ ஸஹானா, நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர்களும் நிகழ்த்தினர். விழா நிகழ்வுகளை நிஸ்வான் மொஹமட் தொகுத்து வழங்கினார். இந்நூல் தென் கிழக்கு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடாக வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2) யாழ் இலக்கிய வட்டத்தின் புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 03.02.08 நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. அத்துடன் அன்றைய நிகழ்வு ஈழத்தின் மூத்த படைப்பாளியும் யாழ். இலக்கிய வட்டத் தலைவருமாகிய செங்கை ஆழியான் அவர்களின் 67 ஆவது பிறந்தநாள் நிகழ்வாகவும் அமைந்து இருந்தது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை குருமகா சந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்திரு மரியாம்பிள்ளை ஆகியோரும் வாழ்த்துரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ் முன்னாள் பேராயர் ஜெபநேசன் ஆகியோரும் நல்கினர்.

" செங்கை ஆழியானின் ஆக்க இலக்கியங்களுக்கான தளம் பற்றிய ஒரு பார்வை" என்ற தொனிப்பொருளில் கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன் அவர்களும் "மனிதத்தை தேடல்" என்ற தொனிப் பொருளில் செபஸ்ரியன் (அ.ம.தி) அடிகளும் சிறப்புரை ஆற்றினர்.

செங்கை ஆழியான் அவர்கள் தனது பதிலுரையின் போது யாழ். இலக்கிய வட்டத்தின் புத்தாண்டுப் பரிசாக யாழ். இலக்கிய வட்டத்தால் வெளியீடு செய்யப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய தொகுதியை (சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியானது) இலக்கிய ஆர்வலர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதாக தெரிவித்தார்.

3) 'அவை' கலை இலக்கிய வட்டத்தின் 13 ஆவது ஒன்று கூடல் அதன் அமைப்பாளர் கலாநிதி த.கலாமணி அவர்களின் இல்லமான அல்வாய் கலைஅகத்தில் 20.01.08 இடம் பெற்றது. ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவர் தலைமை ஏற்கும் 'அவை' ஒன்று கூடல் நிகழ்வுக்கு இம்முறை சு.குணேஸ்வரன் தலைமை வகித்தார். சிறப்பு நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக தமிழ் சிறப்பு கற்கைநெறி மாணவனும், எழுத்தாளருமான த.அஜந்தகுமார் 'இலக்கியமும் மன எழுச்சியும்' எனும் விடயம் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

இதனைத்தொடர்ந்து அவை உறுப்பினர்களான வே.சிவராஜலிங்கம், கொற்றை பி.கிருஸ்ணானந்தன் ஆகியோர் பதவி உயர்வு பெற்றமைக்காக, பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பாராட்டுரைகளை எழுத்தாளர் தெணியான், செ.சதானந்தன், சின்னராஜன், ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை ஜீவநதி இணையாசிரியர் சி.விமலன் ஆற்றினார்.



4) தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் உள்ள பொது மண்டபத்தில் சமூகஜோதி த.பரராஜசிங்கம் அவர்கள் தலைமையில் இலக்கிய கலைநிகழ்வு நடைபெற்றது.

சிதம்பரநாதன் (பொன்னர்), சி.சசீவன் ஆகியோரது ஏற்பாட்டில் நீர்வேலி வணிகர்களின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி அவர்கள் கலந்து கொண்டார்.

சிறப்பு நிகழ்வுகளாக முதலில் அகில இலங்கை அமுத சுரபி கலாமன்றம் நடத்திய பட்டிமன்றம் யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆர்மோனியச் சக்கரவர்த்தி ஜோன் கவாசும் அவர்தம் புதல்வரும் இணைந்து நடாத்திய ஆர்மோனிய கச்சேரி இடம் பெற்றது. நிகழ்வின் நிறைவாக கலா பூஷணம். சிதம்பரநாதன் அண்ணாவியம் செய்து மேடையேற்றிய 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகம் இடம்பெற்றது. ஆசிரியர்களான விமலநாதன், விஜயபாஸ்கர் போன்ற முன்னணி இசைநாடக கலைஞர்களுடன் இளையோரும் சேர்ந்து இதனை ஆற்றுகைப்படுத்தினர்.

5) "முதுசொமாக" சிறுகதைதொகுப்பின் ஆசிரியரும் எழுத்தாளருமான இராஜேஸ் கண்ணன் அவர்களின் கவிதை நூலான 'போர்வைக்குள் வாழ்வு' வெளியீட்டு விழா 13.01.2008 அன்று தேவரையாளி இந்துக்கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

சீ.சாந்தநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அவர்களும், சிறப்பு விருந்தினராக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான் அவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறப்புரையை எழுத்தாளர் தெணியான் அவர்களும் அறிமுக உரையை 'கவிதையின் மொழி' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களும் நிகழ்த்தினர். நூல் நயப்புரைகளை 'படித்ததில் பிடித்த ஒன்று' என்ற ரீதியில் 'ஜீவநதி' இணை ஆசிரியர் சி.விமலன், புதிய தரிசனம்' ஆசிரியர் த.அஜந்தகுமார், "ஏகலைவன்"ஆசிரியர் இ.சு.முரளிதரன், சு.குணேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்தனர்.

6) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மலரான 'திருவுடையாள்' வெளியீட்டுவிழா நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் 20.02.08 அன்று பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் கலந்து கொள்ள இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் வருகை தரவில்லை. இருந்த போதிலும் தனது ஆசிச் செய்தியினை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசாமி அவர்கள் மூலம் அனுப்பி இருந்தார். நூல் அறிமுக உரையை மலர் இணை ஆசிரியரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய கி.நடராஜா அவர்களும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களும் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரைகளை மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் ஆகியோரும் நிகழ்த்தினர். ஏற்புரையை மலர் இணை ஆசிரியரும் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி த.கலாமணி அவர்கள் நிகழ்த்தினர். □□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் பெண்கள்

**அண்ணல் காந்திஜி**


பெண்ணை அகிம்சையின் அவதாரம். என்று நான் சொன்னதுண்டு அகிம்சையென்றால் எல்லையற்ற அன்பு. அதற்கு எவ்வளவு துன்பம் வரினும் ஏற்கும் ஆற்றல் உண்டு. ஆடவனைப் பெற்றெடுக்கும் தாயான பெண்ணைத்தவிர வேறு எவருக்கும் இவ்வாற்றல் இருக்குமா?

பெண்கள் உரிமை விஷயத்தில் நான் சிறிதும் விட்டுக்கொடுக்க மாட்டேன் ஆடவருக்கு இல்லாத சட்ட சம்பந்தமான சிரமங்கள் எதுவும் பெண்களுக்கு இருக்கக் கூடாதென்பது என் அபிப்பிராயம். நான் பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளையும் சரிசமமாகவே நடத்துவேன். பெண்ணை தியாகமே உருவானவளென்று நான் கருதுகிறேன். வாழ்க்கையில் உள்ள தூயவை. மதம் பற்றியவை ஆகிய அனைத்திற்கும் உறைவிடம் பெண்கள்.

மணமென்பது ஒரு புனிதமான காரியம். அது அவ்வாறே இருக்க வேண்டும். மணமாக விருக்கும் பெண்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தம் வாழ்வின் கூட்டாளியைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களும் கலந்து கொள்ளவும். தாம் தொடங்கப் போகும் வாழ்க்கையின் விளைவுகளை அறிந்திருக்கவும் வேண்டும்.

மனைவி கணவனது ஒப்பந்த அடிமையல்ல. அவள் அவனது தோழி அவனுக்கு உதவுபவள். அவன் இன்ப துன்பங்கள் அனைத்தையும் சமமாய்ப் பகிர்ந்து கொள்பவள். அவனைப் போலவே தன் வாழ்க்கை முறையைத் தீர்மானித்துக் கொள்ள உரிமையுள்ளவள்.

இந்தியா பிளவுபடுத்த முடியாத ஒரே நாடென்றால் தமக்குள் மணம் செய்து கொள்ளாமலும் சேர்ந்து அமர்ந்து உணவு கொள்ளாமலும் உள்ள எண்ணற்ற சிறிதும் பெரிதுமான நாமாக சிருஷ்டித்துக் கொண்ட சாதிகளும் பிரிவுகளும் இங்கே இருத்தல் கூடாது. இந்தக் கொடிய வழக்கங்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டும். மணம் புரிந்து கொள்வதற்கு வரதட்சணை வேண்டுமென்பது கேட்கும் பையன் தான் பெற்ற கல்வியை அவமதிப்பிற்குள்ளாக்குவதோடு நம் நாட்டையும் பெண் இனத்தையுமே அவமதிப்பவனாகிறான். பெண்கள் மேல் நாட்டினருக்குப் பொருத்தமான பழக்க வழக்கங்களைப் பின்பற்றிப் பயனில்லை. எமது சுழலுக்கும் இந்தியாவின் இயல்புக்கும் பொருத்தமான முறைகளைக் கையாள வேண்டும். அவர்கள் நம் பண்பாட்டின் சிறந்த அம்சங்களை விடாது பற்றிப் பாதுகாப்பதில் கலங்காத உறுதியும் திடமும் காட்ட வேண்டும். *(நன்றி - தாமரை)*□□□




**நூல் அறிமுகம்**

*நூல்* :- மண்ணில் துழாவும் மனது.
*ஆசிரியர்* :- எல்.வஸீம் அக்ரம்
*வெளியீடு* :- தமிழ்ச் சங்கம்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்.
ஒலுவிற் பூங்கா, ஒலுவில்
*விலை* :- 90/=



# பேசும் இதயங்கள்

1) ஜீவநதி சஞ்சிகையின் தொடர் வரவு கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். மிகவும் இக்கட்டான யுத்த சூழலிலும் தமிழ் மணம் பரப்பி தவழ்ந்தோடும் ஜீவநதியை கண்டு பிரமிப்பு எய்துகின்றோம். எதிர்காலத்தில் ஜீவநதி புதிய எழுச்சிமிகு சமுதாயத்தை உருவாக்கும் என்ற எதிர்பார்ப்புடனும் நம்பிக்கை உடனும் அனேக வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

"புத்துணர்வோடு புதுமைகள் பல செய்தே
இத்தரணியில் செந்தமிழ் மணம் பரப்பி - வித்தகர்
விரும்பிடவே வேறுபாடுகளெல்லாமகற்றி ஜீவநதியே - நீ
சீருடன் சிறந்து வளர்க

**மேருகிரி (நீர்வேலி)**

2) தமிழருவி தித்திக்கும் தேனருவி பல்சுவை
தருகின்ற இருதிங்கள் ஏடாயிலங்கும் ஜீவநதியே
அமிழ் தினிய இலக்கியங்கள் கவிதையுடன் சிறுகதைகள்
ஆய்வுவழி கட்டுரைகள் அதனூடே அறிமுகங்கள்
தமிழ் மொழிச் சிறப்புக்கள் செவ்விகள் நூலறிமுகமும்
தரமுயர்ந்த விடயங்கள் தாங்குகின்ற கலையகமே
தமிழ் கூறும் நல்லுலகம் பயன்பெறவே பரந்தெங்கும்
தனித்துவமாய் பாய்கின்ற ஜீவநதியே வாழி வாழி!

வருமென்று காத்திருப்பேன் வாஞ்சையுடன் வாசிப்பேன்
கருத்திலுயர் அம்சங்கள் காண்கையிலே பூரிப்பேன்!
பொருத்தமான ஆசான்களை போற்றியிங்கே மதிக்கின்றேன்!
விருத்தி பல காணவேண்டி வாழ்த்தியிங்கே நிறைகின்றேன்.

**வதிரி கண - எதிர்வீரசிங்கம்**

3) நதியே! உனது இலக்கிய வெள்ளத்தில் மூழ்கி இன்பங்கண்டிருக்கும் ரசிகர்களில் நானும் ஒருவன். இலக்கிய பயிர்களுக்கு இலக்கிய நீர் ஊற்றி இலக்கிய விருட்சம் உருவாக்கும் நதியே உன் இலக்கிய சேவை வாழ்க.

**மு.ரதீஸ் (அல்வாய்)**

4) இலக்கிய பணியாற்றும் இளைஞர்களாகிய உங்களுக்கு எம்போன்ற வாசகர்களின் மனமுவந்த பாராட்டுகள்

**ம.பா.மகாலிங்கசிவம் (யாழ்ப்பாணம்)**

5) உங்களது அயராத முயற்சிக்கு பாராட்டுகள்.

**Dr.M.K முருகானந்தன் (Colombo)**

6) பொங்கலை மையமாகக் கொண்டு பாஸ்கரினால் வரையப்பட்ட ஒவியம் மிகவும் அற்புதமாக ஜீவநதிக்கு அழகு கொடுத்தது. அத்துடன் ஊடகத்துறை பற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கட்டுரை ஊடகத்துறை வளர்ச்சி பற்றிய அறிவை மக்களுக்கு வழங்குவதாக அமைந்தது. தாட்சாயணியின் 'கெடுபிடி' சிறுகதை இன்று யாழ். மக்கள் Convey ஆல்படும் அவலத்தை மிகவும் தத்துரூபமாக சொல்கின்றது. புனைபெயர்களில் எழுதுவதனால் ஏற்படும் சிக்கல்கள் பற்றிய ரஞ்சியின் கட்டுரை புனைபெயரில் எழுதுவதால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு விடையளிப்பதாக காணப்பட்டது. மற்றும் கவிதைகள் கதைகள் கட்டுரைகள் தரமானவையே. ஜீவநதியே நீ தரத்தில் இருந்து குறையாது சிறந்த இலக்கியப் பயணத்தை தொடருவாய் என எதிர் பார்க்கின்றோம்.

**கைலாசநாதன் (Colombo)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இச்சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களால் சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NSB Pension+ 55 வயதைத் தாண்டிய வாழ்வுக்கு



ජාතික ඉතිරිකිරීමේ බැංකුව
தேசிய சேமிப்பு வங்கி
National Savings Bank
NSB

**NSB பென்சன் + என்றால் என்ன?**

* தேசியச் சேமிப்பு வங்கியால் அறிமுகப்படுத்தப்படும் பொதுமக்களுக்கான தனித்துவமான நன்மையைக்கொண்டுவரும் ஓய்வூதியத்திட்டம்

**NSB பென்சன் + திட்டத்தில் சேரக்கூடியவர்கள் யாவர்?**

* 16 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு இலங்கைப்பிரஜையும் பென்சன் + திட்டத்தில் சேரலாம்.

**NSB பென்சன் + திட்டத்தில் முதலிடுவது எவ்வாறு?**

* இது நெகிழ்வுள்ள ஒரு திட்டம். உங்கள் வசதிக்கேற்பத் தாங்கள் விரும்பும் எந்தத் தொகையையும் முதலீடு செய்யலாம்.

**பெருந் தொகைப் பணத்தை நான் முதலிட முடியுமா?**

* ஆம், நிச்சயமாக முடியும். போனஸ் அல்லது உபகாரக் கொடுப்பனவு அல்லது அதிர்ஷ்டமாகக் கிடைத்த பணம் எதையும் முதலீடு செய்யலாம்.

**நான் 55 வயதை எய்தும் வரை பெறக்கூடிய நன்மைகள் எவை?**

* மிகக் குறைந்த பங்களிப்பாக ரூபா 50, 000/- தங்களுக்கு இருப்பின், 05 வருடங்களுக்கு ஒருமுறை, தீவிர நோய்கள் தொடர்பான மருத்துவக் கட்டணங்களுக்கு மீளளிப்புகளை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
* வைப்புத்தொகை அதிகமாயின் ஆகக்கூடியது ரூபா 1 மில்லியன் வரை மீளளிப்புக்கள் பெறமுடியும்.
* தேசேவ வழங்கும் வீடமைப்புக் கடன்களுக்கு விதிக்கப்படும் பெல்முறைக் கட்டணங்களுக்கு 50% கழிவு வழங்கப்படும்.
* ஊழியர்கள் சார்பாகத் தொழில் தருநர்களால் பங்களிப்புகள் செய்யப்படுமாயின், குழுமச் சுபதேவைக் கடன்களுக்கான வட்டிக்கு 1% கழிவு வழங்கப்படும்.
* கிரமமாக மாதாந்தம் பங்களிப்புகளைச் செய்பவர்களுக்கு கஷ்டமின்றி வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**வேறு ஏதாகினும் நன்மைகள்?**

* புதிய வாடிக்கையாளர்களுக்கு, வங்கியின் ஆரம்பவைப்புடன் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பித்துக் கொடுக்கப்படும். ஏனைய சேமிப்புக் கணக்கு வைப்பாளர்கள் தற்போது அனுபவிக்கும் அனைத்துச் சலுகைகளுக்கும் இச் சேமிப்புக் கணக்கு வைப்பாளர்களும் உரித்துடையவர்களாக இருப்பார்கள்.
* NSB பென்சன் + திட்டத்திற்கு நியமனத்தர்களை ஏற்படுத்தும் வசதியுண்டு.
* சந்தை வீதங்களுக்கும் இணைவாகக் கவர்ச்சிகரமான பெறுகை வீதங்களுக்கு உரித்துப்பெறுவீர்கள்.
* இத்திட்டத்தின் முதல் 50, 000/- அங்கத்தினர்களுக்கும் பின்வருபவை வழங்கப்படும்.

-ரூபா 500/-இற்கான வங்கியின் பங்களிப்பும்

-ரூபா 500/- பெறுமதியான விசேட ரிதிரேகச் சான்றிதழ்களும்

அனைத்து ரிதிரேகாச் சான்றிதழ்களும் பெறுமதிமிக்க பரிசுகளை வழங்கும் காலாண்டுச் சீட்டிழுப்புகளுக்கு உரித்துப் பெறும்.

* வெளிநாட்டு நாணயங்களில் பணம் அனுப்பும் அங்கத்தினர்கள் அனைவருக்கும் ரூபா 1 000/- பெறுமதியான விசேட ரிதிரேகாச் சான்றிதழ்கள் பரிசளிக்கப்படும்.
* வைப்புகள் செய்வதற்கும் மீதிகளைச் சரிபார்ப்பதற்கும் இலவசமாக ATM அட்டைகள் வழங்கப்படும்.

**55 வயதை எய்திய பின்னர், நான் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வது எவ்வாறு?**

* 55 வயதை எய்தியவுடன் நீங்கள் ஓய்வூதியம் பெற உரித்துடையவர்கள் ஆவீர்கள். நீங்கள் விரும்பின் 60 வயது வரை அதனைப் பிற்போடவும் முடியும்.

ஓய்வூதியம் பின்வரும் முறைகளில் அமையும்.

-ஆயுட்கால ஓய்வூதியமும் நியமனத்தர் ஓய்வூதியமும் மீகுதிப் பெறுமதியின் நன்மைகளைப் பெறுவதும் அல்லது

-ஓய்வூதியத்தின் மீகுதிப் பெறுமதிகள் எதுவுமின்றிக் குறிக்கப்பட்ட காலத்திற்குக் காலத்திற்குக் காலம் ஓய்வூதியம் பெறுவது அல்லது

-கணக்கு மீதி முழுவதையும் ஒரே தொகையாகப் பெறுவது அல்லது

-மேலேயுள்ள தேர்வுகள் எவற்றையும் கூட்டாகப் பெறுவது தேர்வு உங்களுடையது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org